# அறிதுயில்

ISSN: 1710 - 6133 ARITUYIL

2005 March தொகுதி: 2 இதழ்: 1









J.DERRIDA

www.tamilarangam.net

www.tamilarangam.net

# தெரிதாவுடன் ஓர் உரையாடல்


இந்த மொழிபெயர்ப்பு 1995 ஆவது ஆண்டு மார்ச் மாதம் வெளி வந்த **"படர்க்கை"** இதழில் வெளிவந்திருக்கிறது.

குறிப்பு, ஆங்கில வழி தமிழில்: **S.V. ர:பேல்**

**குறிப்பு:**

பிற்கால அமைப்பியலின் மூலாதாரச் சிந்தனைக்குச் சொந்தக்காரரான தெரிதா (Jacques Derida) 1931 இல் அல்ஜீரியாவில் பிறந்தவர். ஐரோப்பா, அமெரிக்கா முழுவதும் அறியப்பட்டவர். ஓர் யூத குடும்ப பின்ணணியில் பிறந்தவர். இயல் நிகழ்வுவாதப் (Phenomenology) பின்னணியில் தனது மெய்ப்பொருளியல் சிந்தனையை வளர்த்த இவருக்கு எட்மண்ட் ஹீஸ்ஸேர்ல் (Edmund Husserl) மார்டீன் ஹைடெக்கர் (Martin Heidegger) ஆகியோரின் மெய்யியல் போக்கு மிகப் பிடித்தொன்று.

கட்டுடைத்தல் (deconstruction) எனும் ஒரு தடாலடியான முறையை/ வாசிப்பினை/ சிந்தனைப் போக்கை வழங்கி மேற்கின் மெய்ப்பொருளியல் போக்கில் திருப்புமுனையானவர். வேறுபாடு (Differance) எனும் சொல்லின் மூலப் பொருண்மையைத் தள்ளிப் போடுதல் (அதனால்) பொருண்மை வேறுபடுதல் என்பதனை வலியுறுத்தி "காலம் கடந்த பொருண்மை", "பொருண்மையின் இருத்தல்" என்று கருத்தாக்கங்களை முன்வைத்தவர். ஒலிமைய வாதப்போக்கிலிருந்து பனுவல் வாசிப்பு முறை இதனால் திசை திரும்பியது. குறிப்பிடத்தக்க நூல்களில் (of Grammatology). (காயத்திரி ஸ்பிவக் ஆல் மொழி பெயர்க்கப்பட்டது). Writing and Differance போன்றவை முக்கியமானவை.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதுவரை தமிழில் சில குறியியல் நூல்கள் வந்திருக்கின்றன. கட்டுடைத்தலைத் தமிழில் பயன் படுத்தியிருக்கிறார்கள். இவையெல்லாம் சரிதானா எனப் பார்ப்பதற்கு அவைகளை தெரிதாவின் வாயினாலேயே மதிப்பீடு செய்வதற்கும் இம் மொழிபெயர்ப்பு உதவும் என நினைக்கின்றேன். இதுவரை தமிழில் வந்த நூல்களும் கூட பல ஆங்கில நூல்களின் சுருக்கிய மொழிபெயர்ப்புக்களேயாயினும் அவை எந்த ஆங்கில நூல்கள் என்பது ராணுவ ரகசியம் போல் காக்கப்படும். மேலும் மூலத்தையும் ஒரு போதும் மொழி பெயர்க்கமாட்டார்கள். வேறு வடிவங்களையே மொழி பெயர்ப்பார்கள்.

இச் செயல்கள் அனைத்தையும் இன்றைய கல்வி நிறுவனங்கள் உட்பட்ட அனைத்து நிறுவனங்களையும், அனைத்து பனுவல்களையும் தரம்பிரிக்க கட்டுடைத்தல் ஒரு கருவியாகும் என்பதில் ஐயமில்லை. இது 1981 இல் கேர்னெ (Richard Kearney) என்பவரால் பாரிசில் வைத்து எடுக்கப்பட்ட பேட்டியின் சில பகுதிகளே. கேள்விகள் விடப்பட்டுள்ளன. கேள்விகள் இல்லாமலேயே போதுமான புரிதலுக்கு இடமிருக்கிறது. இதனைப் படிக்கும் போது கட்டுடைத்தல், பிற்கால அமைப்பியல், குறியியல் தொடர்பான பல சந்தேகங்கள் எழும், (தமிழ்நாட்டிலேயே எங்களுக்குத்தான் முதன் முதலில் தெரியுமாக்கும் என அந்த நான்கு ஜாம்பவான்கள் தவிர பிறருக்கு) அச் சந்தேகங்களை கேள்விகளாக எழுதினால் அவற்றுக்கு பதிலளிக்க இந்த இதழில் தொடர்ந்து வாய்ப்பு வழங்குவதாக ஆசிரியர் குழு அனுமதி அளித்துள்ளது. எனவே எழுதலாம். இது இவற்றைக் கற்றுக் கொள்ள விரும்புபவர்களுக்காகவே. விதண்டா வாதம் பண்ணுபவர்களுக்கல்ல. அறிவையும் (ஆங்கில) மொழியையும் அதிகாரத்தின் வழிகளாக /கைக்கொள்ளும் தமிழ் /தமிழர் மரபிலிருந்து ஓர் மாறுதலுக்காக இம் முயற்சியை முன்னெடுக்கிறோம். கூடுமானவரை மூலங்களிலிருந்து மேற்கோள்கள் வழியாக பதில் இருக்குமாறு பார்த்துக்கொள்ளப்படும்.

பேட்டி : Richard Kearney. Dialogues. 1984

## அரசியலுக்கும் கட்டுரைகளுக்குமான தொடர்பு

நடைமுறையில் இருந்து கொண்டிருக்கும் அரசியல் செயல்பாடுகளுடனும் அரசியல் சந்தேகங்களுடனும் (Codes) கட்டுடைத்தலை நேரடியாக தொடர்பு படுத்துவதில் ஒரு போதும் வெற்றியடையவில்லை என்பதை ஒத்துக் கொண்டேயாக வேண்டும். சங்கேதமாகக் கூடிய சில சூழல்களில் குறிப்பிட்ட ஏதாவது ஓர் அரசியல் நிலைப்பாட்டை எடுத்தேயாகவேண்டிய வேளைகள் எனக்கும் வந்திருக்கின்றன. இவை பெரும்பாலும் பிரெஞ்சு பல்கலை தொடர்பான சூழல்களே. ஆனால் அப்படியொரு அரசியல் நிலைப்பாட்டை எடுக்க வைக்க எனக்குக் கிடைப்பதாக இருந்த சந்தேகங்கள் கட்டுடைத்தலின் தீவிரத்தன்மைக்குப் போதுமானவையாக இல்லை. மொழி பெயர்க்க /கட்டுடைக்கப் போதுமானளவு இல்லாத அரசியல் சந்தேகங்களும், பிற சூழ்நிலைகளுமே கட்டுடைத்தல் அரசியலுக்கு எதிரானது எனும் எண்ணத்தை பலரிடம் தற்போது உருவாக்கியுள்ளது. அல்லது கட்டுடைத்தல் அரசியலற்றது எனும் எண்ணத்தை வழங்கியுள்ளது. ஆனால் அரசியல் சந்தேகங்கள், அரசியல் கலைச் சொற்கள் ஆகிய அனைத்துமே அவை இடது சாரி தோற்றமுடையவையாயினும் சரி, வலது சாரி தோற்றமுடையவையானாலும் சரி, அடிப்படையில் மெய்யியல் சார்ந்தே இருக்கின்றன. எனவேதான் இத்தகைய எண்ணம் இன்னும் நிலைபெற்றிருக்கிறது.

## பெண்ணியமும் கட்டுடைத்தலும்

பாலியல் வேறுபாடுகள் குறித்த நம் புரிந்து கொள்ளுதல்களில் திருப்பு முனைத்திரிபுகள் (Radical Mutations) நிகழ்கின்றதை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம் என்பது குறித்து யாருக்கும் ஐயமேயிருக்காது என நான் எண்ணுகின்றேன். குறியொலி மையமாவதத்தை/தினுடைய (Phalocentrism) கட்டுடைத்தல் என்பது, இலக்கியத்தில் நவீனத்துவம் போன்றும், உளவியலில் ஏற்பட்ட எழுச்சி போன்றும் எடுத்துவரப்பட்டதேயாகும்.

மெய்யியல், இலக்கியம் ஆகியவற்றின் வழியான "பெண்மை"[1] எனும் இக்கண்டுபிடிப்புக்கள், பொருண்மையை காண்பதற்கான நம் தேடுதலில் ஏற்பட்ட ஓர் ஆழமான திரிபின் குணங்குறிகளேயாகும்.

இதையே கட்டுடைத்தல் பதிவு செய்ய முயன்றது. பெண்களுக்கு வழங்கப்படும் சட்ட, அரசியல் அங்கீகாரம் வழியான அந்தஸ்த்துகளும் கூட இவ் வகையினவே.

நான் (பெண்) "விடுதலை" குறித்த இச் சூழலில் [2] பேசத் தயங்குகிறேன். ஏனெனில் ஆண்கள் அடைந்தளவு பெண்கள் "விடுதலை அடைந்து விட்டார்கள்" என நான் நம்பவில்லை. அவர்கள் உண்மையில் பல பழைய சமூக - அரசியல் சூழ்நிலைகளில் இனியும் "அடிமைகளாக" இருக்கப்போவதில்லை. ஆனால் இந்தப் புதிய சூழ்நிலைகளில் கூட ஆணைவிடப் பெண்கள் முழுமையாக சுதந்திரமானவர்களாயிருகக் முடியாது.

நமது குறியொலிமையவாதப் பண்பாட்டினில் உள்ள வேர் புடுங்கப்பட்ட பெண்மைத் தன்மையின் பாரிய கட்டுடைத்தலுக்கான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முக்கியத்துவத்தை வலியுறுத்துவதற்கு ஒருவருக்கு அரசியல் விடுதலை தவிர "மற்றைய மொழி / பிறமொழி" [3] என்ற ஒன்று வேண்டியிருக்கும். இந்தப் பெண்மையின் திரிபினை வரலாற்று அல்லது அரசியல் வளர்ச்சி நிலை என்று சொல்வதை விட ஒரு இயக்கம் என அழைக்கவே விரும்புகின்றேன். வரலாற்று வளர்ச்சி நிலை என்பது குறித்துப் பேசுவதற்கு நான் எப்போதும் தயங்குவேன்.

## எது கட்டுடைத்தல்

நானும் பிற கட்டுடைப்பாளர்களும் என்ன செய்கிறோம் என்பது குறித்து பல தப்பான விளக்கமளிப்புக்கள் இருந்து கொண்டிருக்கின்றன.

உசாவுதலிற்குத் துணை நிற்பதே கட்டுடைத்தல் எனப் பரிந்துரைப்பது முழுமையான தவறாகும். கட்டுடைத்தல் என்பது, எப்போதும் "மொழியின் மற்றைய" தன்மையுடன் ஆழமான ஈடுபாடுடையது. நாம் மொழியில் சிறைப்படுத்தப்பட்டிருக்கிறோம். அல்லது மொழியைத் தாண்டி ஒன்றுமேயில்லை எனப் பிரகடனப்படுத்துவதே எனது பணி என்பது போன்று என்னை விமர்சிக்கும் விமர்சகர்களைக் குறித்து நான் ஒரு போதும் ஆச்சரியப்பட்டதில்லை. (இவர்கள் உண்மையில் எனது நிலைப்பாட்டிற்கு) [4] சரியெதிரானதையே[5] சொல்கிறார்கள். இவையெல்லாவற்றிற்கும் மேலாக ஒலி மையவாதத்தின் விமர்சனமென்பது "மொழியின் மற்றைய" தன்மையையும், "மற்றயதையும்" தேடுவதேயாகும். கட்டுடைத்தல் பற்றிய விமர்சனக் கருத்துரைகளும், படிப்புக்களும் ஒவ்வொரு கிழமையும் எனக்கு வந்து கிடைக்கின்றன. மொழியைத் தாண்டி வேறொன்றுமில்லை. அதாவது நாம் மொழியில் அமிழ்ந்து கிடக்கின்றோம். மற்றும் இதைப் போன்ற பிற மூடத்தனங்களையும் சொல்லும் பிற்கால - அமைப்பியல்காரர்கள் என்று தம்மை அழைத்துக் கொள்வோரிடமிருந்தே இவை வருகின்றன. உண்மையில் மரபான கோட்பாடுகள் கருதுவதை விடவும் உசாவுதல் பற்றிய கேள்வி மிகவும் அதிகமான சிக்கலானது என்பதையே கட்டுடைத்தல் காண்பிக்க முயல்கிறது. மேலும் நமது "உசாவுதல்" எனும் சொல் "மற்றையதைக்" குறிப்பிட்டுக் காட்டுவதற்குப் போதுமானதா என்ற கேள்வியையும் கட்டுடைத்தல் வைக்கிறது.

மொழியைத் தாண்டியதும், மொழியைக் கட்டுப்படுத்துவதுமான "மற்றையது" உசாவுதல் அல்ல என்பது சாதாரணமாகப் பார்க்கும் போது புரியும். மொழியியலாளர்கள் தற்செயலாக இச்சொல்லுடன் இணைத்து விட்டதே இந்தத் தொடர்பாகும். எந்தவித விழுமியங்களும் இன்றி மொழியைத் தாண்டி ஒன்றுமேயில்லை என்று (தனிப்பட்ட ஒவ்வொருவரின் பல்வேறு நோக்கங்களுக்காக) சொல்ல வேண்டாம். அமெரிக்க ஐக்கிய மாநிலங்களிலும் சரி, ஏன் பிரான்சிலும் கூட கட்டுடைத்தல் சூன்யவாதத்தின் (Nihilism)கருவி எனவும் அபத்தத்தின் உச்சம் எனவும், இடு குறித்தனத்தின் விளையாட்டுக்கள் மீளச் செல்லுதல் எனவும் விளக்கமளிப்பது குறித்து நான் வருந்துகின்றேன். கேள்விக்குள்ளாவதையும், விவாதிப்பதையும் விரும்பாத ஒரு சிலரே குறிகளின் (குறிப்பீடு - "Signifiants") ஒருங்கிணைவுடன் விளையாடும் சதுரங்கம் போன்றது கட்டுடைத்தல் என்று முன்வைக்கின்றனர். இத்தவறான விளக்கமளிப்பு வெறுமனே எளிமைப்படுத்துதல் மட்டுமல்ல. இது சில குறிப்பான நிறுவனப் பின்னணிகளின் - அரசியல்களின் விருப்பில் தோன்றும் (நோய்) அறிகுறியாகும். அவற்றிற்கான முறை வரும்பொது இந்த விருப்புகள் கூட கட்டுடைக்கப்படவேண்டும். நான் சூன்யவாதம் என்ற அடையாளத்தை முழுவதும் மறுக்கிறேன். கட்டுடைத்தல், இன்மையுடன் சேர்ந்த ஒன்றல்ல, மாறாக "மற்றையதை" நோக்கி போகின்ற வெளிப்படைத் தன்மையான ஒன்றே.

## கட்டுடைத்தல் இலக்கியத் திறனாய்வில் செய்யும் பணி

கட்டுடைத்தல் அப்படியே ஒரு இலக்கியக் கோட்பாடாகச் செயல்படுமா என்பது குறித்து என்னால் உறுதியாகச் சொல்லமுடியாது. நான், வாசிப்பு முறைகளினுடைய எண்ணங்கள் (Idea) பற்றி எச்சரிக்கையுடையவன். வாசிக்கப்படும் குறிப்பிட்ட பனுவலினாலேதான் வாசிப்பினுடைய விதிகள் தீர்மானிக்கப்படுகின்றன. அதற்காக நாம் பனுவலைச் சாந்திருக்கிறோம் என்பது பொருளல்ல. அல்லது நாம் பனுவலை பிரதிநிதித்துவப் படுத்துகிறோம்: செயப் பாட்டு நிலை சார்ந்து மீளச் சொல்கிறோம் என்பதுமல்ல. ஒரு பனுவல் ஓரளவு வன்முறையைத் வெளித் [6]தந்தபோதும் அதனுடைய பொருத்தப்பாட்டுக்கு நாம் உண்மையுடையவர்களாயிருக்க வேண்டும் என்பதையே இது பொருள் தருகிறது.

இப்பொருத்தப்பாடு ஒவ்வொரு பனுவலுக்கும் வேறுபடும். ஆகவே ஒருவரால் ஓர் பொதுவான வாசிப்புக்கான முறையை பரித்துரைக்கமுடியாது. ஆகவே இவ்வகையில் கட்டுடைத்தல் ஒரு முறைமையாகாது. அல்லது நான் உணர்ந்து கொண்டபடி கட்டுடைத்தலின் அடிப்படைச் செயல்பாட்டினால் இலக்கியத்துக்கு எதையும் வழங்கமுடியாது. பனுவலுக்கான நம் அறிவுத் தோற்றவியலில், திறனாய்வு சார் பங்களிப்புக்களை உண்மையில் இது வழங்கவே செய்கிறது. மெய்யியல், கோட்பாட்டு முன் முடிவுகளை வெளிச்சத்துக்குக் கொணர்வதன் மூலம் வரலாற்றுத் திறனாய்வு (Historical Criticism), புதிய திறனாய்வு (New Criticism), சோசலிச இயல்பியல் (Realism), உருவவியல் (Formalism) போன்ற ஒவ்வொரு திறனாய்வு முறைகளும் செய்வதுபோல கட்டுடைத்தலும் செய்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏன் நாம் ஒரு இலக்கியப் பனுவலை வேறெந்த மாதிரியும் அல்லாது ஓர் குறிப்பிட்ட மாதிரியாகவே வாசிக்கிறோம் என்று கட்டுடைத்தல் கேள்வி கேட்கிறது. உதாரணமாக புதிய திறனாய்வு, அந்தப் பனுவலை வாசிப்பதற்குரிய முறையல்ல என்று கட்டுடைத்தல் காண்பிக்கிறது. சில குறிப்பிட்ட பல்கலைக்கழக நிறுவனங்களால் கட்டுடைத்தல் ஓர் வழிபாட்டு முறைபோல் கைக்கொள்ளப்படினும், அதுவும் பிறவழிகளுள் ஒன்றே.

சில பல்கலைக் கழகங்களும், பண்பாட்டு நிறுவனங்களும் பொருண்மையின் ஒட்டுமொத்த விற்பனையாளர்கள், பரப்புவோர், பாதுகாவலர் போன்று வழங்கப்படாத அதிகாரத்தை எப்படி கையிலெடுத்துக் கொண்டன எனும் கேள்வியையும் கட்டுடைத்தல் இவ்வணுகுமுறையினால் வழங்குகின்றது. சுருக்கமாகச் சொன்னால் "மொழி"யாக (Language) இலக்கியத்தை அணுகுவதன் மூலம் எப்படி முற்று முழுதாக இலக்கியத்தை படிப்பது என்று மட்டும் கட்டுடைத்தல் நமக்குக் கற்பிக்கவில்லை: மாறாக "வேறுபாடுகளின்" (Differance) வழியாகவும் பரவிச் சிதறியிருக்கும் தன்மை வழியாகவும் குறிப்பீட்டாக்கச் சுவடுகளின் சிக்கலான விளையாட்டுக்கள் வழியாகவும் பொருண்மையினுடைய உற்பத்தியைச் சுட்டிக்காட்டுகிறது.

பொதுவாகவே இலக்கியப் பனுவல்களின் மீது கவிந்து படியும் நிறுவனமயமாக்கப்பட்ட சில திறனாய்வு முறைகளின் மறைவான மெய்ப்பொருளியல், அரசியல் முன் முடிபுகளை அறிந்து அவற்றின் மீது வினா எழுப்புவதற்கு கட்டுடைத்தல் நம்மை வசதியுடையதாக்குகிறது. ஒவ்வொரு கல்வி கற்பிக்கும் நிறுவனங்களையும்/ளுக்கும் சவால்விடும் ஏதோ ஒன்றும் கட்டுடைத்தலினுள்ளேயிருக்கிறது. இது வெறுமனே அந்நிறுவனங்களைச் சிதைப்பதற்கான ஓர் முன்னறிவிப்பல்ல. மாறாக எந்தவொரு நிறுவனமயமான இலக்கிய வாசிப்பு முறைகளையும் நாம் எடுத்தாளும் போது நாம் என்ன செய்துகொண்டிருக்கிறோம் என்ற விழிப்புணர்வைத் தருவதே இதன் பணி அல்லாவிடில் நாம், கட்டுடைத்தல் என்பதே தன்னளவில் ஓர் இலக்கியப் பனுவல் தான் ஓர் இலக்கிய வடிவம் தான்: பிற பனுவலைப்போல படிக்கப்படவேண்டியதுதான்: வேறு பலவித விளக்கமளிப்புக்களுக்கு இடமளிக்கக்கூடிய ஒரு வித விளக்கமளிப்புத்தான் என்பதையெல்லாம் மறந்துவிடுவோம்.

யாரேனும் ஒரே வேளையில் கட்டுடைத்தல் பேரார்வமூட்டக்கூடியது என்றும் பேரெளிதானது என்றும் கூறக் கூடும். கட்டுடைத்தல் அதனை இலக்கியப் பனுவல்களுடன் சரி சமனாக வைப்பதால் பேரார்வமூட்டக்கூடியதே. அதே வேளை கட்டுடைத்தல் ஒரு விதமான பனுவல் விளக்கமளிப்பு மட்டுமே என்பதனால் பேரெளிதானதாயும் உள்ளது. புலமையின் /ஆதிக்கத்தின் மையப்படுத்தப்பட்ட அதிகாரமாயல்லாத ஒரு மொழியில் எழுதப்பட்டதும் இலக்கிய மொழியின் மீதும் அதனை விஞ்சியும் ஏதும் சிறப்பான கருவி மொழியைக் (Metalanguage)கொண்டிருக்காததுமே கட்டுடைக்கப்பட்ட பனுவல்.

## தன்னிலையும் (Subject) கட்டுடைத்தலும்

பனுவலில் இருக்கும் தன்னிலை ஒழிக்கப்பட வேண்டும் என நான் ஒரு போதும் சொன்னது கிடையாது. நான் அப்படிச் சொன்னதாக எண்ணிக் கொள்பவர்கள் கவலைப்பட வேண்டியதில்லை. தன்னிலை கட்டுடைக்கப்பட வேண்டும் என்பதையே நான் சொல்கிறேன். தன்னிலையைக் கட்டுடைத்தலுக்குள்ளாக வேண்டும் என்று சொல்லும் போது அதன் இருத்தலையே அழிக்கவேண்டுமென்பது அதன் பொருளல்ல. தன்னிலைத் தன்மையின் (Subjectivity) நோக்கச் செயல்கள் அல்லது பலன்களாக உள்ள தன்னிலைகளும் உள்ளன. இது மறக்கமுடியாத மெய்மையாகும். இப்படி எடுத்துக் கொள்வதனால் தன்னிலை என்ன சொல்கிறது என்பதே, தன்னிலையைக் குறிப்பது என்றும் சொல்லிவிட முடியாது. தன்னிலை ஒரு கருவிமொழியில் (Metalinnistics) சாரமோ, அடையாளமோ அல்ல. சுய இருப்பினுடைய (நான் சிந்திப்பதால் நான் இருக்கிறேன் என்பது போன்ற ஓர்) தூய நிலையே அது. இது எப்போதும் மொழியில் பதிக்கப்பெற்றுள்ளது. ஆகவே எனது பணி தன்னிலையை சிதைப்பதில்லை. அதன் நிலையை மீள் சூழமைவுறுத்த முயற்சிப்பதேயாகும்.

ஒரு பனுவலைக் கட்டுடைப்பது என்பது அது எப்படி "ஆசை"(desire)யாக செயற்படுகிறது என்பதை வெளிக்காட்டுவதாகும். மொழியின் ஆசைக்கு ஏற்ப தன்னை வெளிப்படையாக வைத்துக் கொள்ளாமல் ஒருவரால் வாசிக்க மடியாது. பனுவலின் மீது ஓரளவேனும் விருப்பு இன்றி எந்த ஒரு வாசிப்பும் சாத்தியமல்ல ஒவ்வொரு வாசிப்பிலும் பனுவலுக்கும் வாசகனுக்கும் இடையே கையோடு கை சேர்ந்த உறவுண்டு. வாசகனின் "ஆசைக்கும்" (Desire) பனுவலின் ஆசைக்குமிடையே ஓர் ஒருங்கிணைவு உண்டு. இதுதான் (வாசக) இன்பம். (இலக்கிய வாசிப்பில் வரும் இன்பம் ) ஓர் வறண்ட அறிவு வாழித்தனமே கட்டுடைத்தல் என அடிக்கடி காட்டப்படும் பொய்யுரைக்குச் சரியெதிர் நிலையில் உள்ளதாகவே இது இருக்கிறது.

### அடிக் குறிப்புக்கள்:

1. "நீங்கள் சொன்ன பெண்மை" என பேட்டியானரை தெரிதா சுட்டுவார். (Feminine)
2. பிரெஞ்சுச் சூழல்
3. மற்றைய மொழி / பிற மொழி என்பதால் ஒரு மொழியின் உள்ளார்ந்த பொருண்மைகளை கொணர்வு குறிக்கப் படுகிறது எனக் குறிப்பாகச் சொல்லலாம். (மொ-ர்)

தொடர்ச்சி 28ஆவது பக்கம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

# இயல் விருது சாதி அரசியலின் முழுவடிவம்

கற்சுறா

கனடாவின் இலக்கியத்தோட்டம் இதுவரையில் நான்கு பேருக்கு விருது வழங்கியிருக்கிறது. முதலாவதாக சுந்தரராமசாமிக்கும் இரண்டாவது கே. கணேசுக்கும் மூன்றாவதாக வெங்கட் சாமிநாதனுக்கும் வழங்கியிருந்தது. இம்முறை தனது விருதினை லண்டனில் வசிக்கும் பத்மநாப ஐயருக்குக் கொடுப்பதாக கனடா இலக்கியத்தோட்டம் அறிவித்துள்ளது.

இந்த விருது கடந்தகாலங்களில் இலக்கிய சேவையில் ஈடுபட்ட இலக்கியவாதிகளுக்கு வழங்கப்படுவதாக இலக்கியத்தோட்டம் அறிவித்திருக்கிறது. கனடா இலக்கியத்தோட்டமும் ரொரண்டோ பல்கலைக் கழகமும் இணைந்து விருதினை வழங்குவதாக அறிவித்தாலும் இதில் யாரெல்லாம் ஈடுபாடு கொண்டிருக்கிறார்கள்? எதனடிப்படையில் இவ்விருது பெறுபவர்கள் தெரிவு செய்யப்படுகிறார்கள்? என்ற கேள்விகளுக்கு விடை கனடாவில் இருக்கின்ற அநேகமான இலக்கிய நண்பர்களுக்குத் தெரியாமல் இருக்கிறது. காலம் மார்ச் 2005 இதழில் அ.முத்துலிங்கத்தின் நேர்காணலில் கனடாத் தமிழிலக்கியத் தோட்டத்தில் உங்கள் பங்கு என்ன என்று கேக்கப்பட்டதற்கு மதிப்பிற்குரிய அ.முத்துலிங்கம் அவர்கள் மழுப்பு மழுப்புவென்று மழுப்பி தான் அதற்குள் இல்லை அல்லது இருக்கிறேன் என்று எதையும் சொல்லாமல் தப்பித்துள்ளார். (கேட்கப்பட்ட கேள்வியில் அவரக்கும் இலக்கியத்தோட்டத்திற்கும் ஏதோ இருக்குது என்னது மட்டும் நமக்கு தெரிகிறது.)



விருது என்ற ஒரு அங்கீகாரம் இலக்கியத்தில் காலாவதி யான ஒன்று. இதை யார் யாருக்குக் கொடுத்தாலும் ஆதரிக்கமுடியாது. நிராகரிக்கப்பட வேண்டியதே. விருது வழங்கல் செயற்பாடு மூலம் கொடுப்பவர்களும் வாங்குபவர்களும் தமக்கான ஒரு இருத்தலைப் புனிதப்படுத்தி அதையே இலக்கியத்தின் பொன்முடியாகச் சித்தரித்து, உலகப் பொதுவாக்க முனைவதை எக்காரணம் கொண்டும் நம்மால் அங்கீகரிக்க முடியவில்லை. இதுவே எல்லா வகையறா விருதுகளுக்கும் பொருந்தும்.

கனடாவில் வாழுகின்ற இலக்கியவாதிகள் அல்லது எழுத்தாளர்கள் அநேகரை அணுகி கனடா இலக்கியத் தோட்டத்தின் இத்தகைய செயற்பாடுகள் குறித்துக் கேட்டபோது, 'அவர்கள் விருது கொடுக்கிறார்கள்.அவர்களுடைய விருது நமக்கென்ன? அவர்கள் இப்படியானவர்களக்குத் தானே கொடுப்பார்கள் இதில் நாமேன் அக்கறைப்படுவான்' என்பதாகவே குறிப்பிட்டார்கள். இது ஒருவகை தப்புதல் மனோபாவம். சும்மா இருப்பதை விட ஏதோ செய்கிறார்கள் தானே அதை ஏன் நாம் குழப்புவான் என்பதாகச் சிலர் சொல்கிறார்கள். அநேகர் எதிர்கருத்தைக் கொண்டிருந்தாலும் எவ்வகையிலும் அதனை முன்வைப்பதில்லை. இவ்வகை மனோபாவம் தான் மேற்படி செயற்பாடுகளை ஒரு பக்கம் தூண்டிக் கொண்டிருப்பதும், மறைமுக ஆதரவைக் கொடுப்பதுமாக இருந்து வருகிறது. எதிர்க் கருத்தாளர்களது இவ்வகை மௌனம் என்பதை தமக்கான ஆதரவாக எண்ணிவிடும் மேற்படி செயற்பாட்டாளர்கள் இலக்கியத்தில் தமது சாதியரசியலை எவ்வகை கேள்வியுமற்று தொடர்ச்சியாக செயற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தத் தெரிவுக்குழு தமது ஒவ்வொருத்தரின் பெயரில் விருது கொடுப்பதாக இருந்தால் நாம் ஒருபோதும் அதுபற்றி அக்கறைப்படப்போவதில்லை. மாணிக்கம் விருது, மதியாவர்ணம் விருது என்று தமது சொந்தப் பெயர்களில் விருது கொடுத்தால் யார் என்னத்தைக் கேட்கப்போகிறார்கள்? அதை விடுத்து ரொரண்டோ பல்கலைக் கழகம், கனடாத் தமிழ் இலக்கியம், புலம் பெயர் இலக்கியம் உலகத் தமிழ் இலக்கியம் என்று மொத்தக் குத்தகையில் விருதுக்கு பெயரிட்டு விட்டு இந்த விருதைக் கொடுக்கும் போது தான் சிக்கல் வருகிறது. தமது சிந்தனைக்கும் சாதியப்பிடிப்புகளுக்கும் உட்பட்டு விருதுகளைக் கொடுத்துக் கொண்டால் நாம் அதன்மீது கேள்வி எழுப்பாமல் இருக்க முடியாது. மேற்படி விருதையும் விருது சார்ந்த குழுவையும் விருது பெறுவோரையும் கட்டுடைத்துத்தானாக வேண்டும்.


கனடா இலக்கியத்தோட்டத்தின் பெயரில் இதுவரை விருதுக்காக தெரிவு செய்யப்பட்டவர்களைக் கவனித்தால் 75வீதம் பார்ப்பனர்களாகும். இவ்விருது பெற்றவர்கள் பார்ப்பனர்கள் என்பதைவிட கடந்த காலங்களில் இவர்களுடைய இலக்கிய எழுத்து அல்லது செயல் என்பன பார்ப்பனீய கருத்தியல் கொண்டது என பலரால் குற்றம்சாட்டப்பட்டவர்கள், விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட்டவர்கள் என்பதனைக் கவனிக்க வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உலகத் தமிழ் இலக்கியச் சூழலில் எத்தனை வீதமானவர்கள் பார்ப்பனர்களாக இருக்கிறார்கள்? இவர்களில் எத்தனை வீதமானவர்கள் சிறந்த இலக்கிய ஆழுமையுள்ளவர்களாக தடம் பதித்து இருக்கிறார்கள்? என்பதை நாம் கூட்டிக்கழித்துப் பார்க்க வேண்டாமா? உலகத்தமிழ் இலக்கியத்தில் மிகத் தரமான இலக்கியப்படைப்பக்களையும் படைத்து தம் வாழ்நாள் முழுவதும் இலக்கியத்திற்காகவே வாழ்ந்து கொண்டிருக்கும் எத்தனையோ தலித்துக்கள் இருக்கும்போது இவர்களுக்கு பாரப்பனர்கள் மட்டுமே கண்ணிற்குப் புலப்படுவதின் நோக்கம் பற்றி ஒரு சிறு கேள்வியாவது கேட்டுவைக்க வேண்டாமா?




இவ்விருதினை முதலில் பெற்றவர் சுந்தரராமசாமி. அவரும் அவரது காலச்சுவடுப் பத்திரிகையும் அதன் கூட்டாளிகளுடன் இணைந்து நடாத்தி முடித்த தமிழினி2000 கும்பமேளா இதுவரை நமக்குக் காட்டிய பாடம் போதும் சுந்தர ராமசாமியை அறிவதற்கு.

அடுத்து வெங்கட்சாமிநாதன். இவர் கனடாவுக்கு விருது வாங்க வந்திருந்த சமயம் அறிதுயில் சிறப்பிதழ் ஒன்று வெளியிட்டிருந்தோம். அதைப் பிரேமிள் சிறப்பிதழாக, வெங்கட்சாமிநாதன் பற்றிய தகவல்களுடன் வெளியிட்டிருந்தோம். (வெங்கட்சாமிநாதன் கையிலும் ஒரு பிரதி கொடுத்தோம்.) பிரமிள் வெங்கட்சாமிநாதன் மீது வைத்த விமர்சனங்களும் கேள்விகளும் என்று வெங்கட்சாமிநாதன் பற்றிய பிரமிளின் எதிர்வினைகளை எடுத்து பிரசுரித்திருந்தோம். பிரமிள் இருக்கும் போதோ அல்லது இறந்த பிற்பாடோ அவற்றுக்கு இன்னும் பதில் சொல்லாதவர் அவர். 'பிரமிளின் எழுத்துக்களை நாம் வாசிப்பதில்லை. நமது எழுத்துக்கான முதல் வாசகன் பிரமிள் 'தான்' என்று கூறிய ஞானக்கூத்தனின் பார்பனீயக் கருத்துடன் ஒத்துப் போபவர் வெங்கட்சாமிநாதன். கனடாவுக்கு விருது வாங்க வந்து போனது, பேசியது, பார்த்தது பற்றி தற்போது பக்கம் பக்கமாய் எழுதும் வெங்கட்சாமிநாதன் அறிதுயில் பற்றியோ ஒரு வாயும் திறக்கவில்லை. அதே மௌனம். அதே அடக்கம்.

வெங்கட் சாமிநாதன் அவர்கள் காலம் இதழுக்கு எழுதிய கட்டுரை மற்றும் நேர்காணல் போன்றவற்றைக் கவனித்தால்...

கனடாவில் இருந்து பரிசுபற்றி அறிவிப்புக் கிடைத்தவுடன் வெங்கட்சாமிநாதன் அவர்கள் 'நான் அடைந்த பூரிப்பும் மகிழ்ச்சியும் அளவில்லை' என்று உணர்ச்சி வசப்பட்டு எழுதியுள்ளார். அதைவிட இவ்விடையத்தைத் தமிழ்நாட்டு நண்பர்களுக்கச் சொல்லாமல் ஒழிக்க வேண்டிய அவசித்தையும், தெரிந்தால் எப்படியும் குழப்பி விட்டு விடுவார்கள் என்று பயந்ததாகவும், எவ்வாறு அவர்களுக்கு தெரியாது பாதுகாத்தார் என்பதையும் வெட்கமில்லாமல் வெளிப்படையாக எழுதியுள்ளார். தமிழ்நாட்டு எழுத்தாளர்களால் அங்கீகரிக்கபடாதவனுக்கு 6000 மைல்களுக்கப்பால் அங்கீகாரம் கிடைத்திருக்கின்றது என்று புழங்காகிதம் அடைகிறார் வெங்கட்சாமிநாதன். அதைவிட வெங்கட்சாமிநாதனுக்கு விருது கிடைத்ததையிட்டு சந்தோசப்பட்டு 'கனடா போய்வாருங்கள்' என்று தமிழ்நாட்டிலிருந்து வழியனுப்பிவைத்தவர் சுந்தர ராமசாமி. இவருக்குத்தான் முதல் விருது கொடுக்கப்பட்டது. தற்போது இவருக்கும் வெங்கட் சாமிநாதனுக்கும் சண்டை மூண்டிருக்கிறது. (இந்தச் சண்டையில் ஆளாளுக்கு அப்ரூவர்.)

ஆனால் சுந்தரராமசாமி பற்றியும் அவரது மகனைப் பற்றியும் காலச்சுவடு என்ற இலக்கிய இதழாக இவ்வளவு காலமும் தூக்கித்திரிந்த பத்திரிகை பற்றியும் மனுஷ்யபுத்திரனைத் துணைக்கழைத்து கரித்துக் கொட்டியிருக்கிறார் வெங்கட்சாமிநாதன். காலச்சுவடு அன்கோ தமிழ் இலக்கியச் சூழலில் செய்து வரும் அட்டகாசங்களையும் இலக்கிய ரௌடியிசங்களையும் எத்தனையோ பேர் அம்பலப்படுத்திய போதும் (பார்க்க காலச்சுவடு ஆட்காட்டி அரசியல்) எவ்வித சலனமும் இல்லாது மௌனம் காத்து வந்த வெங்கட்சாமிநாதன் அவர்கள், தனக்குக் கிடைத்த இயல் விருது பற்றிய எதிர்வினையில் சுந்தரராமசாமியுடன் குழம்பிப் போகிறார். அதனால் மனுஷியபுத்திரன் மூலம் தானே அப்ரூவர் ஆகிறார். காலச்சுவட்டின் குள்ளநரித்தன அரசிலை அம்பலப்படுத்துகிறார். இதுவரை இந்தப் பார்ப்பனீயக் கும்பலின் கள்ள அரசியல் பற்றி நாம் சொல்லிவந்த அத்தனை விடயங்களையும் மறுதலித்து வந்த நமது இலக்கிய மாமேதைகள் இன்று கள்ள மௌனத்தில் உறைந்து போயுள்ளார்கள்.

'சுந்தரராமசாமி ஒருகாலத்தில் சாகித்திய அக்கடமி விருது எனக்குக் கிடைத்தால் அதைத் தூக்கி எறிவேன் என்றவர் அது இப்போது தனக்குக் கிடைக்கவில்லை என்று ஏக்கமும் கவலையும் கொள்கிறார். இப்படிப் புழுத்து நாறிக் கிடக்கும் விருதுக்கா ஏக்கம் சு,ரா வுக்கு?' என்று எழுதியிருக்கிறார் வெங்கட்சாமிநாதன். ஆனால் 'கனடாவில் இருந்து போன் வந்தது. உங்கள் இலக்கிய சேவைக்காக நாங்கள் ஏகமனதாக இந்த முறை இயல் விருதுக்கு உங்களைத் தெரிவு செய்துள்ளோம் என்றதும் என்னால் நம்பமுடியவில்லை.' அவ்வளவு சந்தோசம் பிறந்ததாக தனக்கு விருது கிடைத்தது பற்றி வெங்கட்சாமிநாதன்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எழுதுகிறார்.

தெரியாமல்தான் கேட்கிறோம். எங்கு கொடுத்தாலும் யார் கொடுத்தாலும் எல்லாமே விருதுகள் தானே. ஆனால் இந்தியாவில் கொடுக்கும் சாகித்திய அக்கடமி விருது எப்படி புழுத்து நாறிய விருதாகி, தனக்குக் கிடைத்த இயல் விருது மட்டும் பொன்னான விருதாகி விடும்?

இப்படியான இவர்களது சண்டைகளுக்கிடையில்( அவையளுக்குள் சண்டை... ஆனால் நாம் இதுவரை சொல்லி வந்த பார்ப்பனியக் குள்ளநரி அரசியல் அம்பலமாகிறது மறுபக்கம். அவரவர் வாயால் உண்மை வெளிவருவது என்பது இன்றைய தேவை. நமது இலக்கியப் பெருந்தகைகளுக்கு ஒருபக்கம் இனியாவது வெளித்தால் சரி. வெளிக்குமா?) 2004ஆவது வருட இலக்கியத்தோட்டம் விருதை லண்டன் பத்மநாப ஐயருக்கு வழங்குகிறது. இந்த விருது வழங்கல் மூலம் கனடா இலக்கியத்தோட்டம் தனது சாதிய அரசியலை அல்லது அடிமை மனோபாவத்தை இன்னொரு முறை நமக்கு நிரூபித்திருக்கிறது. புகலிட இலக்கியச் சூழலில் பத்மநாபஐயரின் இலக்கியசேவை எது என்பதை அவரால் வெளியிடப்பட்ட தொகுப்புக்கள் மூலமே அம்பலப்படுத்த முடியும். தனது வாழ்நாளில் எதையுமே எழுதியிராத( அவர் எப்போதோ கணையாழிக்குக் கடிதம் எழுதியிருந்தர் என்று சொல்லும் அவரது நெருங்கிய நண்பர்கள் பொறுத்துக் கொள்க) பத்மநாபன்(இனி நான் பத்மநாபன் என்றே எழுதுகிறேன். தனது பெயரில் ஐயர் என்று தனது சாதியை அடையாளப்படுத்தி தக்க வைத்துக் கொள்வதன் மூலம் மற்றவர்களை சாதிப்பெயர் சொல்லி அடையாளப்படுத்தும் வன்முறையைக் கொண்டிருப்பதால், அவ்வன்முறையோடு நாம் எவ்விதத்திலும் உடன்பட முடியாதவர்களாகையால் பத்பநாபன் என்றே அழைக்கிறேன். பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே... என்ற வரிகள் இதற்குத் துணை நிற்கும்.) அவர்கள் லண்டன் வந்து தமிழர் நலன்புரிச் சங்கம் எனும் பெயரில் பெறுகின்ற நிதியில் தான் இலக்கிய சேவை ஆற்றுவதாக நமக்குப் புலுடாவிட்டு தமிழ் சமூகத்தின் பரந்து பட்ட எல்லைகளை தான் தொட்டுக் காட்டுவதாக தனது மலர்களில் கதை விடுகிறார். தனது தொகுப்பு சேவையும் ஒரு இலக்கியப் படைப்பாளியின் சேவையும் ஒன்று என்பதாக தனக்கான புனித நியாயத்தைத் தேடும் பத்மநாபன் இப்படி எழுதுகிறார். (மன்னிக்கவும் இதையும் அவரது நித்தியமான நிரந்தரமான எங்கும் தொடரும் ஆஸ்தான அட்வைசர் யாரோ, ஓம். அவரே ஒருவர்தான் எழுதிக் கொடுப்பதாக பலர் சொல்வார்கள்.) 'மேலை நாடுகளில் நூல்கள் மற்றும் வெளியீடுகளைப் பொறுத்தவரையில் பதிப்புப் பணி வியக்கத்தக்க வளர்ச்சியைக் கண்டுள்ளது. நூல் தயாரிப்பில் பதிப்பாளனின் பங்கு நூலாசிரியரின் பணிக்கு இணையானதாகும். தமிழில் வெளியீட்டுத் துறையில் பதிப்பின் முக்கியத்துவம் அவ்வளவாக உணரப்படவில்லை.தமிழில் நூல் வெளியீட்டில் கூர்மையான அக்கறையுடன் க்ரியா செயற்பட்டு வந்திருக்கிறது'. என்று எழுதுகிறார். மேலை நாடுகளைப் பொறுத்தளவில் நூல் வெளியீடு என்பது பெரிய பணமுதலீட்டுடன் பலநாடுகளின் வாசகர்கள் கவனத்தில் நிறுவன மயமாய் பெரிய அளவில் நடைபெறுவது. அப்படி ஒரு முதலாளி நிலையில் தன்னை பத்மநாபன் நினைத்தால் நாம் என்ன செய்ய முடியும்?

புகலிடத்தில் வாழுகின்ற அநேக எழுத்தாளர்கள் மாற்றுக்கருத்துடையவர்கள் அநேகர் இவரது தொகுப்புக்களில் எழுதுவதை எப்போதும் மறுத்து வந்தவர்கள். ஈழத்திலோ, புலம்பெயர் சூழலிலோ தமிழ் எழுத்தாளர்கள் பதிப்பகத்தாரின் மீதான கொலைகளையோ வன்முறைகளையோ பற்றி எவ்வித மூச்சும் விடாத ஒரு இலக்கியப் பதிப்பாளர் இந்த பத்மநாபனாகத்தான் இருக்க முடியும். இவருடைய புனிதத் தொகுப்புக்கள் வெளிவந்த காலத்தில் தான் ஐரோப்பாவில் இருந்து உயிர்ப்பு, மனிதம்,சமர், இனியும் சூல் கொள் தோற்றுத்தான் போவோமா,எக்ஸில், சனதருமபோதினி, இருள்வெளி, கறுப்புப் போன்ற மாற்றுக் கருத்துக்களைத் தாங்கிய சஞ்சிகைகளும் தொகுப்புக்களும் வெளியிடப்பட்டுக் கொண்டிருந்தன. இந்தத் தொகுப்பாளர்களிடமோ சஞ்சிகையா ளரிடமோ மறந்தும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள இந்தப் பத்மநாபன் ஒரு போதும் விரும்பியதும் இல்லை. முயற்சித்ததும் இல்லை. அதைப் பெரும் பாவமாகவே கருதி வந்தவர். அதைவிட மேற்குறிப்பிட்ட சஞ்சிகைகள் தொகுப்புக்களில் எழுதிவந்த இன்றைக்கு தமிழிலக்கியத்தில் மறுக்கப்படமுடியாத இலக்கி யவாதிகளாக இருக்கும் அநேக எழுத்தாளர்கள் பத்மநாபனின் தொகுப்புக்களில் எழுதுவதை தொடர்ந்து மறுத்து வந்தவர்கள் என்பதும் அவரது சாதீயப் போக்குகள் குறித்தும் பாசிசப் போக்குகள் குறித்தும் தொடர்ந்து கண்டனங்கள் வெளியிட்டு வந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆனால் தன்மீதான இக்குற்றச்சாட்டுக்கள் கிஞ்சித்தும் அக்கறைப்பட்டவர் கிடையாது.

இந்த பத்மநாபனுக்கு முற்போக்கு முகம் பொருத்தி அவரை இலக்கியப் பிதாமகனாக்கத் துடிக்கும்நமது இலக்கிய வாதிகளுக்கு தற்போது சில தகவல்களைச் சொல்ல வேண்டிய தேவையுண்டு.

இந்தப் பத்மநாபனின் மூத்த மகள் தனது பிராமணச் சாதியில் திருமணம் செய்யாமல் விட்டதற்காக அவரை வீட்டில் இருந்து துரத்தியதோடு மட்டுமல்லாமல் அவரது கலியாணவீட்டில் பங்குபற்றாது தவிர்த்திருக்கிறார். அவரின் மகளது திருமணம் அவருடைய இலக்கிய நண்பர்களால் முன்நின்று நடத்தி முடிக்கப்பட்டதை அவரது நண்பர்கள் இப்போது ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும். அதைவிட அவரது வீட்டிற்குப் போய்வரும் நண்பர்களுக்கு தான் மகளுடன் உறவில்லை என்பதையும் அதற்கான காரணத்தையும் இந்த 'ஐயர்' இன்றுவரை சொல்லிக் கொண்டு வருகிறார். இதை எனது நெருங்கிய நண்பர் ஒருவருக்கு 'ஐயரே' சொல்லியுள்ளார். தேவை ஏற்படின் நண்பரின் பெயர் சொல்லலாம்.

***தொடர்ச்சி 10 ஆவது பக்கம் ...***

அவனவன் நாட்டில் கடைப்புலிகளுக்கெல்லாம் தேசப்பற்றாளன் நாட்டுப்பற்றாளன் மாமனிதர் என்றெல்லாம் பட்டம் பதவி விருதெல்லாம் கொடுக்கிறார்கள். அவங்களை நாம் ஏதாவது கேள்வி கேட்டோமா. அல்லது விமர்சனமாவது செய்தோமா? ஏதோ இவர்கள் தங்களுடைய ரேஞ்சுக்கு தங்களுடைய விசுவாசிகளுக்கு தங்களது விசுவாசத்தைக் காட்ட என்னமோ செய்யிறாங்கள். இப்ப நான் ஒரு வேலைத் திட்டத்தில் இருக்கிறேன். என்னோட மண்டையை இதுக்க கொண்டுபோய் போட இப்ப நேரமில்லை. இந்த இலக்கியத் தோட்டம் என்ற சாமான் யாருக்கு விருது கொடுத்தாலும் சரி இல்லைத் தங்கடை இலக்கியத் தோட்டத்திற்கு கிருமி நாசினி அடித்தாலும் சரி.

-சக்கரவர்த்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மரணம்!

மறந்தே போனது எனக்கு.

நான்,
எனது இருப்பு
நிலையானது என்ற இறுமாப்புடன்
இறுக்கமாய் ஓடிய வாழ்வு.

சற்று நிறுத்தி,
நின்று திரும்பிப் பார்க்க வைத்தது
அவலச் சாவு.
மரண வெளி பொதுவானது - தவிர்ப்பற்றது
இருந்தும் உனது சாவு ஏற்கமுடியாதது.

எல்லோரையும் ஈர்க்க வைக்கும்
கவலைகளை மறக்கவைக்கும்
கோபங்களைக் குறைக்கும்
உனது சிரிப்புக்கள் -
அவ்வளவும் கவலைகள் கனக்கும்.

நொடிப் பொழுதில்
இருட்டை வெருட்டி
மரணம் வென்றது.

புள்ளிவைத்து முடிக்க
இஸ்டம் இல்லாமல்
நெருடல்கள் கனக்க
மயான வெளியான மனம்
சாவு சாத்தியம் என்று
அதிரவைத்தது.

அவனது மரணத்தில்
எனது வெளி அதிர்ந்து நின்றது.

- அதீதா.

கலைச்செல்வனுக்கு...


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கருமையத்தின் முதலாவது நாடக நிகழ்வும் ரொரன்ரோ தமிழ் நாடகங்களும்

அல்லது

# இப்போது சொல்லாவிட்டால் எப்போது சொல்வது

**வரன்**

*பகுதி 1: -*

கருமையம் என்ற நாடக அமைப்பின் முதலாவது அரங்க நிகழ்வு 2005 மார்ச் 19, 20 ஆகிய நாட்களில் மேற்கு பின்ஞ்ச் நிழற்சாலையில் உள்ள யோர்க் வூட் நூலகத்துடன் உள்ள அரங்கில் இந்நிகழ்வு நடந்தது.

கனடா-ரொரன்ரோவின் தமிழ் நாடக நிகழ்வுகளின் பாதிப்பகுதி இதில் தான் நடைபெறுவது வழக்கம். இந்த இடம் பொதுவாக தமிழர்கள் வாழும் பகுதிகளில் இருந்து ஒரு வகையில் தொலைவில் உள்ளது. தொடர்ந்து நாடகம் நடக்கும் மற்றும் ஒரு இடம் இதேபோல தமிழர்கள் வாழும் இடத்தில் இருந்து தள்ளியிருக்கும் மார்க்கம் என்னும் இடத்தில் உள்ள அரங்கு. இவையிரண்டையும் போக்குவரத்திற்கு கடினமாக இருக்கும் இடங்கள் என்றும் சொல்லலாம். நாடகத்திற்கு போவதற்கு யாராவது ஒரு வாகனம் வைத்திருப்பவர் கைகொடுக்கவேண்டும். அதைவிடவும் திரும்பி வருவதற்கு கண்டிப்பாய் கைகொடுத்தேயாகவேண்டும். இதற்கு இரு முக்கிய காரணங்கள் உண்டு. முதலாவது நாடகங்கள் பட்டறைகள் போன்றவற்றால் நேரம் உங்களையறியாமல் சென்றுவிடும். இரண்டாவது ஒரு பொதுப்போக்குவரத்தினை தேடிப்பிடித்து வீட்டிற்கு வந்து சேரும் திராணி பார்வையாளருக்ககு நாடகம் முடியும் தறுவாயில் இருக்கப்போவதில்லை.

நாடக நடிகர் ஒருவர் Getting in to the Character என்றும் செயல்பாட்டிற்குள் வருவதுபோல, இந்த இடங்களுக்கு போகும் பார்வையாளர்களும் Getting in to the பார்வையாளர் நிலைக்கு ஏறக்குறைய மாறிவிடுவர். இப்படி ஒரு பெரிய முன்னேற்பாட்டோடு ஏறக்குறை 3 மாதங்கள் தொடரும் போட்டி விளம்பரங்களின் தாக்கத்திற்கு பின்னர் தான், இத்தகைய நாடகங்களைப் பார்க்க பழனிக்கோ திருப்பதிக்கோ போவது போல நாம் செல்ல வேண்டியிருக்கும். ஏற்கெனவே விளம்பரங்களால் வயிறு கலங்கிப்போயிருக்கும் பார்வையாளர், பெரிய கிலியுடன்தான் நாடக அரங்கிற்குள் செல்வார்கள். நாடக அரங்கின் வாசலில் நின்று பார்த்தாலேயே தெரியும், ஒவ்வொருவரும் எவ்வளவு பெரிய பொறுமையான புன்னகையை முகத்தில் விட்டுக் கொண்டு பரஸ்பரம் விசாரித்துக் கொள்வார்கள் என்பது.

கனடாவில் தொடர்ந்து நடந்து வரும் தீவிர நாடக முயற்சிகளின் ஒரு விளைவாகவே கருமையத்தின் புதிய உருவாக்கம் அமைந்திருக்கிறது. இங்கு, கனடாவில் தீவிரமான அல்லது பார்வையாளரிற்கு பார்வைத்திறனுக்கும் உள்வாங்குதலுக்கும் சவால்களையும் புதிய பட்டறிவுகளையும் ஏற்படுத்துபவையாக நாடகங்கள் நிகழ்த்தப்படும் களன்கள் சில, குறிப்பிட்டுச் சொல்லும் படியுள்ளன. இதில் மனவெளி என்னும் கலைக்குழுவினது அரங்காடல் என்னும் நாடக நிகழ்வுகள், ஜெயகரனின் வருடாந்த நாடக ஆற்றுகை நிகழ்வுகள், ஞானம் லெம்பேட்டின் முகாமைத்துவத்திலான ஆற்றுகை நிகழ்வுகள் என்பன இவற்றில் அடங்கும். இது தவிர தொடர்ச்சியாக அல்லாத பிற நாடக முயற்சிகள், ஆற்றுகைகள் சிலவும் நடந்திருக்கின்றன. நடக்கின்றன.

இதில் அரங்காடல் என்னும் குழுவிற்குள் ஏற்பட்ட ஆற்றுகைக்கும், கருத்தியலுக்கும் இடையிலாட ஊடாட்ட முரண்பாடுகள் தற்போது புதிய ஒரு பரிமாணத்தில் / பரிணாமத்தில் கருமையம் என்ற நாடக ஆற்றுகைக்குழுவை உருவாக்கியிருக்கிறது. கருமையம் “பாரபட்சங்களுக்கு எதிரான குரல்கள்” என்ற முழக்கத்தைக் தமது குறிக்கோளாகக் கைக்கொண்டுள்ளது.

மனவெளியின் அரங்காடல் நிகழத்துகை பற்றிய 2004 இன் - கடந்த ஆண்டு விமர்சனக் கூட்டத்தை நிகழ்த்தியது. அப்போது அந்தக் குழுவின் பொறுப்பிற்குரிய இடத்தில் இருக்கும் ஒருவர் இந்த நாடகக்குழுவில் தீவிரமான முயற்சிகள் என்ற பெயரில் எதையும் எதிர்பார்க்க வேண்டாம். அதற்கு வேறு இடங்கள் இருக்கின்றன என்று கூறியிருக்கிறார் என்ற செய்தியும் இருக்கிறது. (“நல்ல நாடகங்கள் பார்க்க ப.அ.ஜெயகரனிடமும், ஞானம் லம்பேட்டிடமும் போங்கள்” என்று மனவெளியினர் சென்னதாக தான்யா 12 ஆவது அரங்காடல் பற்றிய விமர்சனத்தில் எழுதியிருக்கிறார்.) மனவெளியின் அரங்காடல் நிகழ்வுகளிற்கு தேய்மான வரலாறுதான் இருக்கிறது. கூர்ப்பில் மனவெளி பின்னோக்கிப் போய்க்கொண்டிருப்பதாகவே தெரியவருகிறது. இந்த மனவெளியில் இருந்த பெரும்பாலன பலரே தற்போது பிரிந்து அல்லது உடைந்து கருமையத்தைக் கட்டமைத்திருக்கிறார்கள். கட்டமைக்கப்படும் எதுவும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தனக்கு எதிராகவே நிற்கும் என்பது பின்னவீனத்துவப் பழமொழி. மனவெளியின் நாடக வரலாற்றில் தற்போதைய கருமையத்திற்கும் பங்கிருக்கிறது.

இந்தப் பின்னணிகளுடன்தான் கருமையத்தின் முதலாவது நாடக நிழ்வை அணுகவும் வேண்டும். மேலும் இந்த நிகழ்விற்கு முந்தைய கிழமைதான் மனவெளிக் குழுவின் ஆற்றுகையும் நடைபெற்றிருந்ததையும் குறிப்பிட்டாகவேண்டும் .

பகுதி 2:

ஆற்றுகைக்கான நாடகத்தின் மொழி உடல். உடல் என்னும்போது உடலின் அனைத்து நாடகப் பயன்படு கூறுகளான குரல், உடல் அமைப்பு, உடலின் பகுதிகள், உடலின் அசைவுகள் அனைத்தும் அடங்கும்.

அது போலவே நாடகத்தின் களம் வெளி. இந்த வெளி என்பதற்கு சட்டகத்தின் வடிவத்திலிருக்கும் மேடை என்பது மட்டும் பொருளாளகாது. ஆனால் அதையும் வெளியாகப் பயன்படுத்தலாம். நாடகக் களனான வெளி முப்பரிமாணமுடையது. அதை நாற்பரி-மாணத்தில் நடத்திச் செல்வதில்தான் நாடகரின் உடல் முக்கிய பங்கை ஏற்றுக் கொள்கின்றது. அதனாலேயே ஆற்றுகையில் அடிப்படையாக களமும் உடலும் அமைகின்றன. நாற்பரிமாணமான காலத்தை இழுத்ததுச் செல்வதாக பேசப்படும் வசனங்களுக்கு நோக்கம் அமையுமாயின் அந்த ஆற்றுகை தேவையற்றது.

நடந்து முடிந்த மூன்று நாடகங்களிலும் கண்ணை மூடிக்கொண்டு நாடகத்தைக் கேட்கும் அளவிற்கே வசனம் பயன்பட்டு இருந்தது. அதாவது இந்த நாடகங்கள் வானொலிகளில் சிறப்பாக நடாத்தப் பட்டிருக்கலாம். அதன்மூலமே சொல்லவந்த ஆற்றுகை வெளிப்படுத்தப் பட்டிருக்கலாம். அதன்மூலம் பல நூறு பார்வையாளர்களின் நேரத்தையும் சில நூறு தொண்டர்களின் முனைப்புக்களையும் மிச்சப்படுத்தியிருக்கலாம்.

இந்த நாடக வெளியின் பயன்பாடு மற்றும் உடல் பயன்பாடு என்ற வகையில் கருமையத்தின் முதலாவது நிகழ்வின் முதல் நிகழ்த்துதலான கட்டவிழ்ப்பு, நடுக்கடலில், என் மௌனத்தின் மொழிபெயர்ப்பு ஆகிய மூன்று நாடகங்களும் வானொலியில் நிகழ்த்தப்படுவதற்கு எவ்விதத்திலும் மாற்றங்களுக்கு உள்ளாக்கப்படவேண்டிய தேவையில்லாதன. கனடாவி ன் ரொரன்ரோவில் இருக்கும் அனைத்து வானொலிகளும் இந்த நாடகங்களையெல்லாம் தோண்டி எடுத்து வானொலியில் நடத்தியருந்தால், தீவிர நாடகப் பார்வையாளருக்கு எவ்வளவு பாதிப்புக்களை தவிர்த்து தந்திருப்பார்கள் என்பதை, வானொலிக்காரர்கள் கொஞ்சமேனும் கருணையுடன் யோசித்துப் பார்க்கவேண்டும்.

இதன் மறுதலையாகவும் ஒரு யோசனை சொல்லலாம். எது நிகழ்த்துதலுக்கான சரியான நாடகப்பிரதி என்பதைக் கண்டறிவது கடினமாயிருந்தால் முதலில் கொஞ்சப் பிரதிகளைதிகளைத் தேர்ந்தெடுக்கவும். அவற்றை தமிழ் வானொலிகளிடம் கொடுக்கவேண்டும். அவர்கள் போடாதவைகளையெல்லாம் மேடையில் நாடகமாகப் போடலாம். அவர்கள் போடாவிட்டால் கருத்தியல் வகையிலோ அல்லது நிகழ்த்துதல் வகையிலோ அவை சரியான பிரததியாக இருக்கும் என்று பொருளாகிவிடும். இந்த முறைக்கு வானொலிப் பாசிச் சாயத் தாள் என்று பெயர்.

கனடாவில் தொடர்ந்து பார்த்துவரும் நாடகங்கள் பல, நாடகத்தின் களம் என்பதற்கு Spot light என்பதைத்தான் எனக்கு அர்த்தப் படுத்துகின்றன. அந்தளவிற்கு spot light Mania நாடகக் காரர்களிடம் பரவிக் கிடக்கிறது. மனவெளியிடமும், அதன் பிளவில் உருவான அல்லது கூர்ப்பில் உருவான கருமையத்திடமும் அந்தப் பாதிப்பைக் காணமுடிகிறது. அதிலும் குறிப்பாக, எப்படி அலங்கோலமாக, பிழையாக, பொருளற்று spot light ஐப் பயன்படுத்துவது என்பதையும் இவர்களிடம் நாம் படித்துத் தெரிந்து கொள்ளலாம்.

வெளிபற்றிய குறிப்பிடலில் "என் மௌனத்தின் மொழிபெயர்ப்பு" நாடகத்தில் சபேசன் மேடையை விட்டு வெளியே வந்து போனதை ஓரளவாவது நடைபெற்ற சட்டகத்தை உடைக்கும் முயற்சி என்று சொல்லவேண்டும். அதே போலவே பெண்களால் நடத்தப்பட்ட பட்டறை வெளிப்பாடான கட்டவிழ்ப்பு நிகழத்துதலில், இதேபோல பார்வையாளருக்குள் இருந்து மேடைக்குள் சென்றதைக் குறிப்பிடலாம். ஆனால் இவை அனைத்தும் சட்டகத்தை விரிவாக்கும் வேலைதவிர வேறோன்றுமில்லை என்பதையும் கொள்ளவேண்டும். அத்துடன் இந்த உத்தி திரும்பத்திரும்ப பல தடவைகளில் ரொரன்ரோவின் தமிழ் நாடக மேடைகளில் பயனபட்டு வந்திருப்பதையும் நினைவிற் கொள்ளவேண்டும்.

நாடக வெளியைப் பொறுத்தளவில், இப்படிப்பட்ட இடத்தில் தான் கனடாவின் ரொரன்ரோ தமிழ் நாடகங்கள் பொதுவாக இருந்து கொண்டிருக்கின்றன. சில விதிவிலக்கான முயற்சிகளும் நடந்திருப்பதாகக் கேள்வி. மேலும் திருமறைக் காலமன்றம் என்ற உலகம் சுற்றும் கிறீஸ்த்தவ நாடக நிகழ்வுகளில், சேசுநாதரை சிலுவையில் அறைந்து காட்டித்தானாகவேண்டும் என்ற விசுவாசம் சார்ந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கட்டாயம் உண்டு. சிலுவையில் அறையும் காட்சியை காட்டும்போது தங்களையுமறியாமல் கொஞ்சமாவது நாடக வெளிபற்றிய கட்டுப்பெட்டித்தனத்தை மீறுகிறார்கள். இதை, விதி விலக்குகள் என்ற வகையில்கூட சேர்த்துக் கொள்ளக்கூடாது. ஏனெனில் "பிதாவே... அவர்கள் அறியாமல் செய்கிறார்கள்" . ஆனால் வேறு சில, நான் பார்க்காத ரொன்ரோ தமிழ் நாடகங்களில் வெளியைக் கையகப்படுத்தும் முயற்சிகள் நடந்திருப்பதாக நம்பத்தகுந்த வகையில் கேள்விப்பட்டிருப்பதும் உண்மைதான்.

ரொரன்ரோவின் தீவிர தமிழ் நாடகங்களின் மேடை அல்லது உடல் பயன்பாட்டில் குறிப்பிட்டுச் சொல்லவேண்டியது இன்னுமொன்று உண்டு. எந்தவொரு நாடகத்திலாவது நடிகர்களை தனியாக மேடையில் வருவதற்கு சற்று அதிக நேரம் விட்டால் அவர்கள் 90 விதமான-வர்கள் மேடையின் மையத்தை விட்டு விலகுவதேயில்லை. இதில் நடிகர்களின் தவறாக நான் கருதவில்லை. நாடகத்தின் இயக்குனர்களின் நாடக அறிவே அங்கு பேசுகின்றது என கொள்ள இடமுண்டு. இந்த தவற்றை ஏன் மீண்டும் மீண்டும் விடுகிறார்கள் என்ற ஆதங்கமும் ஏற்பட்டதுண்டு. சில வேளைகளில் பேஸ்மென்ற் எனப்படும் வீட்டின் கீழ் அறைப்பகுதியில் நாடகங்களின் ஒத்திகை நடப்பதால் இந்தத் தவறு ஏற்படுகிறதோ என்ற எண்ணமும் ஏற்படுகின்றது. அந்த அறைகளின் அளவிற்கு தங்கள் நடமாட்டத்தைக் குறுக்கிப் பழகிய நடிகர்கள் அதை திடீரென்று மேடையில் விரிவாக்க முடியாமற் போய்விடவும் வாய்ப்பு இருக்கிறது. ஆனால் ரொரன்ரோவில் நடக்கும் பரத நாட்டிய அரங்கேற்றங்கள் பாதியாவது மேடையின் முழுக் கன பரிமாணங்களையும் பயன்படுத்திக் கொள்வதையும் பார்க்கவேண்டும். பரத நாட்டிய அரங்கேற்றத்திற்கு முன்பாக தொடர்ந்து ஒருவாரம் தனது மாணவியை பெரிய உள்ளக விளையாட்டரங்கில் பயிற்றுவித்த பரத நாட்டிய ஆசிரியையும் காணக்கூடியதாக இருந்திருக்கின்றது. இதையும் ரொரன்ரோவின் நாடகர்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வருகின்றேன்.

நாடக வெளியை விட நாடக உடல், இந்நாடகங்களில் எப்படியாகிறது என்பதுதான் அதனிலும் வேதனை. தொடர்ந்து நாடகங்களில் நடித்துக் கொண்டிருப்பவர்கள் கூட தங்களது உடலை நாடகத்திற்காக்க முயற்சிப்பதில்லை. ரொன்ரோவின் தமிழ் நாடகம் முழுநேர நாடகர்களால் செய்யப்படுவதில்லை என்பதும் உண்மைதான். இந்த நிலையில் இப்படி ஒரு கோரிக்கை வைப்பது முறையானதல்ல என்றாலும் கூடக் குறிப்பிடவேண்டியதாக இருக்கின்றது. நடிகர்கள் என்ற வகையில் இரண்டுபேரை இந்நிகழ்வை முன்வைத்து குறிப்பிட்டுச் சொல்லும் நாடக நடிகர்களாக உடனடியாக அடையாளம் காணமுடிந்தது. சுமதியும் சபேசனும் அதை நேர்மையாக நிரூபித்தார்கள் எனலாம். அவர்களது நாடகப் பட்டறிவு சிறப்பாக வெளி வந்திருந்தது. பாபுவின் நடிப்பும் குறிப்பிடப்படும்படி இருந்தது. நடுக்கடலில் நாடகத்தின் அவ்வளவு அதிமான வசனங்களை பொறுப்புடன் வெளிக்கொண்டு வந்தது என்ற வகையில் இதைப் பாரக்கலாம். அந்த நாடகத்தில் நடித்த மித்திரன் என்ற நடிகருக்கு நடிப்பை வெளிப்படுத்த பிற வாய்ப்புக்கள் இருந்தன. ஆனால் பாபுவின் நிலை அப்படியில்லாதபோதும் அவர் தனது பாத்திரத்தை கவனமாகக் கையாண்டார் என்றே கூற இடமுண்டு. தனது பங்கைப் பொறுப்புடன் செய்திருந்தார் என்றே கூறவேண்டும். மித்திரன் என்பவரின் நடிப்பைப் பற்றி மாறுபட்ட கருத்துக்களும் இருந்தன. அவர் அந்த நாடகத்தின் தீவிரத்தன்மையை நகைச்சுவையாக்கிவிட்டார் என்பதாகச் சொல்லப்படுகின்றது. அப்படி நகைச்சுவையாக்கியது மித்திரனா அ.கந்தசாமியா என்பதை யோசிக்க இடமுண்டு.

நாடக உடலை பயன்படுத்துவற்கு ஏன் அக்கறை கொள்கிறார்கள் இல்லை? பின்வருமாறு ஒரு விவாதம் முன்வைக்கப் படுகிறது. "நாடகத்தை நாங்கள் எப்படியும் செய்வோம். யாரிவர்கள்? எங்களுக்கு வழிமுறைகள் சொல்வதற்கு" என்கிறார்கள். அப்படிச் சொல்வது சரிதான். உங்கள் உரிமைதான். நாடகத்தை நாங்கள் தானே பார்க்கவேண்டும். எங்களுக்கு பார்ப்பதுபோல நாடகம் இருக்கவேண்டும். அது பொதுப்போக்கு நாடகத்தில் இருந்து மாறுபட்டதாக அல்லது விஞ்சியதாகவும் இருக்கவேண்டும். இல்லையென்றால் ஏது பயன் ஐயன்மீர்? இதையெல்லாம் இருப்பது மாதிரி நாடகத்தை தாருங்கள் பார்க்கலாம்.

பகுதி 3: கருமையத்தின் நாடகங்கள்:

இந்நாடக நிகழ்வின் முதலாவது நிகழ்வாக கட்டவிழ்ப்பு என்ற பெண்களின் பட்டறை முயற்சி யென்று சொல்லப்பட்ட ஒன்று முன்வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஒரேயொரு முக்கியமான பெரிய வெற்றியாகக் கொள்ளக்கூடியது பல புதிய பெண் நடிகர்களை மேடைக்கு கொண்டு வந்ததமைதான். பல பேர், புதிய, சிறுமிகள், இளைஞிகள் என்ற பல தரப்பட்டடிருக்கும் வயதினரும் நடிகர்களாக வந்திருக்கிறார்கள். சில வேளைகளில் இவர்கள் சிறிய அளவில் வேறு இடங்களில் நடித்தவர்களாயிருக்கலாம். பெறுப்பாக 2 மணிநேரத்திற்கு ஒருங்கிணைத்து அவர்கள் அனைவரும் நாடகத்திற்காக எனப் பணியாற்றிதுதான் இந்த பட்டறையின் முதல் முழு வெற்றி என்று சொல்லாம்.

பெண்கள் பிரச்சனைகளாக அவர்கள் எடுத்துக் கொண்டவைகள் பல காலாவதியாகிப்போனவைகள். தயவு செய்து எங்கள் பிரச்சனை நாங்கள் சொல்கிறோம் என்று பழைய வாதத்தை பெண்கள் தொடர்ந்து வைக்க வேண்டாம். அப்படியாயின் பொதுப்பார்வையாளர்களாகிய எங்கள் அனைவரையும் "தீவிர நாடகம்" என்ற போரவையில் உள்ளிளுத்துவிட்டு பெண்கள் சிக்கல்களை ஆய்வு செய்யும் பட்டறையை எங்கள் தலையில் கட்டியிருக்கக் கூடாது. அதையும் நாடகமாக்காமல் வெறும் வெற்றுப் பிரச்சாரமாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எங்கள் தலையில் 2 மணிநேரத்துக்கு கட்டி அடித்திருக்கக்கூடாது. இப்படியெல்லாம் எழுதாது மெதுவாக பட்டும்படாமல் இந்த நிகழ்வை மெதுவாகப் பாராட்டி பெண்கள் சைற்றில் கோல்போடும் கலை தெரியாததல்ல. அவை தேவையானதும் அல்ல. குழந்தைகள் பெண்கள் என்பதற்கான பாராட்டு ஒதுக்கீடு செய்ய முடியாததற்கு மன்னிக்கவும்.

நாடகத்திற்காக என்று எங்களை அழைத்துவிட்டு பெண்கள் சிக்கல்களை, அவற்றையும், நாடமாக்க முயற்சிக்காமல் வெறுமனே தாங்கள் பட்டறையில் விவாதித்த சம்பவங்களை நிகழ்ச்சிகளாக நடத்திக்காட்டினால் நாங்கள் வெறுப்படைவதில் வியப்பிற்கு ஏதுமில்லை.

பெண்கள் நாடகங்கள் என்ற ஒரு வகையினம் உருவாகிவிட்டது என்று நாங்கள் கருதிக்கொண்டால், நிகழ்த்தப்பட்ட 'பெண்கள் நாடகம்' நம்பிக்கையீனத்தையே ஏற்படுத்துகிறது. முதலாவது, அது நாடகமாகவில்லை. நாடகத்திற்கான கதைக் களன்களை மறு மகாபாரதம் என்று சொல்லும் அளவிற்கு பல கிளைக்கதைகள் உப கதைகள் பின்னொட்டுக்கள் முன்னொட்டுக்களுடன் இந்த நிகழ்த்துதல் அமைந்திருந்தது. அரங்கிற்கான கூறுகளை மறந்துவிட்டு கருத்துக்களை முன்னிறுத்தும் பிரச்சார முனைப்பு தெரிந்தது. எல்லாம் சரிதான். வருசத்திற்கு ஒரு தரம் சபரிமலைக்கு மாலைபோடுவது போல வருகுது வருகுது என்று மாலைபோட்டு காத்திருந்து தேசாந்திரம்போய் ஒரு நாடக அரங்கில் அமர்ந்தால், இப்படியா சாமி எங்களை துன்பப் படுத்தி வெளியே அனுப்புவது. அதுவும் அந்த நிகழ்த்துதலை முதலாவதாகப் போட்டு எங்கள் கழுத்தை அறுத்து முதலிலேயே தொங்க விட்டுவிட்டார்கள். அதனால் பின்னர் வந்த நாடகத்தில் கோழிகள் தொகை தொகையாக வெட்டப்படுவதை கொலைஎின் கொடூரத்திற்காக விபரிக்கையில், அவை வெட்டப்படுவதற்கான பரிதாபத்திற்கு பதிலாக, ஏற்கெனவே கழுத்தறுபட்டு தொங்கும் எங்களை நினைத்து சிரிப்பாய்த்தான் வந்தது. ஒரு சின்ன நாடகமாவது தந்திருக்கக்கூடாதா?

காசு வாங்கி உள்ளே கூப்பிட்டு அறுஅறு அறுவென்று அறுப்பதற்கு என்னபெயர்? சாமியே சரணம்.

ஆணாதிக்கத்திற்கு எதிரான பெண்கள் பயிற்சிப்பட்டறை என்றாலும்கூட, ஆண்களை - அதாவது நாடகப் பட்டறிவுள்ள ஆண்களை நாடகத்திற்கான ஆலோசகர்களாகக் கொள்வதில் தப்பில்லை. ஆணாதிக்கம் என்பது வேறு . ஆண்கள் என்பது வேறு. அப்படி, ஒருவேளை இதுவரை நாளுக்குமான மனவெளியின் பட்டறிவுகளை பிற ஆண் நாடகர்களிடமிருந்து கருத்துரைகளாகப் பெற்றிருந்தால் எங்கள் கழுத்துக்கள் தப்பியிருக்க வாய்ப்புண்டு.

ஆனால் அப்படி கருத்துரைகள் பெறப்படாதபோதும்கூட இந்தப் பெண்களில் பலர் இதுவரை நாளுக்குமான மனவெளி நிகழ்த்துதல்கள் மற்றும் பிற நிகழத்துதல்களின் ஊடாக ரொரன்ரோ தமிழ் நாடக உலகில் வலம் வந்தவர்கள் தான். அந்த வரலாற்றுத் தொடர்பு நாடக பட்டறிவு எங்கே போனது என்பதுதான் புரியாத புரிராக உள்ளது. இதற்கெல்லாம் முதல் முயற்சி என்று, விட்டு விடுதற்கு முடியாது.

சரி நாடகமாகத்தான் வேண்டாம். அவர்கள் எடுத்துக் கொண்ட கருத்துக்கள் என்ன?

கருக்கலைப்பிற்கான உரிமை, பெண் சிசுக் கொலை, சாமத்தியச் சடங்கை (வெளிநாட்டில்) செய்வது, வீட்டில் பெண்குழந்தைகளுக்கும் ஆண்குழந்தைகளுக்கும் உள்ள பாகுபாடு, கைம்பெண்களிற்கு இழைக்கப்படும் கொடுமை, சீதனம் கொடுப்பது, பெண் திறமைகளை மதிக்காமல் மீது கணவன் காட்டும் அதிகாரம் அதற்கு கிடைக்கும் கௌன்சிலிங் - தீர்வு என்பன இந்த பெரும் நாடகத் தொடரின் கிளைக் கதைகளாகும்.

இதில் வீட்டில் பெண் குழந்தைகளுக்கும் ஆண்குழந்தைகளுக்கும் உள்ள பாகுபாடு பற்றிய தொடரில் மிக குறிப்பான மென்மையான சிக்கல் ஒன்று வந்துபோனது. ஒரு பெண், குடும்பத்தில் பிள்ளைகளுக்கும் கணவனுக்குமாக தானது நேரத்தை வாழ்க்கையை ஓட்டும் ஒரு பெண் வந்து போகிறாள். அந்தப் பாத்திரத்தைச் செய்தவரும் பொறுப்பாக செய்திருந்தார். அந்தச் சிக்கலைப் பொறுமையாக இந்தக் குறிப்பிட்ட சிக்கல்களுடன் பெருத்தி இழைத்திருப்பின் ஒரு கதை இந்தப் பெண்கள் தங்க்ள சிக்கலைச் சொல்ல ஏற்ற வகையில் உருவாகியிருக் வாய்ப்பிருக்கிறது. அல்லத வேற ஏதாவது ஒன்று...

கள்ளிப்பால் கொடுக்கும் பெண் சிசுக் கொலை இலங்கைக்கோ வெளிநாடுகளுக்கோ தொடர்பில்லாதது. அப்படியாயின் இன்னும் பல சிக்கல்கள் இதைவிடக் கொடுமையானவை தமிழ்நாட்டில் பெண்களுக்கு இழைக்கப்படுபவை உள்ளன.

சரி அதுபோகட்டும். இந்த அனைத்துச் சிக்கல்களுக்கும் அடிப்படையான ஆணாதிக்கத்தின் குறியீடான தாலி பற்றி யாருமே வாய்திறக்கவில்லையே? ஏன்? அனைவரும் ஒருவேளை தங்கள் தாலிகளைப் பத்திரமாக மறைத்து வைத்துக்கொண்டு நாடகம் நடித்திருக்கலாம். ஆனால் தாலி பற்றிய கேள்வியை எழுப்பும்போதுதான் உண்மையான பெண்களின் பிரச்சனையின் வடிவம் வெளிப்படுகிறது என்பது பணிவான கருத்து. அது திட்டமிடப்பட்டு பெண்கள் பட்டறையில் எடுத்துக் கொள்ளப்படவில்லையா? அல்லது திட்டமிட்டு அடுத்த நாடக நிழ்த்துகையின் முற்று முழுதான கருப்பொருளாகச் சேமித்து வைத்திருக்கிறார்களா என்பது தெரியவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மற்றுமொரு ஐயமும் உண்டு. பெண்கள் பயிற்சிப் பட்டறையின் கருப்பொருளுக்குள் இந்த பேசுபொருள் எடுக்கப்படாது போயிருக்கலாம். கட்டவிழ்ப்பு என்ற பெயரைப் பார்த்ததும் இவர்கள் கட்டப்பட்ட தாலியைத்தான் குறிக்கிறார்கள். அதுதான் மையப்பொருளாய் இருக்கப்போகிறது என்று 'ஆவலுடன் எதிர்பார்த்து' ஏமாந்துதான் போனேன். அவர்கள் தாலியை மட்டும் விட்டுவிட்டு மற்றவற்றையெல்லாம்தான் கட்டவிழ்த்தார்கள்.

இந்த பெண்களின் பயிற்சிப் பட்டறை நிகழ்த்துதல்களின் குறிப்பாகச் சொல்லக்கூடிய பிறிதொன்றும் உண்டு. இவர்களுடைய உப கதை, கிளைக் கதைகளின் காட்சி மாற்றங்களின் போது இடையில் ஒவ்வொரு நிமிடம் நாட்டிய மாடவிட்டார்கள். இந்த அதிரவைக்கும் நடனம் பல தடவைகளில் பார்வையாளர்களை விழித்தெழச்செய்தது என்றால் மிகையாகாது. திரைச்சீலைக்கு பதிலாக காட்சி மாற்றத்திற்கான உத்தியாக இப்படியொரு முறைமையை இதுவரைநாளும் யாரும்பயன்படுத்தியிருக்க மாட்டார்கள் என நினைக்கிறேன்.

கருமையத்தின் இரண்டாவது நிகழத்துதலாக நடுக்கடலில் என்ற நாடகம் இடம்பெற்றது. இது சபேசனின் இயக்கத்தில் அ.கந்தசாமி, பாபு, மித்திரன் மற்றும் மகேந்திரன் ஆகியோரால் நடிக்கப்பட்டது. ஸ்லோவிமித் ரித்விக் எழுதிய நாடகம்.

மூன்று பேர்கள் கடலில் பணிக்கும்போது கப்பல் சிக்கலுக்கு உள்ளானதால் எழும் காட்சிப்பிண்ணனி. சிக்கல் மனிதருக்குள்ள அடிப்படையான குணமான சுயலாபம் கருதி கூட்டுச் சேர்ந்து கொள்வதும் எளியோரை வதைப்பதுமான குணாம்சத்தை அலசுவது இந்தக் கதை. நாடகமாக்குதற்கு சவாலான முயற்சியும்கூட. நீண்ட தொடர் வசனங்களையுடைய Absurd நாடகத்தின் தன்மையுடைய கதை. ஆனால் அதை சலிக்காமல் நடத்திக் கொண்டு செல்லத்தான் செய்தார்கள். பெண்கள் பட்டறையின் நாடகம் ஏற்படுத்திய எதிர்விளைவான தாக்கம் இல்லாதிருந்திருந்தால் உண்மையில் இந்த நாடகம் மேலும் சிறப்பாக உள்வாங்கப்பட்டிருக்கும். குறைந்தபட்சம் பெண்கள் பட்றையின் 2 மணிநேரச் சோதனை முடிந்ததும் ஒரு இடைவேளையாவது விட்டிருக்கலாம்.

இந்தப் பக்கவிளைவினால் இந்த 'நடுக்கடலில்' நாடகத்திற்குள் எளிதாகச் செல்லமுடியாமல் மனத்தடை இருந்தது உண்மைதான். பின்னர் மெதுவாக பாபுவும் மித்திரனும் நாடகத்தை நடத்திச் சென்றார்கள். மேடையில் நடமாடுவதற்கு எவ்வித தடையும் இருக்கவில்லை. ஆனாலும் யாரும் பயன்படுத்தவில்லை. நாடகத்தை கூர்மையாகப் பார்த்து இயக்குனர் நகர்த்திச் செல்லவில்லை. தேவையற்ற விதத்தில் ஒரு படகின் முகப்பு வேறு செய்து வைத்திருந்தார்கள். அதன் நோக்கம் என்ன ஏன் அது மேடையில் இருந்து என்று புரியவில்லை. ஒருவேளை அது கப்பலில் நடக்கும் - உடைந்த கப்பலில் நடக்கும் கதை என்பதற்காக இருந்திருக்கலாம். அப்படியானால் முன்னால் விடுக்கப்பட்ட நாடகம் பற்றிய முன்னோட்ட அறிவிப்பைத் தடுத்திருக்கலாம்.

ஊர்ச்சங்ககங்களில் நடக்கும் நாடகங்களிற்கு கொடுக்கப்படும் முன்னுரை அல்லது அட்டகாச அறிவிப்பு போல ரொரன்ரோவின் தமிழ் தீவிர நாடகங்களுக்கும் உரத்த தொனியில் ஒரு அறிவிப்பு விடுவது வழக்கமாகி இருக்கிறது. சில நாடகங்களிற்கு இந்த அறிவிப்பு அல்லது முன்னுரை அல்லது எடுத்துரைப்பாளரின் (Narrator)அறிவிப்பு தேவையானதாகவும் இருக்கும். இருக்கலாம். ஆனால் ஏன் அனைத்து நாடகத்திற்கும் முன்னால் ஒரு அறிவிப்புச் செய்கிறார்கள் என்பது புரிவதில்லை. "தற்போது பாருங்கள் ! நீரும் நெருப்பும் மோதவிருக்கிறது! இதோ பாருங்கள். இப்போது பாருங்கள்" என்பதுபோல அறிவிப்புச் செய்கிறார்கள். இதைக் கைவிடலாம். அதனிலும் கொடிது இருக்கிறது. அதே குரலில் அதே தொனியில் இடையிடையே உங்கள் கைத்தொலைபேசிகளை அழவிடாது பாருங்கள். உங்கள் குழந்தைகளை அணைத்து வையுங்கள் என்பது அதனிலும் கொடிது கொடிது.

நடுக்கடலில் நாடகம் உண்மையில் எழுப்பியிருக்கவேண்டியது ஒரு ஆழ்ந்த கவலை உணர்வைத்தான். ஆனால் அவ்வப்போது சிரிப்பு எதனால் எழுந்தது என்பதை இயக்குனர் யோசித்துப் பார்க்கவேண்டும். பல காரணங்களைச் சொல்ல இடமிருக்கிறது. நாடகத்தில் வாழ்வின் அபத்தம் கொடுக்கும் உண்மை முகம் நிழத்துதலில் பார்வையாளரை சிந்திக்கத் தூண்டியிருக்கவேண்டும். இந்த நாடகத்தில் இரண்டாம் மூன்றாம் தளங்களில் பொருள்கொள்ளும் இடைவெளியிருக்கிறது. அது பார்வையாளர்களின் எண்ணத்தில் கிளறலை ஏற்படுத்தாது அவர்களை அந்தத் தளங்களிற்கு புத்திபூர்வமாக அழைத்துச் செல்லாமல் ஏன் போனது என்பதையும் சிந்திக்கவேண்டும்.

அரங்கப் பொருட்கள் சார்ந்த ஒரு சின்ன அறிவுறுத்தல். பெரும்பாலும் நாடகங்கள் திரைப்படங்களில்கூட உண்மையான ஆயுதங்களைப் பயன்படுத்துவதில்லை. அவை எதிர்பார்க்காத ஆபத்தை ஏற்படுத்தும். நாடகங்கள் பார்ப்பவர்கள் கூட உண்மையான புகையிரதம் மேடையில் ஓடவேண்டும் என்றோ கப்பல் ஓடவேண்டும் என்றோ எதிர்பார்ப்பதில்லைத்தானே. அதேபோலவே உண்மையான வெடிபொருட்கள் வெட்டுக்கருவிகள் தவிர்க்கப்படுகின்றன. மித்திரனை நோக்கி ஒவ்வொரு தடவையும் நடிகர் அ.கந்தசாமி கத்தியை ஆட்டி அசைக்கும் போதும் நெஞ்சு பகீர் என்றது. எங்கே குத்திவிடுவாரோ என்பதுபோன்று. கவனத்தில் கொள்ளலாம். முன்வரிசையில் குழந்தைகள் வேறு அமர்ந்திருந்தார்கள். தவறிவிழுந்தால் கூட பாதிப்பு எற்படும். சிறப்பான இயக்குனரான பாரதிராஜாகூட அரிவாள் நெருக்கமாகப் பயன்படுத்தும் காட்சிகளில் ஒருபோதும் உண்மையான அரிவாள்களை தனது திரைப்படங்களில் பயன்படுத்துவதில்லை.

மூன்றாவது நிகழ்த்துதலாக "என்மௌனத்தின் மொழிபெயர்ப்பு" என்ற சக்கரவர்த்தியின் நாடகம் இருந்தது. இந்த நடகத்திற்கான பெருங்கதையாடல் ஒன்று ஏற்கெனவே உருவாகிவிட்டிருந்தது. இந்தப் பெருங்கதையாடலின் மூலமாக, சக்கரவர்த்தியின் விடுதலைப


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புலிகளின் மீதான எதிர்ப்பு நிலைப்பாடு முன்வைக்கப்பட்டு இருந்தது. அதனால் இந்த நாடகத்தை ஆவலாக ஆதரவு நிலைப்பாட்டுடன் எதிர்பார்த்த பலரும், என்னதான் சொல்லப்போகிறார்கள் என்று மெதுவான மறுப்பு உணர்வுடன் எதிர்பார்த்த பலரும் இருந்தார்கள் என்பதே உண்மை. மூன்றாவது நாடகம் இருதரப்பாரையும் சமன் செய்யதாகவே இருந்தது.

படுகொலைகளுக்கு எதிராக 'ஸ்கங்கைக்' கொன்ற ஒருவர் எழுப்பும் உசாவலில் நாடகம் நகர்கிறது. ஆனால் நாடகத்தை நீட்டி முழக்கும் போக்கில் நாடகம் திசைமாறிப்போய் விலாவாரியான சிறு கதாகாலட்சேபமானதையும் தவிர்க்க முடியவில்லை. மற்ற இரண்டு நாடகங்களைவிடவும் இந்த நாடகத்தில் நாடகத்தின் தன்மைகள், சாயல்கள், நடிப்பு, உத்திகள் என்பன நன்றாக அமைந்திருந்தன என்பதையும் குறிப்பிட்டாகவேண்டும். அவ்வப்போது நடகத்தன்மை வந்து போனது. ஆனால் கடைசிக் காட்சியில் வந்த வகைதொகைகள் கொஞ்சம் மணிரத்தினம் பாணிப் பாதிப்பாகவே பட்டது. மூளைச்சலவை (Brain Wash) என்ற ஒரு வரிச்சொல்லுக்கு இவ்வளவு நீளக் காட்சியமைப்பை செய்வதற்கு யாருக்கு தகிரியம் வரும். அப்படியானால் உதாரணத்துக்கு Brain Strome என்ற சொல் நாடகத்தில் பயன்படுத்தப்பட்டால் மேடையில் என்ன நடக்கும்? அந்தக் காட்சியமைப்பை முன்வரிசைக் குழந்தைகள் மந்திர தந்திரக் காட்சிபோல் மிகவும் ரசித்தார்கள் என்பது உண்மைதான்.

நாடகத்தில் தொடக்கக் காட்சியின் நடன அமைப்பு வகை மிகவும் பொறுப்புடன் வடிவமைத்துச் செய்யப் பட்டதாகவும், அந்தக் குழந்தைகள் அதை சரியாகப் போலச் செய்ததாகவும் தோன்றியது. மேலும் இந்த நாடகங்கள் அனைத்திற்கும் பின்னணியில் நின்று அவரவர் இரசனைக்கு ஏற்ப இசை வடிவங்களை தொகுத்து வழங்கியிருந்த ரூபனின் உழைப்பும் தெரிந்தது.

நாடகம் சொல்ல வந்த கருத்து பல இடங்களில் வெற்றிகரமாகவே வெளிப்படுத்தப்பட்டன. பார்வையாளரிடம் கொண்டு செல்லப் பட்டன. கொலையை யார் செய்வது, கொலைக்ள எதற்காகச் செய்யப்படுகின்றன, கொலைக்கு காரணமாக எவையெல்லாம் முன்நிறுத்தப்படுகின்றன, கொலைக்கு எவ்வித நிறுவனங்கள் துணைபோகின்றன என்பதாக வியாக்கியானம் நாட ஆசிரியரின் அறிவெல்லை உசாவலுக்குட்பட்டு சென்றது. இந்த விபரிப்புக்கள் மாற்றுக் கருத்துக்களின் ஒரு வடிவமாக பிறிதொரு மேடையில் சொல்லமுடியாதவாறு அமைந்திருந்தது. சில இடங்களில் நகைச்சுவை உணர்வைக் கையாளும் திறன் சிறப்பாக வெளிப்பட்டது. கொலையாளிகளின் பட்டியல் முன்வைக்கப்படுகிறது. கடவுளுடன் அல்லது ஒரு வல்லமை படைத்த ஒன்றுடன் நடக்கும் உரையாடலாக இது வெளிப்படுத்தப்படுகிறது. தொடரும் பட்டியல் முன்வைப்பின்போது சபேசன்-நடிகர் ஒரு இடத்தில் "அப்போ அவர்" என்று காதில் சொல்லிவிட்டு ஓடி ஒழிய நடிகை - சுமதி விழுந்து விழுந்து சிரிக்க பார்வையாரின் பக்கத்தலிருந்து, யார் அது என்ற ஊகத்தில் பெயர்கள் பரிந்துரைக்கப் படுகின்றது. அனைவரும் எதிர்பார்த்ததுபோல இல்லாது அந்தப் பெயர் புஷ்சின் பெயராக இருக்கிறது.

இப்படிக் கொலையாளிகளின் வரிசையைக் கொண்டு வருவதில் ஒரு மறுதலை இடர்ப்பாடும் நாடகத்தில் இருக்கிறது. கொலையாளிகளின் பெயர்ப் பட்டியலில் பிடல்காஸ்ரோ, சேகுவேரா, ஸ்ராலின், புஷ், சதாம், உன்தலைவர், என்தலைவர் என அனைவரும் இருக்கின்றார்கள். உலகப்பொதுப்போக்கில் அல்லது அதில் இயங்கும் மாந்தருக்கு சே மற்றும் பிடல் போன்றவர்கள் என்ன உணர்வைக் கொண்டு வருவார்கள் என்பது தெரிந்ததுதான். இந்த இடத்தில் வைத்து உன் தலைவரையும், என் தலைவரையும் சக்கரவர்த்தியின் தலைவரையும் பார்க்கவா அல்லது பார்ப்பதா என்ற கேள்வியும் எழாமல் இல்லை. ஆக இந்த நாடகம் நேர்நிலையாகவா ஆகவா எதிர்மறையாகவா இந்த வரிசையைச் சொல்கிறது என்ற மயக்கமும் எழாமல் இல்லை. அது நாடக ஆசிரியருக்கு எழுந்ததா என்பதை அவர் எழுதினால்தான் தெரியும். "In the Name of Buddha" என்ற படத்தை உன் தலைவரின் தேரவாளரும், என் தலைவரின் ஆதரவாளரும், சக்கரவர்த்தியின் தலைவரின் ஆதரவாளரும் விழுந்து விழுந்து தத்தமக்கு தமக்கு ஆதரவாக, உள்ளதாக எண்ணியெண்ணி பார்த்துபோல இந்த நாடகத்தையும் பலமுறை பார்க்க இடமிருக்கிறது.

முற்போக்கு அல்லது பின்-முற்போக்கு எண்ணம் கொண்ட இப்படிப்பட்ட நாடகத்தில் கையாளப்படும் சொற்கள் குறிப்பானதாக நுணுக்கமானதாக இருக்கவேண்டிய கட்டாயம் உள்ளது. தத்துவங்களை உதிர்க்கும் போது எழுந்தமானத்துக்கு சொற்களை பயன்படுத்த முடியாது. முதலாவது "சத்திரிய" என்ற சொல்குறித்து... சத்ரியன் என்ற சொல்லை உரியபடி எடுத்துக் கொள்ளும் போது "வைஸ்ய, பிராமண, சூத்திரத்தை" (நாங்கள் அனைவரும் விலைமகள் வாரிசுகள் என்பதை - பிராமணர் தவிர்ந்த தமிழர் அனைவரும்) ஏற்பதாகவே பெருள்படும் இடறல் ஏற்படும். தவிர்க்க முடியாது. கட்டமைக்கப்பட்ட சொற்களை அவற்றின் சொல்லாடல்களுக்குள்ளாக உள்வாங்குகையில் இருக்கும் இடர்ப்பாடு இது. இரண்டாவது "சிங்கிள் மொம் அடித்துவிடுவேன்" என்பது. "சிங்கிள் மொம்" என்பது பெண்களின் விடுபடலுக்கான ஒரு கருத்தாக்கம். அந்தச் சுதந்திரத்தை கனடா மிகவும் வாய்ப்பானதாக பெண்களுக்கு மாற்றித்தந்திருக்கிறது இங்கு. இதுவே கனடாவில் பெண்களிற்கு இருக்கும் இறுதிப்புகலிடம். அதனை கேலிக்குள்ளாக்கும் வகையில் பாவித்திருப்பது கண்டனத்திற்குரியது. உண்மையில் "சிங்கிள் மொம்" சிக்கல் பற்றி கருமையத்தின் முதலாவது நிகழ்வில் பெண்கள் பட்டறையினர் தாராளமாக பார்த்திருக்கவேண்டும். ஆனால் அது அவர்களால் விடுபட்ட நிலையிலும் negetive ஆக இந்த நாடகத்தில் பயன்படுத்தியிருப்பது, அதை பயன்படுத்தப் "பெண்கள் பட்டறையின் ஆய்வுகள்" இடங்கொடுத்திருப்படுதும் கண்டனத்திற்குரியது என்பது எனது தாழ்மையான கருத்து. மேலும் இது தனியான விவாதத்திற்கும் உரியது. பெண்கள் பட்டறையினர் இந்தக் கருத்தை தங்கள் கவனத்தில் கொள்வார்கள் என்று நம்பலாம்.

தொடர்ச்சி 18 ஆவது பக்கம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# லண்டன் பத்மநாபனின்பாசிச இலக்கியப் பணி

## ஒரு விரிவான ஆய்வுக்குரிய முன்னுரை

எம்.ஆர்.ஸ்ராலின்

இலங்கையின் தமிழ்ப்பாசிசம் பலமாக வேரூன்றியதின் பலனாக அது தனது சமூகத்திற்குள்ளேயே ஒரு சுதந்திரமான சிந்தனைச் சூழலை கடுமையாக மறுத்து வந்துள்ளது. இதன் காரணமாக வெறும் சிந்தனை வரட்சியானதும் அதிகாரத்திற்குத் துதிபாடத் தக்கதுமான கூட்டமொன்றையே இலங்கையில் உருவாக்க தமிழ்ப்ப பாசிசமானது தனது எல்லாவித வளங்களையும் பயன்படுத்தியது.இதே வேளைகளில் அதிலிருந்து தப்பி சுதந்திர சிந்தனை கொண்ட ஒரு சிலர் மட்டுமே அந்நிய நாடுகளில் தஞ்சமடைந்து பாசிசத்திற்கு சேவை செய்ய மறுத்து குறைந்த பட்சம் சுயமரியாதையையாவது காத்துக் கொண்டனர். இது நடந்தது 1980களின் பின்னர் எனலாம். இதன் விளைவாகத்தான் புகலிட இலக்கியம் என்ற மறுத்தோடிக் குரல்கள் இந்தப் பாசிசச் சூழலுக்கு எதிராக தம்மை அடையாளப்படுத்தின.

அதில் ஒரு முக்கிய புள்ளியாக, ஆசியா நிறுவனத்தின் செயற்பாட்டாளரான திரு.சபாலிங்கம் அவர்களைச் சொல்லலாம். புகலிட இலக்கியச் சந்திப்பக்களுக்கும் மாற்றுச் சஞ்சிகைகளுக்கும் ஊக்கம் அளிப்பவராகவும் சுதந்திரப் படைப்பாளிகளுக்கு உரமூட்டுபவராகவும் அவர் இருந்தார். செல்வத்தின் ‘கட்டிடக்காட்டுக்குள்’ ஜெயபாலனின் ‘சூரியனோடு பேசுதல்’ அருந்ததியின் ‘இரண்டாவது பிறப்பு’ அப்போதைய சேரனின் ‘எரிந்து கொண்டிருக்கும் நேரம்’ சோலைக்கிளியின் ‘ஆணிவேர் அறுந்த நான்’ என்றவா-றாக அவரது வெளியீடுகள் தொடர்ந்தன. ஆனால் புலிகளால் அவர் கொலை செய்யப்பட்ட அன்றோடு சுமார் 30க்கும் மேற்பட்ட சிறு சஞ்சிகைகள் வெளி வந்த சூழலே நின்று போனது. பட்டப்பகலில் பரீசின் புறநகர்ப் பகுதியில்இருந்த அவரது வீட்டில் வைத்து அவரைக் கொல்வதற்கு போடப்பட்ட திட்டத்தை விட யாரைக் கொல்வதினூடாக புகலிட இலக்கியத்தின் மாற்றுக் கருத்தையே நிறுத்தி விடலாம் என புலிகள் போட்ட கணக்கு அபாரமானது.

இந்தப் படுகொலையின் பின்னர் இலங்கை போன்றே புகலிடத்திலும்புலிகளின் பினாமிகளும் பினாமிகள் அல்லாதோருமாக இலக்கியக் கடை விரித்தனர்.1994 மே மாதம் முதலாம் நாள் சபாலிங்கம் கொல்லப்படுகிறார்.1995ம் வருடம் முழுக்க புகலிட இலக்கியம் ஸ்தம்பித்து நின்றது. 1996ம் ஆண்டு ஈழமுரசின் (புலிகளின் பினாமிப் பத்திரிகை)ஆதரவுடனும் இலண்டன் தமிழர் நலன்புரிச் சங்கத்தின் (அதே பினாமி) நிதியுதவியுடனும் ஐயரின் பாசிசப்பணி தொடங்கி வைக்கப்பட்டது. அடுத்த ஆண்டு கிழக்கும் மேற்கும்(97)அதன்பின் இன்னுமொரு காலடி(98) யுகம் மாறும்99) பிற்பாடு கண்ணில் தெரியுது வானம் என்று மிக ஒழுங்கான நிதி வழங்கலுடன் மாற்று இலக்கியப் பாரம் பரியத்தைக் கொலை செய்து 20 நூற்றாண்டுத் தமிழன் என்று நெஞ்சை நிமித்திய பத்மநாபன் அனைத்துலகத் தமிழ்ப்படைப்புக்களின் தொகுப்பு என்று ஒவ்வொரு தொகுப்பின் கீழும் அடிக்குறிப்பிட்டு புலிகளால் தொலைக்கப்பட்டவை போக எஞ்சி அடங்கி வாய்மூடிக் கிடந்த எழுத்தாளர்களை ஒன்று கூட்டி நோகாத இலக்கியம் படைத்தார். போதாக்குறைக்கு “வாரந்தோறும் சமூகப் பொறுப்புடன் வெளிவருவது” என்று சபாலிங்கத்தைக் கொன்று ஏப்பம் விட்ட புலிகளது உத்தியோகப்பற்றற்ற பத்திரிகையான ஈழமுரசிற்கு போடப்பட்ட பட்டுக்குஞ்ச விளம்பரங்களையும் அவரது தொகுப்புக்களில் காணலாம்.

இவரது அவசியமான சில வரலாற்றுக் குறிப்புக்கள்:

1.சுமார் ஐம்பதாயிரம் இந்திய ரூபா பெறுமதியான புத்தகங்களை புலிகளுக்காக கடத்தி கடலுக்கள் கோட்டை விட்டவர்.

2. இவர் யேசுராசாவுடன் இணைந்து அலை பத்திரிகையை புலிகளுக்குத் தாரைவார்த்தவர்.

3.1991ம் ஆண்டு “உலகமெலாம் வியாபாரிகள்” என்ற இராஜேஸ்வரியின் நாவல் லண்டனில் வெளியிடப்பட்டபோது சேரனின் வரவை ஒட்டி அவ்விழாவைப் பகிஸ்கரித்தவர். கவிஞர் சேரன் அப்போது புலிகளுக்கு வேண்டப்படாதவராக இருந்தார்.

இவரது இந்த நடவடிக்கைகள் அவருக்கான அரசியல் உரிமை என்பதை யாரும் மறுக்க முடியாது. அதேவேளை புலிகள் பண்ணும் அனைத்து மானிட விரோதங்களையும் மௌனமாக அங்கீகரித்து அவர்களுக்கு வசதியான புலி இலக்கியப் பணியாற்றும் பத்மநாபன் பண்ணுவது எல்லாம் ஒரு பாசிசப் பணியே என நான் கூறுவதையும் யாரும் மறுக்க முடியாது.

இவரது தொகுப்புக்களில் ஒரு கலாமோகனோ ஒரு கலைச்செல்வனோ சக்கரவர்த்தியோ சோபாசக்தியோ சுகனோ எழுதுவதைக் காணமுடியாது. ஆனால் வருசந் தவறாது பிரான்சில் இருந்து ஈழமுரசு கி.பி அரவிந்தனும் சுபாஷ் என்று அழைக்கப்படும் பரீஸ் புலி தா. பாலகணேசனும் ஐ.பி.சி. ரவி, ஐ.பி.சி. சந்திரா மு.புஸ்பராசன் போன்றோரும் தமது எழுத்துக்களை ஐயர் தனது தொகுப்புக்களில்

தொடர்ச்சி 28 ஆவது பக்கம்...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முந்தைய கேள்வி: "உண்மையில் நீர் நல்ல எழுத்தாளர்தானப்பா" என்று எப்போது உங்கள் மனைவியின் அங்கீகாரம் எப்போ கிடைத்தது?

no comments , with comments !

முந்தைய பதில் :...

**கேள்வி:** கனடா இலக்கியத் தோட்டத்தில் உங்கள் பங்கு என்ன?

**பதில்:** கனடா இலக்கியத் தோட்டமும் தென்னாசியக் கலவி மையமும் இணைந்து வருடாவருடம் (life time achievement award) வாழ்நாள் இலக்கிய சாதனைக்கான இயல்விருது வழங்கி வருகின்றார்கள். இந்த விருது 1500 டொலர் பண முடிப்பும் கேடயமும் கொண்டது. வருவடாவருடம் இதைத் தொடருவதற்காக ரொன்ராப் பல்கலைக்கழகத்தில் ஒரு அறக்கட்டளை நிறுவப்பட்டிருக்கிறது. ஆங்கில இலக்கியம் படைக்கும் எழுத்தாளருக்கு கனடாவில் வருடாவருடம் கொடுக்கும் கில்லர் இலக்கியப்பரிசு இருக்கிறது. அமெரிக்காவில் புலிட்சர் பரிசு, இங்கிலாந்தில் புக்கர்பரிசு. ஆனால் தமிழில் எழுதும் எழுத்தாளருக்கு உலக அளவில் என்ன பரிசு இருக்கிறது. முதல் முதலாக உலகம் அனைத்தையும் தழுவிய பரிசு இதுதான். பரிசைப்பெறுவதற்கு தமிழராகக் கூட இருக்கவேண்டிய அவசியம் இல்லை. அவர் எந்த நாட்டிலும் இருக்கலாம். எந்த சமயத்தவராகவும் இருக்கலாம். எந்த நிறத்தவராயும் இருக்கலாம். அவர் தமிழில் படைத்திருக்கவேண்டும். அல்லது தமிழ் வளர்ச்சிக்கு ஏதோ ஒரு வகையில் பாடுபட்டவராக இருக்கவேண்டும். தமிழில் இலக்கிய சேவை, அது ஒன்றே அளவுகோல். மூன்று வருடங்கள் தொடர்ந்து இந்தப் பரிசுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. 4 ஆவது வருட அறிவித்தல் விரைவில் வெளிவிடப்படும்.

அடுத்த கேள்வி: உலகின் பல நாடுகளுக்குச் சென்றுள்ளீகள் ஆனால் கனடாவை வாழ்வதற்கு தேர்ந்தெடுத்த காரணம் என்ன?

அடுத்த பதில்: ...

மிகுந்த சிரமப்பட்டு இந்தப் பதிலுக்கான பேட்டி கண்டவர்கள் : வெங்கட் ரமணன், என்.கே.மகாலிங்கம், செழியன். இவ்வளவு சிரமமான கேள்வியைக் கேட்ட அவர்களுக்கு வாழத்துக்கள்.

**கேள்விக்கும் பதிலுக்கும் ஏதாவது தொடர்பிருந்தால் கண்டு பிடித்து தருபவர்களுக்கு 51 டொலர் (கனடிய) பரிசு வழங்கப்படும். திரைப்படத்தில் தமிழக அரசியல்வாதிகளிடம் கேள்வி கேட்டு தொடர்பில்லாமல் நகைச்சுவைக்காக பதில் பெறுவதுபோல இருக்கிறது என்று கூறக்கூடாது.**

**தற்போதைய பேட்டிகள். கேள்வி ஒன்று, பதில் பதினொன்றாக இருக்கிறது. அட ! கேட்ட கேள்விக்கு பதில் சொல்லுங்கப்பா. இப்படிப் பதில் சொன்னால் 5ஆவது வாத்தியார் கூட ஏற்றுக் கொள்ள மாட்டார்.**

பிந்தியதாக வந்த காலம் இதழில் அ.முத்துலிங்கத்தின் பேட்டி வந்திருக்கிறது. அதில் வந்திருக்கும் பகுதி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குலத்தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்

முதல்கோணல் முற்றிலும் கோணல் என்பது வேறு எவற்றையும் விட இன்று இயல்விருதுக்குத்தான் பெருந்திப்போகிறது. சுந்தரராமசாமி வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்படவேண்டிய ஒரு குற்றவாளி என்று தலித் முரசு மார்ச் 2005 இல் ஜெனிபரும் ஆழ் மன வக்கிரங்களின் வெளிப்பாடு என்று பூங்குழலியும் கேணத்தனமான கதை என்று பாமாவும் அவருடைய "பிள்ளைகொடுத்தாள் விளை" எனும் சிறுகதைக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்கள். முழுக்க முழுக்க சாதி வெறிக் கண்ணோட்டத்தில் எழுதப்பட்ட / சுந்தர(ர்) ராமசாமியின் 'படைப்பு'லகம் குறித்து பலர் எச்சரித்துள்ளனர்.

ஒரு புளியமரத்தின் கதை குறித்து ராஜன் குறை கட்டுடைத்தார். ஜே.ஜே சில குறிப்புக்கள் மீது பிரேமிள் தொடங்கி சாரு நிவேதிதாவரை காறி உமிழாதவர் இல்லை. சமகால இலக்கியச் செல்நெறியும் அதன் அறமும் இதுதான். இது எதற்கும் சம்மதம் இன்றி நான் கொடுப்பேன் உன்னால் என்ன செய்ய முடியும் என்று திமிர் பிடித்து திரிந்தால் நாம் எதுவும் சொல்வதற்கில்லை. வெ.சா., ப.நா என்று இது நீண்டு கொண்டு போவது நல்லதுக்கில்லை.

வெ.சாவை அவருடைய இடது சாரி எதிர்ப்பிற்கும் எழுத்திற்கும் மட்டுமாகவே தமிழ் உலகில் அறியப்பட்டவர். அதற்கு மட்டுமாகவே. அவரது ஈழத்துப் படைப்பான யேசுராசா என்ற இடது சாரி எதிர்ப்பாளர் என்ற காரணத்தினால் ஏச்சு ராசா என்ற யேசு ராசா (இதையாரும் விரும்பினால் திருத்தி வாசிக்ககவும்) இந்த சுழல் வட்டம்... இது ஒரு சுழல் வட்டம்.

இன்றைக்கு 21 ஆவது நூற்றாண்டின் தொடக்கத்தின் பின்னரும் இன்னும் ஆழிப்பேரலையின் பின்னரும் தனது பெய ருக்கும் பின்னால் ஒருவர் தனது சாதிப் பெயரைப் பாவிக்கிறார் என்றால் அவர் நாசிகளுக்கு ஒப்பானவர். அல்லது அவர்களிலும் கேவலமானவர். தன்னை ஐயரென்று சொல்லிக்கொள்வதற்கு இன்றும் வெட்கமடையாதவர்.

நாமும் நமது வெளியீடுகளில் பலமுறை பத்மாநபனின் பின்னால் இருக்கும் ஐயர் என்ற சாதிப்பெயரை நீக்கக் கோரி கோரிக்கை விடுத்தாயிற்று. அது பிறப்பால் வந்த பெயரென்று அவரும் அவருக்குள்ள சாதிப்புத்தியோடு பதில் சொல்லிக்கொண்டு வருகிறார். நீ அவரை (பிறப்பால்) ஐயரென்று ஏற்றுக் கொள்கிறாயா? ஏற்றுக்கொண்டால் உன்னை நீ நளவனென்றும் பள்ளனென்றும் பறையன் என்றும் சூத்திரன் என்றும் (வேசி மகன் ) என்றும் ஏற்றுக் கொள்கிறாய் என்று அர்த்தமாகிறது. தனது சாதியை இழக்க விரும்பாத, இன ஒதுக்கலுக்கு ஒப்பான, நாசிகளுக்கு ஒப்பான ஒருவனை அங்கீகரித்து விருது கொடுப்பது என்பது ஆதிக்க சாதி மனோபாவத்தின் கொடூரமே. ஆதிக் கமனோபாவம் தனக்கு உவப்பானதுகளை மாத்திரம் ராச பீடங்களில இருத்தி அவற்றை உன்னதப்படுத்தி ஏனையவற்றை இழிவு படுத்தும் செயலைக் "காலம்" காலமாகச் செய்து வருகிறது. இது தான் விருது வழங்கி கௌரவித்தலும் புனிதப் படுத்தலும். இந்தப் புனிதப் படுத்தலில் சுந்தர ராமசாமி, வெங்கட் சாமிநாதன், இன்று லண்டன் பத்மநாபன்.

இந்த பல்கலை வீரர்களின் வாய் என்னமோ தெரியவில்லை, சில பெயர்களை உச்சரிக்கப் பயப்படுகிறது. இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு இலக்கியப்பாலம் அமைத்த எஸ்.பொ, இந்தியாவிலும் இலங்கையிலும் இலக்கியமும் போராட்டமுமாய் வாழ்ந்த டானியல், 40 வருசமாய் புத்தகம் போட்டு புத்தகம் போட்டு இலக்கியச் சேவையாற்றும் டொமினிக் ஜீவா, பேராசியரியர் சிவசேகரம், பேராசிரியர் சிவத்தம்பி இவர்களெல்லாம் யார்? தங்கள் குலத்தொழிலை விடுவிட்டு எழுத்தும் இலக்கியமும் போராட்டமுமாய் வாழ்வதாலா இவர்களுக்கு இவ்விருதுகள் **தீண்டத்தகாததாகிவிடுகின்றன.**

சரி விடுவம். இந்த அதிகார விருது பெறும் இலக்கிய மகாத்மா இன்று வரை ஈழத்திலும் புலிகடத்திலும் எழுத்தின் பெயரால் கொல்லப்பட்டவர்களுக்காய் ஒருவரி ஒரு கண்டனம், ஒரு வாய்ச்சொல் சொன்னதுண்டா? இவர் ஈழத்திலிருந்து புகலிடத்திற்கு அழைத்த யேசுராசா, வில்ரத்தினம் போன்றோரிடமிருந்து ஒரு படுகொலைக்கான கண்டனம் எழுதி, சுதந்திரத்தின் பெயரால் இது வரை வந்ததுண்டா? இப்போது "புதிதாகப் போராட்டத்திற்கு" துரோகமிழைக்கும் எழுத் து முயற்சிகளுக்கு வெளியீட்டு முயற்சிகளுக்கு தான் துணைபோனது இல்லை என தினக்குரலிலும் தீராநதியிலும் தோழை உயர்த்தி (பிரெஞ் ஸ்ரைலில்), புகலிடத்தில் அவர் தவிர்ந்த பிற முயற்சிகளை, நம்மை, துரோகமிழைக்கும் என்பதாக அவரால் ஆக்க முடிகிறது. பின்கை காட்ட முடிகிறது. ஆதலால் எழுத்து தர்மம் இப்படி கேவலமாக முடிந்து போகிறது. இந்த மரபின் தொர்ச்சி நிறுத்தப்படவேண்டும்.

**- சுகன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பகுதி 4:

நாடகம் என்பதை வலிந்து வரையறைக்குள்ளாக வருவிக்க முடியாதுதான். ஆனால் கடந்த பல நாடக நிகழத்துதல்கள் மற்றும் பார்வைகளுக்கூடாக நாடகத்தை நல்லதாக்க விரும்பிக் கேட்கலாம். இதற் கு இடமுண்டு. மேலும் தமிழரது நாடக மரபு, இலங்கையின் நாடக மரபு, தற்போது புலம்பெயர்ந்தபின் உருவாகி இருக்கும் நாடக மரபின் பட்டறிவு இவைகளை கைவிட்டுவிட்டு ஒவ்வொரு தடவையும் ஒவ்வொருவரும் முதல் நாடகம் போட்டுக் கொண்டே காலத்தைத் தள்ளமுடியாது. ஒவ்வொரு மனிதரும் பரிணாமத்தின் படி குரங்காகப் பிறந்து மாறுவதில்லையே. கருவிலேயே பரிணாமக் காலங்களை விரைவாகக் கடந்து பிறக்கும்போது ஒவ்வொருவரும் மனித வடிவில்தான் பிறக்கின்றோம். அதேபோல நாடகங்களும் பயிற்சியின்போது கடந்தகால நாடகப் பட்டறிவுகள் மரபுகளைத் தாண்டி உன்னத நிலையில் பார்வையாளருக்கு முன்வைக்கப்படவேண்டும் என்று எதிர்பார்ப்பதில் தவறில்லையே.

ரொரன்ரோவின் நாடகப் போக்குகளில் ஏற்கெனவே இலங்கையில் இந்தியாவில் போடப்பட்ட நாடகங்களை மீண்டும் நிகழ்த்துதல் பெரும்பாலும் காணப்படுகிறது. மேலும் மொழிபெயர்ப்க்கப்பட்ட நாடகப் பிரதிகளைக் கையாள்வது, அல்லது புதிய வெளி-மொழிப் பிரதிகளைக் கையாள்வதும் அதிகமாக இருக்கிறது. அவற்றிலும் அபத்த நாடக வடிவங்களைக் கையாள்வதும் அதிகமாக இருக்கிறது. இது ஏன் என்றால் பதில் ஒருவரிடமும் இல்லை. ஆனால் நாடகப்பிரதிகள் புதிதாகவும் எழுதப்பட்டுத்தான் வருகின்றன. ஜெயகரன், செழியன், சகாப்பதன், சேரன், போன்றவர்கள் எழுதிய பிரதிகள் நிகழத்தப்பட்டிருக்கின்றன. ஏன் நம்மவர்களால் எழுதப்பட்ட பிரதிகளையும் அழகாக நாடகமாக்கலாம். அதிலும் நல்ல நாடகங்கள் இருக்கும் என்பது எனது கருத்து. (இந்தப் பெயர்களில் விடுபடல்கள் நிகழ்ந்திருக்கலாம்.)

நல்ல தரமான சிறப்பான அல்லது தரமான நிழத்துகை உள்ள நாடகங்களையே நாடக ஆர்வலர் எதிர்பார்ப்பது. அதில் கருத்துக்கள், கருத்தியல்கள், பிரச்சாரங்கள் வரலாம். இருக்கலாம். ஆனால் கருத்தியல்கள், பிரச்சாரங்கள், அரசியல்களையே நாடகமாக்கினால் பார்ப்பதற்கு ஆளையும் கட்சி கட்டிப் பிடிக்க வேண்டிய நிலைதான் ஏற்படும். தேவை நல்ல நாடகங்களே. நல்ல பிரச்சாரங்களல்ல. அதற்கு நிறைய வழிமுறைகள் இருக்கின்றன. அதற்கான எதர்பார்ப்புக்களும் இருக்கின்றன.

இந்தக் கட்டுரை 26 மார்ச் 2005 அன்று நடந்த "கருமையம்" முதல் நிகழ்வின் விமர்சனக் கூட்டத்திற்கு முன்னர் எழுதப்பட்டது. அந்தக் கூட்டத்தில் பங்கு பற்றியபின் நல்ல நாடகத்திற்கான ஏக்கத்தில் இவ்வளவு பக்கங்களை விணடித்து இதை எழுதிவிட்டோமே என்ற கவலை - எண்ணம் தான் வந்தது. 12 ஆவது அரங்காடல் விமர்சனக்கூட்டத்தில் சொல்லப் பட்டதுபோல இங்கும், தலமை வகித்தவரால், "இது ஒரு அமைப்பு, மாற்றுக் கருத்துக்களுக்கும் மாற்றுக் கலாச்சாரத்துக்குமான அமைப்பு, நாடகம் இரண்டாம் பட்சம் தான்" என்று திருப்ப திருப்ப கூறப்பட்டது. நல்ல நாடகத்திற்கு, ஜெயகரனிடம் அல்லது ஞானம் லெம்பெட்டிடனம் அல்லது புதிய வேறு யாரிடமாவதுதான் செல்லவேண்டுமா?

## இலக்கியத் தோட்டத்தின் முன்னுள்ள முதல் கடமை...

**வரன்**

இலக்கியத் தோட்டத்தினால் வழங்கப்பட்ட விருது பற்றிய சர்ச்சை உருவாகியிருக்கிறது. அதை தவிர்ப்பதற்கான நிதானமான முற்சிகளும் நடக்கின்றன. இந்த சர்ச்சை ஒரு தனி மனிதருக்கு எதிரானது அல்ல. பல்வேறு கருத்து நிலைகளின் முரணில் உருவாவது.

விருதுகளுக்கு உடன்பிறவிபோல சர்ச்சை எப்போதும் இருந்து கொண்டிருக்கிறது. பல நேரங்களில் சர்ச்சைகள் உருவாகி விருதுகளை வழிப்படுத்தியிருக்கின்றதையும் நாம் வராலாற்றில காணக்கூடியதாக உள்ளது. சர்ச்சை உருவாகியும் திருந்தாத விருதுகள் பலவற்யையும் சொல்லலாம். எடுத்துக் காட்டாக அமெரிக்க அதிபர் ரூஸ்வெல்ற்க்கு அமைதிக்கான நோபல் பரிசு கொடுக்கப்பட்டபோது பெரிய சர்ச்சை எழுந்தது. அன்று அதற்கு செவிசாய்த்திருந்தால் ஒவ்வொரு நாட்டிலும், பிரதேசத்திலும் ஏதோ ஒரு நல்ல/கெட்ட, சரியான/ பிழையான காரணங்களுக்காக சண்டைபோட்டு, பல்லாயிரக் கணக்கான உயிர்கள் கொல்லப்பட மறைமுகமாகவோ நேரயடியாகவோ காரணமாக இருந்துவிட்டு, எவ்வித கூச்ச நாச்சமுமின்றி தாங்கள் களைததுப்போன நிலையில் அரசியல் மயமாகி தங்கள் தொண்டர்களை விட்டு பரிந்துரை செய்து நோபல் சமாதானப்பரிசைச் பெற்றுக் கொண்டு போகலாம் என்ற நிலை வந்திருக்காது. ஆனால் அதே விருது அன்னை தெரசா போன்றவர்களிற்கும் வழங்கப்படுவதுதான். அதன் மறுதலையும் உண்டு. முதல் முதலாக ஒரு ஆப்பரிக்க்ப பெண்மணி விருது வாங்கிவிட்டார் என்பதற்காக(மாத்தாய்) அவர்மீது போலியாக குற்றச்சாட்டை முன்வைக்க உலக, மேற்குலக பிற்போக்குவாதிகள் முனைவதும் கண்கூடானதாக இருக்கிறது.

இந்நிலையில் பிந்தியாதாக அறிவிக்கப்பட்ட இயல்விருது தற்போது சர்சைசையை உருவாக்கியிருக்கிறது. பலவிதமான காரணங்களை ஒவ்வொருவரும் தங்களது சார்பு நிலை சார்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். தனிப்பட்ட காரணங்களை விட நேர்மையான காரணங்கள் முன்வைக்கப் படுமாயிருப்பின் விருதுக் குழுவினரோ ரொரன்ரோப் பல்கலைக்கழத்தின் தெற்காசிய மையமோ (South Asian center of University of Toronto)கவனத்தில் அதைக் கொள்ளவேண்டும் என்பதே பரந்துபட்ட சமூக அறிவுள்ளவர்களின் எண்ணமாக இருக்கும்.

தொடர்சி 28ஆவது பக்கம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தெரிதா

**- வின்சென்ற்**

**பொது அறிமுகம்**

ஏறக்குறைய 80 ஆக்கங்களை எழுதிய தெரிதா பிரான்சின் மிகப் புகழ்பெற்ற மெய்யியலாளர். ( மெய்யியல் என்பது தத்துவம் என்றும் தமிழில் வழங்குகிறது.) தற்போதைய காலகட்டத்தில் வாழ்ந்த, கடந்த 30 ஆண்டுகளில், ஒரு சினிமாக் கலைஞர் அல்லது பாடகர் அளவிற்கு புகழ்வாய்த்த மெய்யியலாளர் ஒருவர் உண்டென்றால் அது தெரிதா மட்டுமே என்று கூறுவதுண்டு. மேலும் பிரான்ஸ் உலகிற்கு தந்த பல அறிஞர்களிடையே உலகளவில் மிகப்பிரபலமானவரும் தெரிதாதான். அவருடைய மெய்யியல் முறைமையின் கருவியான கட்டுடைத்தல் (கட்டவிழ்த்தல் என்பதும் சில தமிழ் எழுத்துக்களில் இருக்கும்) என்பதே அவரை மிகப்பிர-பலப்படுத்தியது. அமெரிக்காவில் ஆற்றிய ஒரு உரையில் அவர் செய்யத அந்த வழிகாட்டுதல் அல்லது மெய்யியல் ஆய்வுக்கான கருவி அனைத்துத் துறைகளையும் காட்டுத்தீபோல் பற்றிக்கொண்டது என்பார்கள். இன்றுவரை அதன் தாக்கம் குறையவில்லை. எந்தத் துறையை என்று சொல்வதற்கில்லாதபடி அது பல துறைகளை ஊடறுத்து தன் தாக்கத்தைச் செலுத்தியிருக்கிறது. இந்த வகையில்தான் தெரிதாவை நாம் இங்கு அறிமுகப்படுத்த முடியும்.

தெரிதா தான் ஒரு தெரிதாவியலாளராக இருந்ததில்லை. மெய்யியல் துறையில் மட்டுமல்லாது கல்வித்துறையிலும் பெரிய நாட்டம் காட்டியதில்லை. போல் ரிக்கோருக்கு (Paul Ricoeur) பின்னர் அந்த பதவியிடத்திற்கு வரவேண்டும் என்ற தேவைக்காகவே தனது ஆய்வு ஏட்டை நிறைவு செய்தார் என்கின்றனர். அவ்வளவு நாட்களும் அவர் ஆய்வேட்டை முடிப்பது பற்றிக் கவலைப்படவில்லை. அதாவது தெரிதா முனைவர் அல்லது கலாநிதி பட்டத்திற்கு அப்பாற்பட்டுத்தான் இவ்வளவு பிரபல நிலையை அடைந்தார்.

> மரியாதைக்குரிய முனைவர் பட்டத்தை கொடுப்பதற்காக வாக்கெடுப்பு நடத்தப்பட்டது தெரிதாவிற்கா கத்தான் இருக்கும்

1992 இல் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் தெரிதாவிற்கு மரியாதைக்குரிய முனைவர் பட்டம் கொடுக்கத் தீர்மானிக்கப் பட்டது. இதுவரை யாருக்கும் எதற்காக இத்தகைய மரியாதைக்குரிய பட்டங்கள் கொடுக்கப் படுகின்றன என்பது தெரியாது. பலருக்கும் பலவித நோக்கத்தோடு பல்கலைக்கழகங்கள் இவற்றைக் 'கொடுக்கின்றன'. பலரும் சில பல்கலைக் கழகங்களில் இருந்து அவற்றை 'வாங்கிக் கொள்கின்றனர்'. ஒவ்வொருவருக்கும் பலவித தேவைகள் இருக்கின்றன. தெரிதாவிற்கு இந்தப் பட்டம் கொடுக்கப் போவதாக அறிவிக்கப்பட்டவுடன் விருது பற்றித் தீர்மானிக்கும் ஆணைக்குழுவில் மூவர் அதனைக் கடுமையாக எதிர்த்தார்கள். ஒருவர் ஆங்கிலத்துறைப் பேராசிரியர், மற்றவர் வரலாற்றுத்துறை ஆய்வாளர் மற்றும் மெய்யியல் துறைப் பேராசிரியர் ஆகியோரே அவர்கள். ஆனால் பின்னர் நடந்த ஆட்சிக்குழுவின் தீர்மானத்தின்படி தெரிதாவிற்கு மரியாதைக்குரிய முனைவர் பட்டம் கொடுப்பது பற்றி வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது. பட்டத்தை வழங்கவேண்டும் என்று 336 வாக்குகளும் எதிர்ப்பு நிலைப்பாட்டில் 204 வாக்குகளும் இருந்தன. எனக்குத் தெரிந்து மரியாதைக்குரிய முனைவர் பட்டத்தை கொடுப்பதற்காக வாக்கெடுப்பு நடத்தப்பட்டது தெரிதாவிற்காகத்தான் இருக்கும் என எண்ணுகின்றேன்.

இந்த பட்டத்தைக் கொடுக்கக்கூடாது என பலத்த பரப்புரை நடந்திருக்கிறது. 19 பேர் சேர்ந்து ரைம்ஸ் இதழுக்கும் அதுபோன்ற வேறு பல ஏடுகளுக்கும் எதிர்ப்புக் கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். "பிரான்சின் மெய்யியல் கல்விப்பிரிவு சில குருக்களாலும் சிலவிதமான பாணிகளாலும் சில அதிகாரப் பிரிவினராலும் நடத்தப்பட்டு வருகிறது. பிரித்தானியப் பகுதியைச் சேர்ந்த மெய்யயிலாளர்களால் வீரியமானதாக, பிரித்தானிய தரத்தில்வாய்த்ததாக, தெளிவானதாக, குறிப்பானதாக பிரெஞ்சு மெய்யயியல் கல்வி அடையாளம் காணப்படுவதில்லை." என்று இந்த எதிர்ப்பை முதலில் தொடக்கியவரான David-hillel Ruben கூறியிருக்கிறார். ஆனால் தெரிதாவைப்போல் இவரும் ஒரு யூதர்தான்.

"இந்தக் காலத்தில் ஒரு குறிப்பிட்ட சிலர் கோட்பாடு என்ற பெயரில் எதையோ முன்வைக்கிறார்கள். ஒரு முறையான மெய்யியலாளர் இதை அனுமதிக்கமாட்டார் என நான் நினைக்கிறேன். இந்த தெரிதா எப்படிப்பட்ட வகையைச் சேர்ந்த எழுத்தாளர்? இவர் ஒரு தோல்வியடைந்த கோட்பாட்டாளரா? ஒரு கோட்பாட்டாளர் இல்லையென்றால் இவர் யார்?" இவ்வாறு குற்றம் சாட்டியவர் மூவரில் ஒருவரான Henry Erskine-Hill என்ற வரலாற்றுத்துறை ஆய்வாளர்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"பிரஞ்சுக்காரர்கள் புதிதாக உருவாக்கப்பட்ட பல சொற்களைப் பயன்படுத்தி, சரியான பொருளைக் கண்டறியாத முடியாதவாறு, மயக்கம் ஏற்படுத்தக்கூடிய உளறல்களை பயன்படுத்துவார்கள். இதனால் சரியான பொருளெதுவும் ஊகிக்கப்படமுடியாது போய்விடும். கட்டுடைத்தல் என்பது மிகவும் குழப்பமான பொருள் ஊகிப்பிற்கு இடையூறு விளைவுக்கும் வகையில் மிகத் தயாரான நிலையில் இருக்கும் ஒரு கோட்பாடாகும்" இவ்வாறு புலம்பியவர் Peter Lennon. இந்தப் பீற்றர் ஒரு பத்தி எழுத்தர் என நினைக்கிறேன். ஏனெனில் இந்தச்சிக்கல் நடந்த காலகட்டத்தில் அதாவது 1992 இல் இந்தப்பெயரில் கட்டுடைத்தல் முறையை நக்கல் செய்து பின்வருமாறும் கார்டியன் இதழில் ஒருவர் எழுதியிருக்கிறார். " கட்டுடைத்தலைப் பயன்படுத்தி ஒருவர் (Adolf Hitler, Mein Kampf என்ற நூலைக்கூட பார்க்கலாம். அதன் மூலம்) ஹிட்லர் யூத எதிர்ப்பு நிலைப்பாட்டில் தனக்குள் முரண்பட்டுக்கொண்டு இருந்தார் என்று கூறி முடிக்க இடமிருக்கிறது." என்பது அவரது வாதம்.

ஆனால் இவருக்கு விருது கொடுக்க வேண்டும் என்று பரிந்துரைத்தவர்கள் தெரிதாவின் பல்லாயிரம் பக்கங்கள் கொண்ட, உலகத்தில் பல துறைகளிலும் பாதிப்பை ஏற்படுத்திய, அவரது எழுத்துக்களை முன்வைத்து வாதாடினார்கள். "மரபு வாதிகள் தங்கள் பதவி அதிகாரத்தில் இருந்து தெரிதாவிற்கு எதிரான, வெறும் மலினமான வாதங்களையே முன்வைக்கிறார்கள். நிறுவப்பட்ட ஒரு ஒழுங்கு முறையிலிருந்து வேறு ஏதும் வெளி வருவதை அவர்கள் விரும்புவதில்லை. குறிப்பாக மெய்யியல் நிலைப்பாட்டில் அவர்களை மீறி எதுவும் வெளிவருவதை அவர்கள் விரும்புவதில்லை." இவ்வாறு தெரிதாவின் ஆதரவாளர்கள் மரபு வாதிகளை சாடினார்கள். இந்த கேம்பிரிட்ஜ் சிக்கலில், உண்மையில் பிரஞ்சு புலமையாளருக்கும் ஆங்கிலேயே அல்லது பிரித்தானியப் புலமையாளருக்கும் இடையே தொடர்ந்து இருந்து வந்த மறைமுகப்போரே பின்னின்றது என்றும் கொள்ள இடமுண்டு. அமெரிக்கர்களுக்கு பிரஞ்சு சமூக விஞ்ஞானத்துறைகளில் வரும் புத்தாய்வுகள் எவ்வளவு தூரம் பிடிக்குமோ, அதே அளவிற்கு, பிரித்தானியர்களில் ஒரு சாரார் பிரஞ்சுக்காரர்களின் சமூகவிஞ்ஞானப் பங்களிப்புக்களை மூர்க்கத்துடன் மறுத்து வருகிறார்கள் என்பதும் ஒரு காரணம்.



தெரிதாவினுடைய குணங்களைப்பற்றி எழுதும்போது பிரான்சின் கிழமைக்கு இருமுறை வரும் இதழான லிபரேசனில் பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது: தெரிதா யாரையும் பாரத்து நீங்கள் எனது நண்பர் என்று சொல்ல மாட்டாராம். நான் உங்களது நண்பன் என்று சொல்வராம் என்று கூறியிருக்கின்றனர். (இதை பிரஞ்சிலும் ஆங்கிலத்திலும் பின்வருமாறு கூறலாம். You are my friend / I am your friend = tu es mon ami / je suis ton amis)

பிரான்சின் சமூக அறிவியலுக்கான உயர் கல்லூரியில் இருந்தார். அதே நேரம் இவர் மெரிக்காவிற்கும் அடிக்கடி பறந்துகொண்டிருந்தார். அதை ஒரு குறையாக பிரான்சில் கூறியிருக்கின்றனர். அதற்கு அவரின் பதில் பின்வருமாறு இருந்தது: "நான் நீண்ட நாட்கள் ஒருபோதும் ஐக்கிய மாநிலங்களில் (US)தங்கியதில்லை. என்னுடைய காலம் அங்கேயே கழியவில்லை என்பது மிகத் தெளிவு. எனது வேலைக்குரிய, பணிக்குரிய, எதிர்பார்ப்பு அங்கே மிகக் கவனத்துக்குள்ளானது. பிரான்சைவிட அங்கே கல்வித்துறையில் தணிக்கை குறைவு. (எனக்கு) முரண்பாடுகள் எதிர்ப்பு எல்லாம் குறைவு." மற்றுமொரு இதழான l'Humanite யில் அவர் சொன்னதன் மொழிபெயர்ப்பு இது.

தெரிதா தொலைக்காட்சி பார்ப்பதில் அதிக நாட்டமுள்ளவராய் இறுதிக்காலத்தில் இருந்தாலும் தொலைக்காட்சியில் தோன்றுவதற்கு மிகவும் தயங்கிக் கொண்டிருந்தவராவார். மேலும் ஒரு கொஞ்சக்காலம் எந்தவொரு புகைப்படத்திலும் அவர் தோன்றவில்லை. என்பதும் குறிப்பிடத்தக்கது. அதை தனது கொள்கையாகவே அவர் வைத்திருந்தார்.

தெரிதா தனது வாழ்நாளின் கடைசிக்காலத்தில் மிகவும் அதிகமாகத் தொலைக்காட்சி பாரத்துக் கொண்டிருந்ததாகச் சொல்லியிருக்கிறார். அதைப்பற்றி அவர் "நடப்பு நிகழ்வு பற்றி மிகவும் கரிசனையுன் இருக்கிறேன்." என்றிருக்கிறார். "நான் ஒவ்வொரு தடைவையும் தொலைக்காட்சி நிகழ்ச்சியையே கட்டுடைத்துக்கொண்டுதான் பாரத்துக்கொண்டிருக்கிறேன். ஒவ்வொருகணமும் அதைச் செய்துகொண்டிருக்கிறேன்" என்றிருக்கிறார்.

தெரிதாவைப்பற்றி சொல்பவை அவரது கருத்துக்களாயினும் வாழ்க்கை நடைமுறையாயினும் பல முரண்பாடுகளை முன்வைப்பவையாக அல்லது சுட்டுபவையாக இருக்கும். தெரிதாவைப்பற்றி சில நாட்களுக்கு முன்னர் பார்த்தவைகளுக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தற்போது கூர்ந்து எழுத விளைவதற்கும் இடையே நிறைய வேறுபாடுகள் எனக்கு தோன்றுகிறது. இப்படி நோக்கத்துடன் எழுதவருவது ஒரு வகையில் ஒரு தலைப்பட்சமானது அல்லது தன்னிலை சார்ந்ததாக இருக்கும் என்பது என்கருத்து. இப்படி ஆவதுதான் தெரிதா கூறிய பல பொருள் தரும் செயல்பாட்டின் ஏற்படுத்தும் விளைவு என்றும் கூற இடமுண்டு.

**தெரிதாவின் சில கருத்துக்கள்:**

தெரிதாவின் அடிப்படைக் கருத்தாக்கம் அனைவராலும் அறியப்பட்டது போல கட்டுடைத்தல்தான். ஆனால் இந்தக் கட்டுடைத்தல் என்ற கோட்பாட்டிற்கு வந்து சேரும் வரை அவர் பல கருத்துநிலைப்பாடுகளை முன்வைத்திருக்கிறார். இவை கட்டுடைத்தல் மட்டுமல்லாது பல விரிந்த தளங்களில் அவரின் மெய்யியல் உசாவலை வெளிப்படுத்தியிருக்கின்றன. இவை பல முன்னோடி மெய்யியலாளர்களின் கருத்துக்கள் மீதான மறு பரிசீலனையாகவோ, மாற்றிப் போடுதலாகவோ, மறு வாசிப்பாகவோஅல்லது புதிய விளக்கமளிப்பாகவோ இருந்திருக்கின்றன.

குறிப்பாக தெரிதாவின் அடிப்படையான முதல் கருத்தாக்கமாக, இதுவரைக்கும் இருந்த பாடங்களின் (Texts) மீது அவர் எழுப்பிய கேள்வியே முன்நிற்கிறது. சோக்கிரட்டீஸ் தொடக்ககால கிரேக்க மெய்யிலில் எதையும் எழுதவில்லை. அவருடைய வழங்கல்கள் அனைத்தும் வாய்மொழியாகவே இருந்தன. இவருடைய தொடர்ச்சியாளர் அல்லது மாணவன் என்று சொல்லக்கூடிய பிளேட்டோவே பிற்காலத்தில் சோக்கிரட்டீஸின் வார்த்தைகளை எழுத்துக்களாக்கினார். அதிலும் அவர் எழுதியவையும் வார்த்தையின் வடிவிலேயே அமைந்திருக்கின்றன்றன.

தொடர்ச்சியாக, எழுத்துக் கண்டுபிடிக்கப்பட்டதாகக் கருதப்படும் எகிப்திய நாகரிகப்பகுதியில் நடந்த நிகழ்வுகளையும் முன்வைத்த தெரிதா, அடிப்படை அறிவின் மூலமாக பேச்சுதான் இருக்கிறதேதவிர எழுத்து இருக்கவில்லை என்ற வாதத்தை முன்வைக்கின்றார்.

எழுத்தில் தங்கியிருக்கும் நிலைக்கு அறிவு வரும்போது எழுதப்பட்டவைகள் புதிய வடிவை எடுக்கின்றன. எழுதப்பட்ட எந்த இலக்கியமும் மெய்யியலும் அல்லது பிற எழுத்துக்களும் பாடங்களும் (text) எழுத்தினூடாக போலியான நினைவாற்றலையும், நினைவையும், அறிவையும் தருகின்றன. தள்ளிப்போடப்பட்ட பொருள் உருவாகிறது. அல்லது புதிய, பலபொருள் தரும் நிலை உருவாகிறது. உண்மையான அறிவும் நினைவும் அறிதலும் அற்றுப்போய்விடுகின்றன. எழுத்தின் செயல்பாடு, பொருள் அல்லது அறிவின் மயக்கத்தை உருவாக்குகிறது என்றார்.

'ஒன்று சேர்த்த சொற்கூட்டங்கள் அல்லது வாக்கியத்தின் பொருண்மை ஒன்றல்ல. அல்லது நிலையானதல்ல. அல்லது மாறாததல்ல'. எழுத்தின் பொருண்மைகள், அவைதரும் பொருள் மாறிக் கொண்டிருக்கும். 'ஒரு பாடத்துக்கு (text)வெளியே எதுவுமில்லை'. என்கிறார் தெரிதா.

சார்த்தருடைய இருத்தல் அல்லது மார்க்சினுடைய தொழிலாளி அல்லது உபரி என்ற சொற்கள் போன்றதே தெரிதாவினுடைய மெய்யியலில் கட்டுடைத்தல் என்னும் சொல் எனலாம். ஏனெனில் தெரிதாவின் முழுமையான மெய்யியலும் கட்டுடைத்தல் என்பதல்ல. அது அவருடைய கோட்பாட்டின் ஒரு பகுதியே.

தெரிதாவைப்பார்த்து ஒரு அமெரிக்கப் பத்திரிக்கையாளர் நேர்காணலில் 'உங்களுடைய சொற்பயன்பாடுகள் அதிகமாக ஒருவருக்கும் புரிவதில்லையே' என்று கேட்டார். தெரிதா பதில-ாக: "ஏன் நீங்கள் ஒரு மருத்துவரையோ எந்திரவியலாளரையோ பார்த்து இதே கேள்விகளைக் கேட்பதில்லை." என்று சொன்னார்.

'கட்டுடைத்தல் என்பது தெளிவற்றது அல்லது புரிவதற்கு கடினமானது என்கிறார்களே' என்ற கேள்வியும் எழுந்தது. "அப்படியென்றால் ஏன் ஆயிரக்கணக்கில் என்னுடைய விரிவுரைகள் பேந்ச்சுக்களுக்கு ஆட்கள் கூடுகிறார்கள்? அவர்கள் தாங்கள் புரிந்து வைத்திருப்பவைகளை சரிபார்க்கவும் மேலும் புரிந்து கொள்ளவுமே வருகிறார்கள்." என்று தெரிதா கூறினார்.

தலைவர் என்ற சொல்லை பயன்படுத்ததுகின்றோம். தலைவருக்கு பல தளபதிகள் அமைச்சர்கள் சிலவேளைகளில் பதில் தலைகவர்கள் இருப்பார்கள். ஒரு நிலையில் தலைவர் ஆயுள் முடிந்ததும் புதிய ஒருவர் தலைவர் என்ற இடத்திற்கு வருகின்றார். தற்போது தலைவர் என்ற சொல்லால் அறியப்படுபவர் தரும் அந்தச் சொல்லுக்கான விளக்கம் முந்தைய தலைவர் என்ற சொல் தந்த விளக்கமல்ல. தளபதி (அமைச்சர்)தலைவராகியிருந்தால் தற்போதைய தலைவர் என்ற சொல் (அமைச்சரைக்)தளபதியைக் குறிக்காது/குறிக்கும். இந்த தலைவர் ஓய்வெடுத்து புதிய ஒருவரை தனது பதிலியாக நியமித்தார் என வைக்கலாம். தலைவர் என்ற சொல்லை இந்த இருவருக்குமே முழுமையான பொருளில் குறிக்கப்போகும் நிகழ்வல்ல இது. இது ஒரு வகையான எடுத்துக்காட்டு. தலைவர் என்ற சொல் பல விதமான பொருள்களைத் தருகின்றது என்பதைக் காட்டி எவ்வாறு ஒரு சொல்லுக்கு பல பொருள் வருகிறது என்பதை விளக்கலாம்.

'பாடங்கள் தாம் சொல்ல வருவதாக நினைப்பதைச் சொல்வதில்லை. பலவேளைகளில் சொல்ல வருவதன் எதிர்நிலையே நிறுவப்படுகிறது. அதனால் பாடங்களிற்கு திட்டமான பொருள் ஏதும் இருப்பதில்லை.'
இந்த வாதமே அவர் தனக்கு முந்தைய அது வரைக்குமான மெய்யியல் எழுத்துக்கள் மீதும், மதம்சார் பாடங்களின் மீதும் (text) எடுத்து வைத்த மிகக் கடுமையான விமர்சனமாகியது. இதைக் கேட்டதும் பலர் கொதித்தார்கள்தான். அனால் உண்மை உண்மையாக நிறுவப்படும்போது என்ன செய்யவது. தெரிதாவைப் பொறுத்தவரை ஒரு இலக்கியப் பாடமும் (text) ஒரு மெய்யியல் பாடமும் (text) ஒன்று தான். மேலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதேபோல இரண்டுமே பல பொருள் தரக்கூடியவைதான். அத்துடன் அவை சொல்ல வருவதைவிடுத்து வேறு பல பொருளை சொல்ல முயற்சித்ததற்கு எதிரான பொருளை கொண்டு வந்து முன்நிறுத்துகின்றன என்பதும் தெரிதாவின் கோட்பாட்டினால் வைக்கப்பட்டதே.

இதை பின்வருமாறு மேலும் விவரிப்பாகச் சொல்லாம். ஒரு எழுத்தில் பல தளங்களில் பல விதமான முறைகளில் பெருள் கொள்ளும் சாத்தியம் இருக்கிறது. அதனையே பலரும் வேறுபட்ட வாசிப்பு என்று கூறுகிறார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு பாடத்தையும் வேறு வேறு விதமான வாசிப்புக்கு வேறு வேறு நேரங்களில் உட்படுத்தும் சாத்தியம் இருக்கிறது. அதே போலவே ஒரு பிரதிக்கு பல வாசகர்கள் ஒரே நேரத்தில் பல பொருளோடு வாசிப்பை வழங்கும் சாத்தியமும் இருக்கின்றன. இதுவே அவரது கோட்பாட்டின் அடித்தளம். இதனை விளக்குவதற்கு பல சொற்கள் கலைச்சொற்கள் என்ற அளவில் இருக்கின்றன. மேலும் இதை விளக்குவதற்கு பல படிமுறைகளும் நுணுக்கமான விபரிப்புக்களும் இருக்கின்றன. கட்டுடைப்பு (Deconsruction), வே**று**பாடு (Differ**A**nce), பெருங்கதையாடல்(Grand Narrative) முதலிய பல கலைச்சொற்களும் அவற்றிற்கான விளக்கங்களும் உள்ளன.

"இயற்கையைப்பற்றிய அல்லது இயல்புநிலைபற்றிய தெளிவான அல்லது மயக்கமான விளக்கத்தைக்கூட கொடுப்பதற்கு மொழி போதுமானதல்ல." என்பதும் தெரிதாவின் கூற்றுக்களில் ஒன்று. இது அவரது கட்டுடைத்தலின் மற்றுமொரு வடிவ வெளிப்பாடு என்று சொல்லாம். மாற்று பொருள்களுக்கும், ஒரு பாடத்தில் இருக்கும் புறக்கணிக்கப்பட்ட பகுதிகளிற்கும் தெரிதாவின் ஆய்வு முறை கவனத்தை இட்டுச் செல்கிறது. இதிலிருந்தே ஓர நிலை அல்லது விளிம்புநிலையின் கவனம் பாடத்தல் (text) பிறக்கிறது.

கட்டுடைத்தலை மாட்டின் ஹைடெக்கர் (Martin Heidegger) இடமிருந்து எடுத்துக்கொண்டதாக கூறுவாரும் இருக்கின்றனர். ஆனால் ஹைடெக்கரின் அணுகுமுறை தெரிதாவின் கட்டுடைத்தல் போன்றதல்ல. வேண்டுமானால் அந்தச் சொல்லை மட்டும் ஹைடெக்கரிடமிருந்து தெரிதா பெற்றுக் கொண்டார் என்று சொல்லவும் இடமுண்டு. கட்டுடைத்தல் என்ற சொல்லே பலருக்கு கசப்பாகவும் அமைந்து விடுகிறது. அது கொடுக்கும் எதிர்மறையான பொருள் அப்படி கருத்துக்களை உருவாக்குகிறது. பிரஞ்சில் destruction என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. அது மிகவும் எதிர்மறையானதாக இருக்கிறது. இது அழித்தல் அல்லது அற்றுப்போகச் செய்தல் என்ற பொருள்படும். ஆனால் கட்டுடைத்தல் என்ற உத்தியின் நோக்கம் குலைத்து மீள வேறு ஒரு ஒழுங்கில் கட்டுதலையே விலயுறுத்துகின்றது. இந்தவகையில் தமிழில் மீள்கட்டுதல் அல்லது மீள்கட்டுமானம் என்பதுதான் சரியான கலைச்சொல்லாக்கமாக இருந்திருக்கும். தமிழில் பிழையாக உருவாக்கப்பட்டிருக்கும் பல கலைச்சொற்கள் போல இதுவும் வந்து சேர்ந்திருக்கின்றது.

தெரிதா குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒரு கருத்தை அடிக்கடி வெளிப்படுத்தி வந்தவர். "என்னுடைய பாடம்" , "உங்களுடைய பாடம்" என்பதில் எப்போதும் அவர் கவனமாக இருந்தார். "நீங்கள் சொல்வது" என்பது "நான் சொல்வது" என்பதிலிருந்து வேறுபட்டது என்பது தெரிதாவின் வாதம். இது ஒரு வகையில் அவரது பணியுடன் எழுத்துடன் தொடர்புடையது. அவரது எழுத்துக்கள் மிகவும் அதிபுதுமையானதாக இருக்கும். எனவே அதன் பொருளை, உள்ளடக்கத்தை வெளிக்கொணர்ந்து சொல்வது அப்படியே உடனடியாக சாத்தியப்படுவதில்லை. எனவேதான் தன்னைப்பற்றி தன்எழுத்தைப் பற்றிச் சொல்லவரும் விளக்கமளிக்கும் பாடங்களை (text)அவர் மேற்சொன்னவாறு பிரித்துப் பார்த்தார்.

**அவருடைய சில நூல்கள்:**

### Speech and Phenomena

'பேச்சும் செயல்பாடும்: ஹுஸ்ஸேர்ல் இன் குறி பற்றிய கோட்பாடுகளின் மீதான பிற கட்டுரைகளும்' என்பதே இதன் முழுத் தலைப்பு. அளவைமுறை மற்றும் வாய்மொழித் தொடர்பாடல் ஆகியவற்றை முன்வைத்து மெய்யியல் மொழியை தெரிதா ஆய்கிறார். இதிலேயே ஹுஸேர்ல்இன் நிலைப்பாடாகிய மொழி அளவையில்தான் கண்டடையப்படுகிறது. வாய்மொழித் தொடர்பாடல்களில் இல்ல என்கின்ற வாதத்தை தெரிதா கேள்விக்குள்ளாக்குகிறார். இங்கு அவர் phenomenology யில் திளைத்திருந்த மேற்கத்திய மெய்யியலுடன் முரண்படுகின்றனார். மொழி பற்றிய மெய்யியல் ஆய்வில் தெரிதாவின் இந்த நூல் மிக நல்லதொரு பங்களிப்பாகக் கருதப்படுகிறது.

### Of Grammatology

எழுத்துக்கும் பேச்சுக்கும் இடையில் உள்ள தொடர்பை இந்த நூல் ஆய்கிறது. பேச்சும் எழுத்தும் எப்படி வேறுபட்ட மொழியின் வடிவங்களாக உருவாகியிருக்கின்றன என்பதை இது முன்வைக்கிறது. பேச்சிலிருந்து எழுத்து உருவானது என்ற கொள்கையை முன்வைத்துக் கொண்டு சென்றது மேற்கத்திய மெய்யியல் துறை. அதை கேள்விக்கு உள்ளாக்குகிறது. அதன்வழி புதிய எழுதுதலுக்கான முறையை முன்வைக்கிறது. அதாவது மரபான பாடங்கள் உருவாக்கத்தைக் கேள்விக்கு உள்ளாக்குகிறது. இந்த நூல் பிரஞ்சிலிருந்து காயத்திரி ஸ்பிவக் சக்கரபர்த்தி என்ற பெங்காலி தோற்றத்தையுடைய ஒரு அமெரிக்கவாழ் இந்தியப் பெண்மணியினால் மொழிபெயர்க்கப்பட்டது.

இரண்டு பகுதிகளாக இந்த நூல் இருக்கிறது. எழுத்து வடிவம் உருவாவதற்கு முந்தைய எழுத்துக்களைப் பற்றியதாக ஒருபகுதியும் 'இயற்கை, பண்பாடு, எழுத்து' என்ற தலைப்பிலானதாக மற்றுமொரு பகுதியும் இருக்கிறது. எப்படி எழுத்து பற்றிய கோட்பாடுகளும் பேச்சு பற்றிய கோட்பாடுகளும் முந்தைய கருத்தாக்கங்களால் கீழ்தள்ளப்பட்டன என்பதை முதல் பகுதி ஆய்கிறது.
இரண்டாவது பகுதிதான் தற்போது இருக்கும் கட்டுடைத்தல் என்பதை நடைமுறையில் செய்து காட்டியது. பல முன்னோடி மெய்யியல், உளவியல் மற்றும் மானிடவியல் பாடங்களை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விரிவான கட்டுடைப்புச் செய்ததது. குறிப்பாக சசூரின் Course in General Linguistics, லெவிஸ்-ஸ்ராசின் Tristes Tropiques, ரூசோவின் Essay on the Origin of Languages ஆகிய பாடங்கள் கட்டுடைக்கப்பட்டன.

**பிற நூல்கள் சில:**

Writing and Difference
Dissemination
Glas
The Post Card
Specters of Marx
The Gift of Death
Politics of Friendship

ஆகியவை பிற குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அவரது நூல்களில் சிலவாகும்.

**வாழ்க்கை:**

1930 ஆவது ஆண்டு 15ஆவது நாள் ஜுலை மாதம் அல்ஜீரியாவிலுள்ள எல்-பியர் என்ற இடத்தில் பிறந்தார். இவர்களின் குடும்பம் கறுப்பினத்தின் - அதாவது வெள்ளை இனம் தவிர்ந்த பிற - தாக்கங்களைக் கொண்ட யூதக்குடும்பமாகும். இவர்கள் பிரஞ்சுமொழிபேசும் குடும்பாகவே இருந்தனர். அதாவது இரண்டாவது மொழியாக பிரஞ்சு மொழியைக் கொண்ட குடும்பமாக அவரது குடும்பம் இருந்தது.

தனது சிறு வயதில் தெரிதா யூதக் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்ற காரணத்திற்காக பல முறை பள்ளிகளை விட்டு நீக்கபபட்டிருக்கிறார். ஒரு பள்ளியில் 7 % மாணவர்களே யூத இனத்திலிருந்து இருக்கலாம் என்று ஒரு முறை கூறப்பட்டதால் இவர் பள்ளியில் இருந்து நீக்கப் பட்டிருக்கிறார். பின்னர் ஒரு தடவை யூத இனத்தவர் என்ற காரணத்திற்காக மட்டும் பள்ளியை விட்டு நீக்கப் பட்டார். இதுவே பின்னாளில் ஓர நிலைப்பாடு அல்லது விளிம்பு நிலைத்தன்மை மீது பிடிப்பும் பாடங்களில் (text) இருக்கும் உள்ளார்ந்த ஆதிக்கம் என்பவற்றின்மீது எதிர்ப்பார்வையும் தெரிதாவை மேற்கொள்ள வைத்திருக்கிறது.

1952 இல் Ecole Normale Supérieure இல் ஏறக்குறைய தனது 19 ஆவது வயதில் மெய்யியலை படிக்கத் தொடங்கினார். இங்கு சேர்வதற்கு இவர் இருதடவை மறுக்கப் பட்டிருக்கிறார். ஆனால் அது தரம் கருதிய மறுப்பாக இருந்தது. மார்க்ஸ் மற்றும் ஹெகல் ஆகியோரின் எழுத்துக்களில் தேர்ச்சி பெற்றவரான Jean Hyppolite உடன் 1956 வரை சேர்ந்து கல்வி பயின்றிருக்கிறார். இவரது தொடக்கால எழுத்துக்கள் Phenomenology என்ற பயன்வழியியல் பற்றியதாகவே இருந்தது. அது தொடர்பாகவே ஒரு புலமைப்பரிசிலில் ஹாவார்ட் பல்கலைக்கழகம் சென்றிருக்கிறார்.

1960 முதல் 1964 வரை பரிசின் ஸொர்போன் பல்கலைக்கழத்தில் பணிபுரிந்தார்.

1965 முதல் 1984 வரை அவரது பணி École Normale Supérieure யில் அமைந்திருந்தது. இது பிரான்சின் உயர்கல்விக்கானை பள்ளியாகும். இங்கு அவர் பேராசிரியராகவும் மெய்யியல் துறையின் தலைவராகவும் இருந்தார்.

Tel Quel என்பது ஒரு இடது சாரி நிலைப்பாடு கொண்ட பிரஞ்சு இதழாகும். 1965 இலிருந்து 1972 வரை இந்த குழுவினருடன் நெருங்கிய தொடர்பும் அதில் எழுதும் நிலைப்பாடும் கொண்டிருந்தார். இந்தக் குழுவில் ஜுலியா கிரஸ்தவா(Julia Kristeva) ரோலன்ட் பார்த்( Roland Barthes) மற்றும் பிலிப் ஸோலர்ஸ் போன்ற பலரும் இருந்தனர். Tel Quel இல் எழுதியவர்களின் கருப்பொருளாய் அந்நாட்களின் சமகால கோட்பாடுகள் இருந்தன. உளப்பகுப்பாய்வு, அமைப்பியல் மற்றும் மார்க்சியம் ஆகியவை பெரும்பாலும் இவ்வகையில் Tel Quelஇல் எழுதப்பட்டு வந்தன.

1966 இல் அவர் Johns Hopkins பல்கலைக்கழத்தில் அமெரிக்காவில் ஆற்றிய உரையே தெரிதாவை வெளியுலகுக்கு எடுத்துச் சென்ற முக்கிய நிகழ்வாக அமைந்தது. அதிலிருந்து 1970களின் கடைசிவரை அமரிக்காவிற்கும் பிரான்சிற்கும் இடையே பறப்பதில் அவருடைய நேரம் கழிந்தது.

1967 இல் தெரிதா பின்வரும் மூன்று நூற்களை வெளியிட்டார். இவைதான் அருடைய முக்கியமான கருத்தாங்கங்களை அறிமுகப்படுத்தின. Speech and Phenomena; Of Grammatology, Writing and Difference ஆகியவையே இந்த நூற்கள்.

1982 ஆவது ஆண்டில் இவர் ஒருதடவை செக்கோஸ்லாவாக்கியாவில் சில நாட்கள் சிறைவைக்கப்பட்டிருந்தார். அப்போதைய அரசு கொண்டுவந்தை வரைவு ஒன்றை எதிர்த்து அந்தநேரம் புத்திவாழிகள் எதிர்ப்புக்காட்டிக்கொண்டு இருந்தார்கள். அந்த எதிர்ப்பு நடவடிக்கையிலேயே தெரிதா கைது செய்யப் பட்டிருந்தார்.

1983 இல் பிரன்சில் மெய்யிலுக்கான சர்வதேசக் கல்லூரியைத் தொடக்கி 1985வரை அதன் தலைவராக இருந்தார்.



1984 இல் சமூக விஞ்ஞானத்துறைக்கான உயர்கல்விப்பிரிவில் இயக்குனராக இருந்தார்.

1988 மற்றுமொருவருடன் இணைந்து பிரான்சின் மெய்யியல் ஆணையத்தின் ( commision de la philosophie ) தலைவராகவும் இருந்தார். இது பிரான்ஸ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசின் கல்வி அமைச்சினால் உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பாகும்.

முன்னாள் பிரான்சின் ஜனாதிபதியின் மனைவி Sylviane Agacinski என்பராவார். இவருக்கு யுபயஉளைெமை யின் மூலமாக ஒரு பிள்ளை இருக்கிறது. அவர் தெரிதாவினுடைய முன்னாள் துணைவியாவார். தற்போது இவருடைய தற்போதைய மனைவியின் மூலம் ஜீன் மற்றும் பியர் என்ற இரு பிள்ளைகள் உள்ளனர்.

2004ஆவது ஆண்டு ஒக்ரோபர் மாதம் 9ஆவது திகதி இரவு இறந்தார். இறந்தபோது தெரிதாவிற்கு வயது 74.

**கடந்த 2004 ஒக்ரோபர் மாதம் 9ஆவது திகதி இரவு (அதாவது 8 திகதி வெள்ளி நள்ளிரவு இரவு) பிரான்சில் ழாக் தெரிதா (Jacques Derrida) இறந்தார்.** இதை 12ஆவது திகதி அல்லது 10ஆவது திகதி என்றும் தமிழில் எழுதப்பட்டிருக்கிறது. அந்தளவிற்கு 'புரிதல்' எழுதியவர்களுக்குள்ளது என்று எண்ணவேண்டியுள்ளது. இந்தப்பட்டியலில் கனடாவின் ஒரு 'பிரபல'இணையத்தளமும் அடங்கும்.

### கட்டுரைக்கு உதவியவை:

Appleby, Joyce et al. 1996. Knowledge and Post Modernism in Historcal Perpective. Routledge: New york.
Brown,stuart et al. 1998.One Hundred twentieth-Century Philosophers. Routledge:New york.
Collins, Jeff and Bill Mayblin. (1996) 2003.Introducing Derrida. Icon Books: London
Culler, jonathan.1979. Jacques Derrida in Sturcuturalism and Since: From Levi Strauss to Derrida. ed. john Sturrock.Oxford University Press: london.
http://prelectur.stanford.edu/lecturers/derrida/
http://www.iep.utm.edu/d/derrida.htm
http://en.wikipedia.org/wiki/Jacques_Derrida
http://www.marxists.org/reference/subject/philosophy/works/fr/derrida.htm

இது தெரிதாவைப் பற்றிய ஒரு முழுமையான அறிமுகக் கட்டுரையின் பகுதியாகவே அமைந்திருக்கிறது. தொடர்ந் சேர்க்கைகளின் பின்னரே இது நிறைவு பெறும்.

**18 ஆவது பக்கத் தொடர்ச்சி ...**

ஒரு மேற்கோளை முன்வைக்க விரும்புகின்றேன். "இதன் பணி தமிழ் இலக்கியத்தை வளர்ப்பதாகும். இந்த அமைப்பு வருடாவருடம் ஒரு தேர்ந்த இலக்கிய மேதைக்கு வாழ்நாள் தமிழ் இலக்கியப்பணி விருது வழங்குகின்றது..." என்பதாகத்தான் இலக்கியத்தோட்டத்தின் முந்தைய அறிவிப்புக்கள் இருந்தன. தற்போது "தமிழுக்குச் சேவை செய்த" என்பது மட்டும் பெரிதாக முன்னால் வந்து நிற்கிறது. இலக்கியம் என்பதன் பொருள் மாறுபட்டுவிட்டது. இதன்மூலம் தற்போது அறிவிக்கப்பட்டுள்ள விருது வகையினமும் அதற்குள் அடக்கப்படுகிறது. இந்த நடைமுறை, இந்த விருது விருதைத் தோற்றுவித்தவர்களின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களிற்காக பயன்படுத்தப் படுகிறதோ என்ற ஐயப்பாட்டை உருவாக்காமல் இல்லை. விருதுக்குழு மற்றும் அதன் உருவாக்கக் குழுவில் இருப்பவர்கள் நேர்மையுடன் தங்கள் பழைய அறிவிப்பு வெளியீடுகளைப் பரிசீலித்து உரிய பதில் வழங்கவேண்டியது தார்மீகக் கடமையாகும்.

இரண்டாவதாக விருது வழங்கப்பட்டவரின் நடுநிலைத்தன்மை, அல்லது குறைந்தளவு பொதுத்தன்மை அல்லது வன்செயல்கள், கொடுஞ்செயல்களுக்கு ஆதரவில்லா ஒரு நல்ல இலக்கியவாதியின் தன்மை பற்றிய கேள்வி எழுப்பப் பட்டிருக்கிறது. தற்போது விருது வழங்கப்பட்டவரின் பெயரில் இருக்கும் "ஐயர்" என்பது அனைவரும் சொல்வதுபோல சாதியைக்குறிக்கிறது என்பதில் ஒருவருக்கும் ஐயமேதும் இல்லை என எண்ணுகிறேன். அப்படியாயின் இன்றைய நூற்றாண்டில் நாம் இந்தப் பெயரை எவ்வாறு எதிர் கொள்வது.

எப்படி இன்று Holocaust ஒரு பாவச் செயலோ அதேபோல சாதியத் தீண்டாமை ஒரு பாவச் செயல். நம் தமிழர்களுக்கு புரியும் மொழியில் சொன்னால், இலங்கைத் தமிழர்கள் எவ்வாறு அரசியல் தஞ்சத்திற்கு கனடாவில் காரணம் சொல்கிறர்களோ, அதே போல சாதியத் தீண்டாமைக் காரணங்கள் சொல்லப்பட்டு கனடாவில் ஒருவர் அகதி உரிமை கோருவதற்கு இடமுண்டு. அப்படியிருக்கும் பட்சத்தில் இந்த கனடாவின் சமூகஅமைப்பு இவ்வாறு மனிதர்ளை கயைாளும் இந்நிலையிலும் கூட இன ஒதுக்கலுக்கு காரணமாகும் சாதியப் பெயரை வெளிப்படையாக சூட்டி பெருமைப்படும் ஒருவருக்கு விருது கொடுப்பது, யூதர்களை(Jewish) கொடுமைப்படுத்திய நாசி (Nazi)ஒருவருக்கு விருது கொடுப்பதற்குச் சமம். படு பிற்போக்குத்தனமான, எதற்கும் அஞ்சாத தன்மைகொண்ட மனோ நிலையையே அந்த "ஐயர்" சாதியப் பெயரைச் சூடிக்கொள்வதில் இருக்கிறது. இது வெளிப்படையான இன ஒதுக்கலின் அடையாளமே. பிராமணியத்தின் உச்சம் செயற்பட்ட தமிழ் நாட்டில்கூட வெளிப்படையாக இவ்வாறு ஐயர், ஐயங்கார் என்ற சாதிப் பெயர்களைச் சூடுவதற்கு வெட்கப்படுகிறார்கள் என்பதையும் நியைனிவில் கொள்வேண்டும்.

ஒரு கேள்வி. இந்த விருது வழங்கும் விழாவிற்கு வரவிருக்கும் தமிழர்கள் - ஆதரவாளர்கள்- அன்றைய தினம் தங்கள் பெயர்களை ஒரு மாறுதலுக்காக - சாதியுடன் சேர்த்து அட்டையில் எழுதி - சிறிதாகவேனும் சட்டையில் குத்திக்கொண்டு வருவார்களா? முடியாதே!. அப்படியாயின் எப்படி ஒரேயொரு சாதிப்பெயரை மட்டும் ஒருவர் பெருமையாகச் சூடிக்கொள்ளவும் அதனை எவ்வித உயர்சிந்தனையின் அடையாளங்களும் அற்று மற்றவர் ஏற்றுக்கொள்ளவும் முடிகிறது. புரிவதில்லை. இந்த வாதம் பற்றிய விளக்கம் விருதுக் குழுவிற்கு இல்லாமல் போனாலும் ரொரன்ரோப் பல்கலைக்கழத்தின் தெற்காசிய மையத்திற்கு(South Asian center of University of Toronto) விளங்காமற் போகாது என எண்ணுகின்றேன். யூதர்கள் கொடுமைப்படுத்தப் பட்டது எப்படிச் சகிக்க முடியாததோ! அதே அளவு சமமான, சமாகாலக் கொடுமை, மறைமுகமான இன ஒதுக்கல் சாதிய வேறுபாட்டை அடையாளப் படுத்துவது.

சாதி ஒழிந்துவிட்டது. அதைப்பற்றி தற்போது கதைக்க வேண்டாம் என்று யாரும் சொல்ல வேண்டாம். சாதியம் மீறிய மண உறவுகளை யாராவது துணிந்து ஏற்படுத்த முற்சிப்பார்கள் எனில் அவர்கள் மட்டும் சொல்லலாம். அதுவரை சாதி இருக்கிறது. இந்தப் புலம்பெர்ந்த அறிவுசீவி தமிழரிடத்திலும் இருக்கிறது. அந்தச் சாதியின் பெயரால் இந்த விருது பிழையாகிப்போய் பாரபட்சமானதாகி, இன ஒதுக்கலுக்கு ஆதரவானதாக காணப்படுகிறது. இதற்கும் விருதுக்குழு பதிலிறுக்க வேண்டிய தார்மீகக் கடமையில் உள்ளது. (South Asian center of University of Toronto)ரொன்ரோப் பல்கலைக் கழகத்தின் தெற்காசிய மையமும்தான்.

இந்தச் சர்ச்சைகளைத் தவிர்க்க தங்கள் நோக்கங்களைத் தெளிவாக்கிவிட்டு, வருடாவருடம் விருதைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை பல்வேறு பட்ட, ஒவ்வொரு முறைக்கும் வேறு வேறு, தமிழ் இலக்கியத் துறைசார் அறிஞர்களிடம் விட்டு விடுவதே நடுநிலைக் கு அறிகுறி. குறிப்பிட்ட ஒரு சிலரே விருதைத் தேர்ந்தெடுத்தால் அதில் நம்பகத்தன்மை இருக்கப்போவதில்லை. நல்ல நோக்கம் தொடர்ந்து நல்லபடி அமைய அதன் நடைமுறையும் நல்லபடி தெளிவாக்கப்படவேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கருமைய நாடகக்குழுவின் தமிழ்நாடகங்களும்... பெண்களும்

(ரொறன்ரோ மார்ச் 19,2005)

**கௌசலா**

**நா**டகக்குழு கருமையம்: ஒதுக்கப்பட்டவர்களின் குரலாகிறது. கருமை என்பது பல ஒடுக்குதல்களின் நிறம். கரு பெண்ணும் அவள் சார்ந்த உலகையும் குறிப்பது எனப்பலவாறான சாராம்சங்களைக் கொண்ட பெயர் விளக்கங்களை மேடையில் ஓங்கி ஒலிக்கக் கேட்டுக்கொண்டோம். நன்று நன்று! இப்படியான ஒலிப்புக்கள் மாற்றுக் கருத்தாளர்களுக்கும், அவர்தம் குரல்களுக்கும் அவர்களைப் பின்தொடர்பவர்களுக்கும் தேவையானதே. இதனால் பெயர் குறித்த குழப்பங்களுக்குள்ளும் முன்முடிவுகளுக்கும் நாம் உட்படவேண்டி இருக்கவில்லை. அதற்கு முதற்கண் நன்றி. இவ்வறிவிப்பைத் தொடர்ந்து மூன்று நாடகங்கள் சிறப்பாக மேடையேற்றம் பெற்றன.

**கட்டவிழ்ப்பு:** முதலாவதாக பெண்கள் தயாரிப்பில் இடம்பெற்ற நாடகம். கிட்டத்தட்ட ஒரு வருடங்களாக பயிற்சியிப் பட்டறையில் விவாதிக்கப்பட்ட விடயங்கள் நாடகங்களாக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. ஆமைகளைப் போன்று அப்பப்போ தலையை வெளியேகாட்டி ஏதாவது சொல்லிவிட்டு இருப்பவர்களுக்கு மத்தியில் இது பரவாயில்லை இவ்வளவு பெண்களையும் கூட்டிச் சேர்த்து இதையாவது செய்துவிட்டதன் மூலம் செயல்முறையில் வெற்றியீட்டியுள்ளார்கள். வாழ்த்துக்கள். ஆனால் இந்தக் கருத்துக்களையா இவ்வளவுகாலமாக விவாதித்தார்கள் என்ற எண்ணம் எழுவதைத் தவிர்க்க முடியாது. அறிவுக்குத்தெரிந்த காலம் முதல் பிரச்சாரங்களாக மட்டுமே கேட்டு அலுத்துப்போன கருத்துகளாகவே அவைஇருந்தன. நடித்தவர்களும் தனிமனிதர்களாக தங்கள் நடிப்பை ஏனைய நாடகங்களுக்கு ஈடாக செய்திருந்தார்கள். தர்சினி வரப்பிரகாசம், பவானி போன்றோர் நடிப்பை வெளிப்படுத்தி இருந்தார்கள். ஆனால் எடுக்கப்பட்ட கருத்துக்களும் நிகழ்த்துதிறனும் இதை இவ்வளவு நேரம் பார்க்கவேண்டுமா என பார்வையாளர்களிடையே வெறுப்பைக் கொட்டியது. இடையிடையே வந்த நாட்டியம் எதைக் கூறியது? முதலில் கோபத்தோடும் பின்னர் பயந்து நடுங்குவதும், புரிந்துகொள்ள எதுவும் இருக்கவில்லை. நல்ல நாட்டியத்திறனையடையவர் மாலினி. ஒவ்வொரு முறையும் வேறுவிதமான பாவங்களைச் செய்திருந்தால் சில வேளை இதைவிட சிறப்பாக இருந்திருக்கும். நாட்டியத்திற்கான இசை கேட்கக்கூடியதாக இருந்தது.

நாடகத்தில் காட்டப்பட்ட கருத்துக்களை எடுத்துக்கொண்டால் ... கருக்கலைப்பாயினும் சரி, கருவளர்ப்பாயினும் சரி அதை முடிவாக்குவது சுமக்கும் அவளே. உண்மைதான். ஆனால் அந்த முடிவை அதன் பின்புலங்களை, அதன்நடைமுறை, எதிர்காலச் சிக்கல்களை எதிர்கொள்ளும் திறன் அவளிடம் வளர்க்கப்படவேண்டும். வெறுமனே பிரச்சனையை மட்டும் கூறாது அதை நடைமுறைப்படுத்தும் வழிமுறையைக் கூறியிருந்தால் நாடகம் இன்னுமொரு தளத்தில் இயங்க வாய்ப்பிருந்திருக்கும். பார்வையாளர்களுக்கும் வேறுபட்டுத் தெரிந்திருக்கும். ஆனாலும் கருக்கலைப்பு உரிமைக்காக மட்டுமே பெண்கள் செய்த போராட்டங்கள் வரலாற்றில் அதிக பகுதியைக் கொண்டுள்ளன என்பதும் மறுக்கமுடியாத உண்மை.

இந்தியாவும் கள்ளிப்பாலும். அதுவும் உண்மைதான். அதற்கான சமூக கட்டமைப்பும், அந்தக் கொடுமையின் முழுப்பரிணாமங்களும் தனியானவை. மேடையில் கூறப்பட்ட அளவிற்கு இதுபற்றி அறிந்த இந்தமேடையில் கூறவேண்டிய அவசியம் இருப்பதாக தெரியவில்லை. ஆனாலும் வரலாறுசார்ந்த இந்த வதையை தனியாக விளக்குவதே கடினம் ஆதலால் அது பற்றிக் கூறமுனைந்திருக்கலாம்.

அடுத்து, பெண்கள் பருவமடைதல் பற்றியது. குருதி பற்றியும் யோனி பற்றியும் வெளிப்படையாகப் பேசுவதால் மட்டும் மாற்றங்கள் நிகழ்ந்துவிடப் போவதில்லை. ஆனாலும் இப்படிப்பேசுவதும் ஒருவகையான எதிர்ப்புக்குணமாக தங்களாலும் பேசமுடியும் என்பதாகவும் பலர் இதை ஆற்றிவருகிறார்கள். பெண்கள் பருவமடைதல் பல சமூகங்களில் மருத்துவம், நம்பிக்கைகள் சார்ந்த சடங்காக நடைபெற்றுவந்துள்ளது. தென்அமெரிக்காவில் சில சமூகங்களிடையே ஆண்கள் பருவமடைதல் பெரும் விழாவாகக் கொண்டாடப்படுகிறது. ஆபிரிக்கச் சமூகங்கள் சிலவற்றில் குடும்பத்துக்குரியவளாக வளர்வதற்குரிய பயிற்சிகள் இதன்போது கொடுக்கப்படுகின்றன. எதுவாயினும் பெண்பருவமடையும் போது அவளுக்கு ஓய்வும் சத்துணவும் அவசியமானது. இது பெண்ணை வயதுமுதிர்ந்த காலங்களிலும் உடல் சார்ந்து காப்பாற்றக்கூடியது. இது போன்று, சடங்குகளின் பெயரில் நடைபெறும் விழாக்களின் நல்லனவற்றை இனங்காண வேண்டிய தேவையும் இன்று பெண்கள் முன்னால் உண்டு. எடுத்துக்காட்டாக மாதவிலக்குக் காலங்களில் தீட்டு என்பது வேறு, ஓய்வு என்பது வேறு. தனக்குரிய ஓய்வை எடுத்துக்கொண்டு தீட்டு என்பதை எதிர்க்க வேண்டும். ஆனால் இதை விளம்பரமாக்கி வியாபாரமாக்குவது கேலிக்கூத்தே. இது பற்றிய விழிப்புணர்வு பெண்களுக்கு முதலில் தேவையாக உள்ளது. இது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பற்றிய பட்டறையில் கலந்து கொண்டவர்கள், தங்கள் குழந்தைகளின் எதிர்காலத்தைக் கவனித்துக்கொள்வார்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இவ்வாறான பட்டறைகளின் மூலமே நடைமுறையில் பெண்கள் மத்தியில் மாற்றங்களைக் கொண்டுவரமுடியும். எனவே இவ்வாறான பட்டறைகள் தொடர்தல் அவசியம்.

ஆண்குழந்தையும் பெண்குழந்தையும் வீட்டில் சமஉரிமைகளோடு, சமபொறுப்புகளோடு வளர்க்கப்படுதல். இது இன்றய தமிழ்க் குடும்பங்களுக்கு அவசியமானதொன்றே.
வீட்டில் பெண்ணின் மீதான ஆண் காட்டும் அதிகார உரிமை. இவை அன்றாடம் எல்லா வீடுகளில் நடைபெற்றுக்கொண்டே இருக்கிறது. முற்போக்கு, பிற்போக்கு, மாற்றுக்கருத்தாளர்கள் என எல்லா இடங்களிலும் விரவிக்கிடக்கிறது. இதற்கு குழந்தையிலிருந்தே ஆண் மனோபாவத்தை மாற்ற வேண்டும். இவ்வாறு சமஉரிமைகளோடு வளர்க்கப்படும் குழந்தைகள் பின்னாளில் ஓரளவிற்கு மாறிவளர வாய்ப்புண்டு. அது பற்றிய ஒரு தெளிவை மேலும் சிறிது அதிகரித்திருந்தால் பார்த்தவர்களுக்குப் மேலும் விளக்கம் கிடைத்திருக்கும்.

சீதனம் பற்றியும் பேசப்பட்டது. எல்லாக் காலங்களிலும் எல்லா மேடைகளிலும் பெண்ணுரிமை என்றால் வசனம் பேசிப்பழகி முழங்கிக் கொட்டப்படுவது. மேடையை விட்டு இறங்கிய பின், சீதனத்தை எவ்வளவு குறைக்கலாம், கூட்டலாம் என்று திரும்ப ஒரு விவாதம் இரு வீட்டுக்குள்ளும் நடைபெறும். பட்டறையில் ஈடுபட்டவர்கள் பலர் மணமாகாதவர்களாக இருப்பதால் சீதனம் கொடுக்கவேண்டி இருந்தால் மணமுடிக்கமாட்டோம் எனப் பெண்கள் சேர்ந்து முடிவெடுத்திருப்பார்கள் என எண்ணலாம். அல்லது இப்படியான மணமுடிப்புக்கள் இல்லாமலே தனித்து வாழ முடியும் என்ற உறுதிபற்றி பெண்களிடம் ஏற்படுத்தக்கூடிய மாற்றங்கள் பற்றி சிந்தித்திருப்பார்கள். ஏனெனில் பட்டறையின் மூலம் புதிய பட்டறிவுகளை இவர்கள் பெற்றிருந்திருக்கிறார்கள் என எண்ண இடமுண்டு.

இவற்றைப்போன்றதே விதவைப்பெண்ணின் சமூக நிலையும். வெறுமனே கூறியது கூறலேயாக இருந்தாலும் இவை பற்றித் திரும்பத் திரும்பக் கூறவேண்டி இருக்கிறதே என்பதே அலுத்துக்கொள்ள வைக்கிறது. அடுத்து வந்த கவுன்சிலிங் அல்லது ஆலோசனை கூறியதும் கூறப்பட்ட விதம் ஏதோ இப்படியும் ஒன்று இருக்கிறது என்று வெறுமனே காட்ட வந்ததாகவே பட்டது. அரங்காடல் நிகழ்வுகளோடு நிறைந்த பரிச்சயம் கொண்ட பெண்கள் நடத்தினார்கள் என்ற எதிர்பார்ப்பு இருந்ததால் நாடகமாக்கிய முயற்சி ஏமாற்றத்தைத் தந்ததாகவே இருந்தது. எனினும் புதியவர்கள் பலர் இருந்ததாலும் பலரின் கருத்துக்களைக் உள்ளடக்க வேண்டியதாலும் அதிக நேரத்தை எடுத்துக் கொண்டது.

நிகழ்த்துகைகளில் முக்கியமானதாக ஒன்றை எடுத்து அதை சிறப்பான நாடகமாக்க முயற்சித்திருக்கலாம். அல்லது இந்தப் புலம்பெயர் சூழலில் பெண்கள் அதிலும் குடிவரவாளர்களாக இருக்கும் பெண்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள் பற்றியாவது கவனத்தைத் திருப்பியிருக்கலாம். பட்டறையில் கருத்துக்களை எடுத்தியம்பியவர்கள் இவை பற்றியும் கவனத்திற் கொண்டிருக்கலாம். சமூகநல சேவைகளில் ஈடுபட்ட பெண்கள் பலரும் இப்பட்டறையில் ஈடுபட்டிருந்திருக்கிறார்கள். அவர்களாவது இவற்றின் அவசியம் பற்றி எடுத்துக்கூறியிருக்கலாம். அல்லது கூறப்பட்டவையை பட்டறையாளர்கள் மட்டும் பகிர்ந்து கொண்டு அடுத்தமுயற்சியில் நிகழ்த்துவார்கள் போலும்.

நாடகத்தில் சொல்லப்பட்ட விடயங்களுக்குள் இங்கே நடைபெறும் திருமண விழாக்களும் அதன் விளம்பர வியாபாரங்களும் பற்றியுமான கருத்துக்களுக்கிடமிருந்துள்ளது. தாலி வேலியாகவும் திருமணம் பெண்ணுக்கு அவசியம் என்றும் இவர்களுக்குப் பட்டிருக்க முடியாது. ஆனால் தாலிகள் எல்லாம் அதனதன் புனிதத்தன்மையோடு பாதுகாக்கப்பட்டிருக்கிறதாகவே படுகிறது. நாடகத்தில் பங்குபற்றியவர்களும் பார்வையாளர்களில் பலரும் தாலிகளால் தங்களை அலங்கரித்திருந்தார்கள். பெண்அடிமைத் தனத்தின் முதற்காரணம் இத்தாலியென்பதை மறந்துவிட்டார்களோ என்னவோ? வழிவழியாக பெண்உரிமைபற்றி பெரிதாக அலட்டிக்கொள்ளாத தமிழ்சினிமாவும், தாலி குடும்பம், என அழுதுவடிக்கும் தொலைக்காட்சி நாடகங்களும் இங்குள்ள தமிழ்ப் பெண்களின் அறிவைத் திறக்கும் விழிகளாக இருக்கின்றன. இவை பற்றிய செய்திகளையும் இவ்வாறான பிரச்சாரங்களில் சேர்த்துக்கொள்ளவும் வாய்ப்பிருக்கின்றது. இளம்பெண்கள் கொலைகளும் காணாமல்போதலும் இன்னமும் செய்திகளில் வெளிவந்த வண்ணமேயுள்ளன. பாடசாலைகளில், கல்லூரிகளில் பெண் என்பதற்காக எதிர் நோக்கவேண்டியிருக்கும் சிக்கல்கள். புதிய சூழலில் தேவையானதை விடுத்து திரும்பவும் சொத்து, சமூகத்தராதரம் என்று வாழ்பவர்களுக்கு வேறுபார்வையைக் காட்டும் வாய்ப்பு, என கண்முன் பார்த்துக்கொண்டிக்கும் ஏராளங்கள் பற்றியும் அடுத்தமுறை கவனம் செலுத்தினால் இன்னமும் சிறப்பாக்கச் செய்ய வாய்ப்புண்டு.

நாங்கள் கூப்பிடும் போது வரவில்லை வெளியில் இருந்து கருத்துச் சொல்வதில் என்ன இருக்கிறது என்று நினைக்கலாம். இனிவருங்காலங்களில் முன்னேறவேண்டும் என்பதற்காகவே இவை கூறப்பட்டன. நண்பி ஒருவரிடம் நீங்கள் பட்டறைக்குச் செல்லவில்லையா? எனக் கேட்டதற்கு, 'எங்கு பார்த்தாலும் ஏதோ ஒரு குழுக்களின் பின்னணியில்தான் இருக்கிறார்கள். அதைவிட்டு வெளித்தளத்தில் இயங்கும் காலத்தில் பார்ப்போம்' என்றார். தண்ணீரில் இருந்து கொண்டு காப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள் என்று கத்துவதிலும் பேசாமல் நீந்துவது எவ்வாறு என்று கற்றுக்கொள்வது அதிக முன்னேற்றத்திற்கு வழிகோலும். ஆண் கருத்தாக்கத்தையும் குழுக்களையும் விட்டு தெளிவான தளத்தில் சிந்தித்தால் இன்னமும் முன்னேறலாம். 'பெண்"ணுக்கான எல்லையும் விரியும் என்பது எனது தாழ்மையான கருத்தாகும்.

இரண்டாவது 'நடுக்கடலில்' நாடகத்தின் கருத்து நன்றாக இருந்தாலும் மேடையாக்கம் முழுமைபெறவில்லை. நீண்ட கதையாடலாகி பொறுமையை எரிச்சலாக்கியது. சிரமப்பட்டு ஒப்பேற்றியிருந்தார்கள். அதுசரிதான் நடுக்கடலில் காட்டப்பட்ட மனித வர்க்கத்திற்குள்ளும் ஒரு பெண்தானும் இல்லைப் போலும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இந்த விருது தொடர்பான பரவலான கருத்தைப் பெறுவதில் வந்த மின்னஞ்சலில் நடந்த உரையாடல் தொடர்

**அசுரா:** என்ன எல்லாம் ஒரு சூதி விளையாட்டுத்தானா? சுறா கவனமாக ஒன்றுக்கு பல தடவை சிந்தித்து எதையும் செய்யுங்க. நீங்கள் ஐயருக்கு இலக்கியவிருது வாங்குவதற்கு என்ன தகுதி இருக்கு என ஒரு கேள்வியை முன்வைத்தீர்களாயின். நீங்கள் கேட்கும் கேள்விக்கு உங்களிடம் பதில் இருக்கிறது விருது யாருக்கு கொடுக்கப்பட வேண்டும் என!! அது யார். அ.மார்க்சிற்கா? பிரேம்-ரமேசிற்கா? சுப்பிரமணிக்கா? மார்க்கண்டனுக்கா? வடிவேலுக்கா? விவேக்கிற்கா? யார் அந்த வெங்காயம், என்பதான பதில் இருக்கும் பட்சத்தில்தானே உனக்கு என்ன தகுதியிருக்கு எனும் கேள்வி எழும். ஐயர் என்ன எழுதி இருக்கிறார் அவர் எழுத்திற்கும் எமது பார்வையும், எமது எழுத்துகளுக்குமான வேறுபாடுகளென்ன?

ஒருவருக்கு விருது வழங்குவதென்றால் அந்த விருது சமூகமட்டத்தில் என்ன மதிப்பை,விளைவை உருவாக்கிறது. அப்படி ஒரு பணியாரம் தேவைதானா? விருது வாங்க என்ன தகுதியெனும்போது விருது என்பது ஒரு புனிதப் பொருளாக கட்டமைக்கப்படுவதையும் கவனத்தில் கொள்ளவும். ஐயரின் எழுத்தை வைத்துத்தான் அவருக்கு கொடுக்கப்படும் விருது வழங்கும் வைபவத்தையும், விருது வழங்குபவர்களையும் பரிசீலிக்கமுடியும், நான் ஐயரைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிறேனே அல்லாது அவர் எழுத்துகள் எதையும் வாசிக்கவில்லை எப்படி எனது எதிர்ப்பை தெரிவிப்பது? தெரியவில்லை.

**கற்சுறா:** நீங்கள் சொல்கின்ற ஒன்று சரி. விருது பற்றிய நமது பார்வை, அதன் மீது நமக்கு என்ன மதிப்பு இருக்கிறது என்பதுதான் அப்படி ஒன்றும் ஒரு புனித சாமனல்ல அது. விருது பற்றி அது எந்தக் கொம்பன் எந்தக் கொம்பனுக்குக் கொடுத்தாலும் உங்களுக்கு இருக்கும் அதே மதிப்பீடுதான் எனக்கும். நான் எந்த ஒரு இடத்திலேயும் பத்மநாப ஐயருக்கு விருது கொடுப்பது சரியா? என்ன தகுதி என்று கேட்கவில்லை. ஆனால் கனடா இலக்கியத்தோட்டம் என்னும் ஆள்தெரியாத குறூப் ஒன்று சுந்தரராமசாமிக்கும் வெங்கட் சாமிக்கும் பத்மநாபஐயருக்கும் அவர்களின் வாழ்நாள் இலக்கிய சேவையைப் பாராட்டிவிருது வழங்கிக் கொண்டிருக்கிறது. இந்த வெங்காயங்கள் தமிழிலக்கியத்தின் முடிசூடா மன்னர்களாக கட்டமைக்கப்படுகிறார்கள். விருது வழங்குவோர் தமது சாதியையும் சாதிசார் இலக்கியத்தையும் புனிதமாக்க மேற்படியானவர்களைக் கௌரவப்படுத்தி இதுதான் தமிழிலக்கியத்தின் விடிவெள்ளி, இவர்களே ஆதர்ஷ புருசர்கள் என்பதாக பதிவு செய்கிறார்கள். இதனை நமக்கு சம்பந்தமில்லாதது என்பதாக விட்டுவிட்டிருக்கமுடியாது. இவர்கள் இதுவரை விருது வழங்கியிருப்பது இந்தியாவில் மிகவும் பிற்போக்குத்தனமான பார்ப்பனீய அரசியலை கையகப்படுத்தி தலித்ததுக்கள், இஸ்லாமியர்கள் என்று அனைத்துச் சிறுபான்மைகளுக்கு எதிராக இயங்கிவரும் காலச்சுவட்டின் பிதாமகன் சுந்தரராமசாமிக்கும், அதையே தனித்து நின்று சாதிப்பேன் என்று கங்கணங்கட்டி சாதித்து வரும் பார்ப்பான் வெங்கட்சாமிக்கும் தான். இப்போது புகலிடத்தில் இதுவரை பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே என்று நாம் எழுதிவந்த லண்டன் பத்மநாபன் விருது பெறுகிறார்.பாசிசப்புலிகளின் புகலிட இலக்கிய சேவகன் என்ற பெருமைக்குரிய லண்டன் பத்மநாபன் தன்னுடம்பிலிருந்து பூணூலைக்கூடக் கழற்றி எறியாதவர். புலி இலக்கியமே புகலிட இலக்கிம் என்று தனது தொகுப்புக்களில் பெருமைகொள்ளும் படியான எழுத்துக்களை பிரசுரிப்பவர். ஐரோப்பிய இலக்கியவாதிகளில் அனைத்து மாற்றுக்கருத்துடையவர்களும் அவரின் தொகுப்பக்களில் எழுதுவதை மறுத்து வந்தவர்கள் நீங்கள் அறிவீர்கள். இந்த ஐயருக்குத்தான் கனடாவில் விருது. இந்த விருது என்பதினூடாக எவ்வகையான மாற்றுக் கருத்துக்கள் கேலி செய்யப்படுகிறது என்பதைக் கவனிக்க வேண்டும். அவற்றை அம்பலப்படுத்த வேண்டும். நாம் இதைச் செய்யவில்லை எனில் வரலாற்றுக் குற்றவாளிகளாவோம். யாரோ யாருக்குக் கொடுக்கிறார்கள் நமக்கு அக்கறை என்ன எனில் இருப்போமாயின்,அவர்களுடைய அரசியல் அது அவர்கள் அதைத்தான் செய்வார்கள் நாம் ஏன் தலையிடுவான் என்று இருப்போமாயின்... நமக்குப் பல விடையங்கள் தெளிவடைய வேண்டும். நா. கண்ணன் இந்தியா ருடேயில் குத்தீட்டி முலை கதை எழுதியதுக்கு நாம் ஏன் துண்டுப்பிரசுரம் அடித்தோம்? இந்தியாருடே இலக்கிய மலருக்கு ஏன் மலந்துடைத்து நிறப்பிரிகை அனுப்பியது? ஏன் இலக்கியச்சந்திப்பு குழுவுடன் நாம் கிடந்து மாரடிக்க வேண்டும்?
ஏனெனில் இவை எல்லாவற்றின் காலங்களிலும் நாம் வாழ்கிறோம். இந்தக் குற்றங்களை நாம் மௌனமாக இருப்பதன் மூலம் ஆதரிக்க முடியாது. ஐயரின் எழுத்தை வைத்துத்தான் அவருக்கு கொடுக்கப்படும் விருது வழங்கும் வைபவத்தையும், விருது வழங்குபவர்களையும் பரிசீலிக்கமுடியும் "நான் ஐயரைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிறேனே அல்லாது அவர் எழுத்துகள் எதையும் வாசிக்கவில்லை எப்படி எனது எதிர்ப்பை தெரிவிப்பது? தெரியவில்லை" என்று எழுதியுள்ளீர்கள். ஒன்று சொல்கிறேன் ஐயர் என்ற பத்மநாபன் தன்வாழ் நாளில் 1980களில் கணையாழிக்கு எழுதிய கடிதத்தைத் தவிர வேறு எதையும் எழுதாதவர் என்று அவரின் ஊர் நண்பர் ஒருவர் கூறினார். அதைவிட இன்னொன்றையும் சொன்னார். திரு.பத்மநாபன் அவர்கள் எதையும் வாசிப்பதில்லை என்றும் சொன்னார். அப்படியாயின் நாம் ஒரேயொரு கேள்வி தான் கேட்கமுடியும். அவர் சிறந்த இலக்கியங்களைத் தொகுத்திருக்கிறார் எனில் எப்படி?

கடைசியாக அசுரா நாம் இந்த விருதுக் கட்டமைப்பை எதிர்ப்பதனூடாக இந்த ஆதிக்க அரசியல் பார்ப்பனீய இலக்கிய மேதாவி மனோபாவத்தையும் வன்னமமாக எதிர்க்க வேண்டும். உங்கள் பதில் என்ன?

**...இன்னும் பதில் பெறப்படவில்லை.**


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


***7 ஆவது பக்கத் தொடர்ச்சி ...*** சொல்லலாம். இப்போது பத்மநாபனுக்குப் பின்னால் ஒட்டியிருக்கும் ஒட்டியிருப்பதை நியாயப்படுத்தும் 'ஐயர்' என்ற சாதிப் பெயருக்கான நமது எதிர்வினையை நீங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். ஒருவனுடைய சாதிவெறி அரசியல் என்பது அவன் சார்ந்த திருமணத்தில் தான் அம்பலமாகும். இதனை அப்பட்டமாக வெளிக்காட்டும் பத்மநாபனுக்கு ஒரு இலக்கிய முகமும் முற்போக்கு முகமும் பொருத்தும் நமது இலக்கிய ஜம்பவான்களது அரசியல் எது?

இத்தகைய பெருமை மிகு மேதகு குணங்கள் குடிகொண்ட ஒருவருக்கு கனடா இலக்கியத்தோட்டம் தனது பெருமைக்குரிய இயல் விருதினை வழங்குகின்றது.

எந்தவொரு விருதை வழங்குவது, பணம் கொடுப்பது என்பவைகளால் நமக்கொன்றும் வந்து விடப்போவதில்லை. ஆனால் இது மகத்தான செயல், இவர்தான் இலக்கியத்தின் புனிதமகான், இலக்கிய முன்னோடி, புலம்பெயர் இலக்கியத்தின் ஆதர்ஷ புருசன், 40வருட இலக்கிய சேவையாற்றிய செம்மல் என்ற கதைவிடுதல் எல்லாம் இனிச் சரிவராது. இந்தப் பெருங்கதையாடல் மூலம் அம்பலப்பட்டுப் போவது கனடா இலக்கியத்தோட்டமும் அதன் பின்னால் ஒழிந்திருக்கும் சாதி அரசியலும் தான். ஆனால் புதிதாக எழுதவருபவர்கள் மற்றும் முற்போக்கு எண்ணம் கொண்டு எல்லாவற்றிற்கும் உதவி செய்யத் துடிக்கும் நண்பர்கள் எல்லோரையும் ஏமாற்றிக் கயிறு திரித்து தமது கும்பமேளாக்களுக்கு அவர்களைப் பயன்படுத்தும் வித்தையை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும். இவை எதையும் புரிந்து கொள்ள முடியாமல் தொடர்ந்தும் அப்பாவித்தனமாய் அவர்கள் ஏதோ செய்கிறார்கள் செய்யட்டும் நமக்கென்ன என்று இருந்தால் எல்லோர் தலையிலும் மிளகாய்தான்.

**பி.குறிப்பு:** இவை எதுவும் காதில் விழாது சுரணையற்ற போக்கில் இந்தப் பார்ப்பனக் காவடிதூக்கிகள் அடுத்த விருது வழங்கலுக்கு ஞானக்கூத்தனையோ மாலனையோ அல்லது நா.கண்ணனையோ தயார்படுத்திக் கொண்டிருப்பார்கள். நாமும் அதனை மறுத்துக் குரலெழுப்பிக் கொண்டிருப்போம்.

---




Open source என்ற திறந்த காப்புச் சொற்கள் உள்ள மென்பொருட்களையே அறிதுயில் ஆதரிக்கிறது. உலகின் மேன்மைக்கு அதுவே வழிவகுக்கும். தமிழ் எழுததுருக்களாயினும் சரி மென்பொருட்களாயினும் சரி சமூகத்தின் நன்மையை பல திசைகளிலும் கருதில் கொள்ளாத வணிக நோக்கத்தை அல்லது அறிவுசார் புலமையை மட்டும் கருதில் கொண்ட எவ்வித கண்டுபிடிப்பும் மனித குலத்திற்கு கேடானது. குறிப்பாக சிறுபான்மைகளுக்கு எதிரானதும் கூட. அந்தவகையில் நாங்கள் எப்பபாதும் திறந்த காப்புச் சொற்கள் உள்ள மென்பொருட்களையே ஆதரிக்கிறோம். லினக்ஸ்- Linux, மோசில்லா-ஃபயர் ஃபொக்ஸ் Mozilla -fire fox, தண்டர் பேட் Thunder bird ஆகியவை குறிப்பிட்டுச் சொல்லக்கூடியன. அந்தத்தத் தளங்களில் இவை இலவசமாகவும் கிடைக்கின்றன. அத்துடன் வன்பொருட்களிலும் பெருங்கதையாடலுக்கு உட்படாதவை சிறந்தவை என்பது எங்கள் அணுகுமுறை. அது தொடர்பான நகைச்சுவைப் படமே அருகில் உள்ளது.

---

**தெரிதாவின் பேட்டி தொடர்ச்சி ....**

*4.* அடைப்புக்கள் மொழிபெயர்ப்பாளரால் விளக்கம் தரும் நோக்குடன் சேர்க்கப்பட்டன.

*5.* just opposit

*6.* பனுவல்கள் நம்மீது ஏற்படுத்தும் வலிந்த திணிப்பை குறிக்கும்.

மொழிபெயர்ப்பிற்காக எடுக்கப்பட்ட பாடம்:

'Deconstruction and the other: Interview with Richard Kearney. 'Dialogues with Contemporary Thinkers. Ed. Richard Kearney. Manchester: Manchester University Press, 1984. 105-126.

***15 ஆவது பக்கத் தொடர்ச்சி ...***

வெளியிட மறுப்புத் தெரிவித்ததில்லை.

மேற்குறிப்பிட்ட மூலங்களில் இருந்து திரு.பத்மநாபனின் இலக்கியப்பணி யாருக்கானது என்பதற்கு வியாக்கியானம் தேவையில்லை. பத்பநாபனின் இவ்வாறான கடந்த கால இலக்கிய சேவைக்கு கனடா இலக்கியத் தோட்டம் இயல்விருது கொடுப்பதாக காலம் பத்திரிகை அறிவித்துள்ளது. சந்தோசப்பட்டுள்ளது. இதன் பின்னணியில் வைத்தே விருது கொடுப்பவர்களை நாம் அடையாளம் காண முடிகிறது. இந்தப் பாசிசப் போக்கின் தொடர்ச்சியை அம்பலப்படுத்த முடிகிறது.

எம்.ஆர்.ஸ்ராலின் - பிரான்ஸ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நீள நினைதலும்
நித்தலும் கைதொழுதலுமாய்
பாழ்பட்டாகிவிட்டது பொழுதுகள்
எதையும் எட்டத் துணைதரவில்லை!
மதவழிகாட்டல்களை
ஊடறுத்துப் பார்த்ததில்
பார்ப்பனீயத்தின்
பூச்சாண்டி வித்தைகள்
மாத்திரமே வெளிச்சம்.
சொன்னதைக் கேட்டு
கேட்டதைச் சொல்லி
மாறி மாறி ஏய்த்ததில்
உக்கி உயிரற்றுப் போனது வாழ்தல்.
இருத்தலின் மகத்துவம் அறியாமல்
வெறுத்தல் விலகல்
சுயத்தை வதைத்தல் என்று
ஆங்கார வேஷ மதப்பிரதாபங்கள்
ஐயர் உயர்த்தும் பஞ்சாராத்தியில்
எல்லாம் உயர்வதாய் எண்ணி அலறும்
ஆறாம் அறிவைத் தேறாத ஞானப்பழங்கள்
அரைமணிநேரம் குளித்து விட்டபோதும்
காது கழுவ மறந்த
விழிப்பற்ற வாழ்வில்
காணமறந்ததெல்லாம்
புல்நுனிப் பனித்துளியை பூவை விண்மீனை

**- ஆரணியன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மனித வர்க்கமென்றால் அது மனிதனின் வர்க்கமல்லவா? ஆளையாள் பிடித்து உண்ணும் நிலைக்கு இன்மும் பெண்கள் வரவில்லைப் போலும்.

அடுத்து என் மௌனத்தின் மொழிபெயர்ப்பு நாடகத்தை பலர் ஏற்கனவே ஆவலுடன் எதிர்பார்த்திருந்தது போன்று காணப்பட்டது. பேசப்பட்ட வீர வசனங்களுக்கு கைதட்டல் அமோகமாக இருந்தன. இதுதான் வரலாறு, எல்லா மேதாவித் தனங்களும் இப்படியான செயல்களினாலேயே கட்டமைக் கப்பட்டு வந்திருக்கின்றன, அவற்றிற்குரிய காலங்களில் நீ இருந்தா லென்ன, நான் இருந்தாலென்ன இதைத்தான் செய்திருப்போம் என்பதை ஆமோதிப்பதாகவும் இருந்தது. ஆதலால் இது ஒரு உலகப்பொதுமையான கருத்தைக்கூறிய நாடகம். அதன் தளத்தில் இயங்கவல்லது என்பதாகவும் காட்டப்பட்டது

நாடக நெறியாள்கையில் ஏனையநாடகங்களைவிட சில காட்சிகள் நன்றாக இருந்தன. கோழியறுப்பு பார்வையாளரை அறுத்தது. நடிகரின் நடிப்பை குழந்தைகள் கோமாளியாக எண்ணி சிரித்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் இவ்வளவு குருதியையும் கொலையையும் நாடகத்தில் விலாவாரியாக விபரிப்புச் செய்ய இருக்கின்றோம் என்று முன்னரே அறிவிப்புச் செய்திருந்தால் வயது வந்தோருக்கு மட்டும் என்பதாக குழந்தைகளை வெளியே விட்டுவிட்டு வந்திருப்போம் என ஒரு பெண்மணி ஆதங்கப்பட்டார். கபாலம் பிளப்பது போர்க்கலை பயின்றவர்களுக்கு எளிது போலும். மேடையில் மிகச்சாதாரணமான விடயமாகக் காட்டி யிருந்தார்கள்.

ஆங்காங்கே விசிறப்பட்டிருந்த நகைச்சுவைச் சொல்லாடல்களில் வழமைபோலவே பெண்கள் பற்றியும் வந்துபோனது. அதற்கான கைதட்டல்களும் சிரிப்பலைகளும் நாடகம் முழுமைபெற உதவிசெய்திருந்தன. பெண்கள் உடல், அவர்கள் வாழ்க்கைமுறைகள் பற்றி ஏதாவது ஒரு நகைச்சுவையை தொடர்ந்து பயன்படுத்தி வருகிறார்கள். மாற்றுக்கருத்தாளர்கள் தொடக்கம், மறுக்கப்பட்ட கருத்தாளர்கள், ஒடுக்கப்பட்ட குரலாளர்கள் என்று எல்லோரும் பயன்படுத்தி, தங்கள் 'ஆண்நிலையை' அறுதியிட்டு வருகிறார்கள் என்பதற்கு 'மௌனத்தின் மொழிபெயர்ப்புகள்'-களும் வெளிகாட்டி இருக்கின்றன-இருக்கின்றது.

கனவுபற்றி புலம்பிக்கொண்டிருக்கும் கணவனுக்கு மனைவி கூறுகிறார் 'நான் சிங்கிள் மம் அடிச்சுப்போடுவன்' என்று மேடையில் நகைச்சுவை வசனம் பேசப்பட்டது. 'சிங்கிள் மம்' என்ற சொல்லாடலும் பெண்ணின் நிலையில் அது தரும் விளக்கங்களும் மாற்றுக் குரலாயொலிக்கும் இந்த நாடக ஆசிரியர் சக்கரவர்த்திக்குத்தான் விளங்கவில்லை பிரபல நடிகையும், திரைப்பட இயக்குநரும், எழுத்தாளரும், பெண்ணிய வாதியுமென அறியப்பட்ட, அப்பாத்திரத்தில் நடித்த சுமதிக்கு இந்தத் தந்திரங்கள் விளங்காது இருந்திருக்கமுடியாது. சில வேளைகளில் நெறியாள்கை செய்தவர் அதை அனுமதிக்காது விட்டிருக்கலாம். கருத்தாக்கங்களுக்கும் நடைமுறை வாழ நிலைக்கும் இடைவெளி இவ்வளவு தூரம் என்பதே வருத்தத்தி ற்குரியது.

இவை பற்றிக் கண்மூடித்தனமான எண்ணகங்களைக் கொண்டிருக்கும் கலைஞர் குழாமே தெரியாது விட்டால் தெரிந்துகொள்ளவும்.

'சிங்கிள் மம்' (Single Mom)-தனியாக வாழும் தாய் என்பதிலிருந்து 'சிங்கிள் பேரன்ற்' (Single Parent)- தனியாக வாழும் பெற்றோர் எனக்குறிக்கும் சொல்லாடல் நடைமுறையில் வந்து நீண்டகாலமாகிவிட்டது. பெண்கள் வாழ்நிலையில் இயங்கும் பல தளங்களில் வைத்து இச்சொல்லாடலையும் அதன் சமூக வரலாற்று பின்புலங்களையும் இன்னொரு சந்தர்ப்பத்தில் விரிவாக தருகின்றேன். தற்போதைக்கு குறைந்தது இவற்றையாவது கூற முற்படுகிறேன்.

இச்சொல்லாடல் குறிக்கும் வாழ்நிலை புலம்பெயர்ந்து இங்கு வாழும் பெண்களுக்கு முற்றிலும் புதியது. வழமையான சமுதாய முறைமைகளிலிருந்து வேறுபட்டதான ஒரு பாய்ச்சல். தன்னையும் சமூகச் செயற்பாட்டையும், வரலாறுகளையும் புரிந்து கொண்டவளுக்கு இவ்வாழ்வு நடைமுறைச் சிக்கல்களுக்கு மேலாகச் சுவாசிக்கக் கூடிய சுதந்திரம். இதுவரை காலம் பெண்கள் பேசிவந்த விடுதலை பற்றிய உண்மைத்தளம். கல்வி, குடும்ப ஆளுமை, குழந்தைகள் மீதான உரிமை, சொந்தமாக சிந்தனை-செயற்பாடு, தன்மீதான அதிகாரம் உரிமை, ஆண்களுக்கென்றான செயல்களை ஆற்றுதல் எல்லாவற்றையும் கொடுக்கக்கூடியது. 'மனைவி' என்ற பதம் புலப்படுத்தும் நெருக்கடியிலிருந்து இவ்வாழ்க்கைமுறை விலக்குப்பெற்றது. இதன்படி எழுதும் வாய்ப்பு, பேசும்வாய்ப்பு, நாடகங்கள் போன்ற கலைகளில் தங்களை ஈடுபடுத்தக்கூடிய சூழ்நிலை போன்றவை-களைப் பல பெண்களுக்கு இவ்வாழ்க்கைமுறை பெற்றுக் கொடுத்திருக்கின்றது.

ஆனால் இவை எவை பற்றியும் அறிய வாய்ப்பில்லாது வெளியே கால் வைத்தால் வடக்கெது தெற்கெது என்று தெரியாது வாழ்ந்தவர்களுக்கு இது ஆரம்பத்திற்கு வழிதெரியாக்காடு. இதில் பழக்கப்பட்டு வாழ முன்னர் அவர்கள் படும் துன்பமும் அவலமும் கண்ணுக்கென்ன, மேதாவிகளின் புத்திகளுக்கே உணரமுடியாத விடயம். ஒருத்தி குழந்தைகளுடன் தனியே வாழ முற்படுவதென்பது நினைப்பதுபோன்று அவ்வளவுக்கொன்றும் எளிதான விடயமல்ல. அது பொருளாதரம், தமிழ்சமூகம், புதியநாடு, மொழி, சூழல், சட்டம் போன்ற எந்த அடிப்படையிலாயிலும் வாழ்க்கை வெறுத்துப் போகுமளவிற்கு 'சிங்கிள் மம்' அடிக்கும் வழி துன்பம் நிறைந்தது.

ஹகணவனின் சூதாட்டப் பழக்கத்தினால் கடன்காரர்களின் தொல்லை தாங்காது தொலைபேசி மணிச்சத்தம் கேட்கும் போதெல்லாம் பயந்து நடுங்கிக் கொண்டிருந்தாள் ஒருத்தி. வாடகை கட்டவில்லையென வீட்டுச் சொந்தக்காரன் குழந்தையையும் அவளையும் கொட்டும் பனியில் தெருவில் விட்டபோது அவளைக் காப்பாற்றியது நகைச்சுவைக்குள்ளான அதே சொல்லாடல்தான். முன்னிருக்கும் பாடசாலையைத் தவிர கனடாபற்றிய பூகோள, சமுதாய, மொழி அறிவு எதுவுமில்லாத அதே பெண் இன்று தனியாக அனைத்துக் காரியங்களையும் ஆற்றுகின்றாள். அதற்கும் காரணம் 'இந்தச்சிங்கிள் மம்'களே.

மாற்றுக் கருத்துக்குழுக்களுக்கு இணையான தோழிகளாக, தந்திரங்களை விளங்கிக் கொள்ளாது அவர்களால் அதிகம் பயன்படுத்தப்படுவதும் இந்தச்'சிங்கிள் மம்'களே. கனடாவில் வறுமைக்கோட்டின்கீழ் வாழ்பவர்களின் அதிகமானவர்கள் நாடகத்தில் நகைச்சுவைக்குள்ளாக்கப்பட்ட குறிப்பிட்ட இவர்களே. தொடர்ச்சி 32 ஆவது பக்கம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வரலாறு வழி புனைவும் புனைவு வழி வரலாறும்

**கற்சுறா**

**த**மிழ் இலக்கியச் சூழலில் அனைவரது (புகலிடத்திலும் தமிழகத்திலும்) கவனக் குவிப்பையும் புல்லரிப்பையும் பெற்ற இரண்டு பிரதிகள் பின்வருவன. **"ஈழப்போராட்டத்தில் என் சாட்சியம்"** என்ற புஸ்பராசாவின் வரலாறும் **"ம்"** என்ற சோபாசக்தியின் நாவலும் பேசுகின்ற தளங்களின் காலங்களில், நம்மில் அனேகர் அந்த இடத்திற்கு வாழ்க்கைப்பட்டவர்கள் என்பதால் நமது கவனத்தைப் பெறுகின்றன. ஆனாலும் ஈழவிடுதலைப் போராட்டப் பக்கங்களில் ஒற்றைப் பார்வையை முன்னிறுத்தும் வரலாறும் பன்முகப்பார்வையை முன்னிறுத்தும் நாவலும் பின்னிக் கொள்ளும் இடங்களில் ஒன்றினை ஒரு முறை ஞாபகம் கொள்கிறோம். இப்பிரதிகளின் தேவை தேவையின்மை என்பதற்கப்பால் ஒரு பிரதி இன்னொரு பிரதியின் விமர்சனமாக நம்முன் விரிவதைச் சொல்லத்தானே வேண்டும்.

| எழுதியவர் | வெளியீடு | முதற் பதிப்பு | விலை | காப்புரிமை | பக்கங்கள் |
|---|---|---|---|---|---|
| **சி.புஸ்பராசா** | அடையாளம் | டிசம்பர் 2003 | 275 இந்திய ரூபாய் | மீரா புஸ்பராசா | 632 |
| **சோபாசக்தி** | கருப்பு பிரதிகள் | அக்டோபர் 2004 | 80 இந்திய ரூபாய் | சோபாசக்தி | 168 |

"ஈழப்போராட்டத்தில் என் சாட்சியம்" பக்கம் : 406-407

*" சுமார் 47 பயணிகளுடன் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த வி.ஐ.பி எக்ஸ்பிரஸ் என்னும் பஸ் 1984 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11ம் திகதி அதிகாலை இரண்டு மணிக்கு வவுனியாவை நெருங்கிக் கொண்டிருக்கையில் ரம்பேவ எனும் இடத்தில் ஆயுதம் தாங்கிய ஆறு இராணுவத்தினரால் மறிக்கப்பட்டது. பஸ்சுக்குள் ஏறிய இராணுவத்தினர் பயணிகள் தமிழர்கள்தான் என உறுதிப்படுத்திய பின்னர், பஸ்ஸை வவுனியா மன்னார் வீதியில் உள்ள 6வது மைல் போஸ்ட்டுக்கு கொண்டு சென்றனர். அங்கு அனைத்துப் பயணிகளையும் கீழே இறக்கி வரிசையாக நிற்கவைத்து சுட்டதில் 15 பேர் அந்த இடத்திலேயே கொல்லப் பட்டார்கள். இரண்டு இளம் பெண்கள் பாலியல் வன்முறைக்கு பலியானர்."*

"ம்" பக்கம்: 129

*" 1984 ஆகஸ்ட் பதினோராம் திகதி கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்து கொண்டிருந்த பேருந்து வண்டியை இராணுவத்தினர் காட்டுக்குள் மறித்து வெட்டியதில் 16 பயணிகள் இறந்து போனார்கள். இவர்களில் மூவர் குழந்தைகள்."*

"ஈழப்போராட்டத்தில் என் சாட்சியம்" பக்கம் : 407 - 408

*"1985ம் ஆண்டு மே மாதம் 9ம் திகதி படைகளால் வல்வெட்டித்துறை சுற்றி வளைக்கப்பட்டு சோதனையிடப் பட்டபோது விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப் பட்ட தாக்குதலில் 10 இராணுவத்தினருடன் ஒரு இராணுவமேஜரும் கொல்லப்பட்டதுடன் சிலர் காயமடைந்தனர்... வல்வெட்டித்துறை, பொலிகண்டி, உடுப்பிட்டிப் பகுதிகளில் 42க்கும் மேற்பட்ட பொதுமக்களை இராணுவம் கொன்றொழித்தது. 14 வயதுக்கும் 17 வயதுக்கும் இடைப்பட்ட 25 இளைஞர்களை படையினர் கைது செய்து அனைவர் கைகளும் கட்டப்பட்டு சனசமூக நிலையம் ஒன்றுக்குள் விட்டுப் பூட்டிய நிலையில் உள்ளே கைக்குண்டு வீசிக் கொலை செய்தனர்."*

"ம்" பக்கம்: 129

*"1985 மே ஒன்பதாம் திகதி வல்வெடிட்டித்துறை நூல் நிலையத்தின் உள்ளே அய்ம்பதுக்கு மேற்பட்ட இளைஞர்களை அடைத்து வைத்த இராணுவத்தினர் பின் இளைஞர்களோடே நூல் நிலையத்தை குண்டு வைத்து தகர்த்தனர்"*

இந்தப் பிரதிகள் இப்படி முரண்படுவது நாவலுக்கும் வரலாற்றுக்குமானது என்று சொல்லி விட்டுவிட முடியாது. இவர்களிருவரும் ஆணித்தரமாக பல தளங்களில் தங்கள் வாதங்களை முன்வைப்பவர்கள். இந்த இரு பிரதியாளரும் தமிழகத்திற்கு இலக்கிய விஜயங்களின் மூலம் கல்வி புகட்டி வருபவர்கள். தமிழகப் பெரும் பத்திரிகைகளின் புலம்பெயர் வாரிசுகள். இப்படியிருக்கையில்

இவர்களின் வரலாற்றுத்திரிபு அல்லது திரிபு வரலாறு முன்னால் வந்துவிடும் நிலைமை பரிதாபமானதுதான்.
ஒரு பகிடிக்காக இவர்கள் இருவரும் இலங்கை இராணுவத்தினருக்கு எதிராக மனித உரிமை தொடர்பான வழக்கு தொடுக்கிறார்கள் என்று வைத்துக்கொண்டால், வழக்கின் நிலை என்னவாக இருக்கும். விசாரணைக்கே எடுத்துக் கொள்ளப் படாமல் தள்ளுபடி செய்யப்படும் நிலைதான். இவர்களின் நூல்களில் இதைப்போல எழுதுவதற்கு, எடுத்துக் காட்டுவதற்கு இன்னும் நிறைய இருக்கிறது.

"ஈழப்போரட்டத்தில் என் சாட்சியம்" நூலிற்கு பரிசில் இலக்கியக்காரர்கள் மறுப்பு எழுதினார்கள். அதன்போது சோபாசக்தியிடமும் எழுதித் தரும்படி கேட்கப்பட்டதாம். தான் 175 பக்கத்தில் புஸ்பராசாவுக்கான பதில் தயாரித்துக் கொண்டிருப்பதாக நண்பர் சோபாசக்தி கூறியிருந்தாராம். அந்தப் பதில்தான் இந்த நாவலோ என்னவோ.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

***30 ஆவது பக்க தொடர்ச்சி...***

பெண்கள் காப்பகத்தில் இருக்கும்போது உறவினர்களால் பழைய வாழ்க்கைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டு அதனால் அங்கே தற்கொலைக்கு முயற்சிசெய்து, குழந்தைகளை சிறுவர்நலப் பாதுகாப்பு அமைப்பிடம் பறிகொடுத்த துன்பங்களும் இவர்களுக்கே.

நடுநிசியில் தப்பிஓடி காப்பகத்தில் நுழைந்து 'சிங்கிள் மம்' அடித்தபோதும் உறவுகள் குடும்பமானத்தைக் காட்டி கட்டாயப்படுத்திக் கூட்டிச் சென்றபோது, 'இனிமேல் தற்கொலைதான் முடிவு' என்று கூறிச்சென்ற நிலையும் இவர்களுக்கே.

நள்ளிரவிலும், கொடுங்குளிரிலும் ஓடிச்சென்று உயிரையும், எஞ்சியிருக்கும் வாழ்வையும் காத்துக்கொள்ளப் புகலிடம் கொடுப்பதும் இச்சொல்லாடலே.

இன்னும் இவர்களின் வாழ்கை நிலைகளின் எடுத்துக் காட்டுக்களை அடுக்கிக்கொண்டே போகலாம். சிலர் நினைப்பது போல இவர்களுக்கு பணத்தை அரசாங்கம் ஒன்றும் கொட்டிக் கொடுப்பதில்லை. இந்த எண்ணத்தால் ஏற்பட்ட பொறாமையிலும் பலர் வாடக்கூடும். வீட்டு வாடகையைப் பொறுத்து, இரு குழந்தைகளுடன் வாழும் பெண்ஒருத்திக்கு 530 - 900 டொலர்களுக்குள்ளாகவே பணம் வழங்கப்படுகிறது. இதனாலேயே பாவிக்கப்பட்ட பொருட்களை விற்கப்படும் கடைகளில் இவர்கள் நுகர்வு அதிமாக இருக்கும்.

இவ்வாறான நெருக்குதல்களுக்கெல்லாம் முகம் கொடுத்தும் மீளவும் வாழ்நாளில் தன்கனவுகளை வடிவமைக்க இவ்வாழ்முறையே பெண்ணுக்கு களங்கொடுக்கிறது. இதனால் ஆணுடன் இணைந்து வாழும் பெண்ணால் இவையெல்லாம் முடியாதென்பல்ல. அது அமையும் துணையைப் பொறுத்தது. ஒப்பீட்டளவில் இவ்வாறு பெண்ணுக்கு களம் கொடுக்கும் வீதம் மிகமிகச் சொற்பமே. குறிப்பிட்ட எல்லைக்குள் பழக்கப்படாது வாழ்க்கையின் எல்லாப் பரப்புக்களிலும் உலாவர 'சிங்கிள் மம்களுக்கு சந்தர்ப்பம் அதிகம். இதற்குமப்பால் தாய்வழிச் சமுதாயம் பற்றி அடித்துக்கொள்ளும் கருத்தாளர்களுக்குள் நடைமுறையில் ஒரு வகையான தாய் வழிசார் சமுதாய அமைப்புக்கு வழிகோலுவதும் இவ்வாறாக நகைச் சுவைக்குட்பட்ட தாய்மார்களின் வாழ்க்கையே.

ஆகமொத்தத்தில் இங்கே எந்தநிலையில் இவர்களின் வாழ்க்கை கேலிக்கும், கிண்டல்களுக்கும் உரியாதாகின்றது. மனிதாபிமானப் பண்புகள் கொண்ட எவரும் இதற்குப் பின்னராவது நடந்தவை களுக்காக மன்னிப்புக்கேட்க முன்வருவர். மாற்றுக்கருத்துக்களை மூச்சுக்கருத்துக்காளாகக் கொண்டிருக்கும் சக்கரவர்த்தியாருக்கு எப்படியோ? குறைந்த பட்சம் சமுதாயத்தில் கூடவாழும் பெண்களின் வாழ்க்கைமுறைகளை மதிக்கவோ, அவைபற்றி அக்கறைப்படவோ முன்வரவில்லை இதில் கொலைகளைக் கண்டிக்கின்றோம், சரியா? பிழையா? என்ற கூப்பாடு வேறு. சரியையும் பிழையையும் காலமும், பொழுதும், இடமும், வரலாறும் தீர்மானிப்பன.

எழுத்தாளப் பெருமக்களே, கலைஞர்கள் பெருந்தகைகளே, கருத்துக்காக உயிர் கொடுக்கும் தியாகிகளே, ஏதாவது கொஞ்சம் வாசிப்பீர்களானால் எல்லோருக்கும் பயனுள்ளதாக அமையும். இல்லையேல் அருகிலிருக்கும் பெண்கள் காப்பகங்களுக்கோ, இவை சார்ந்த கருத்தரங்குகளுக்கோ சென்று நடைமுறைகளை விளங்கி வருவீர்களாயின் அது உங்களதும், உங்கள் குழந்தைகளதும் எதிர்காலத்திற்கு மிகவும் நன்மை பயக்கும். புரியாதவர்களுக்கு ! பெண்ணுரிமை என்பதும் மனித உரிமையே!

இவை யெல்லாவற்றுக்கும் மேலாக, இது, மூன்றாவதாக நடைபெற்ற நாடகத்தில் வந்த பிரச்சனையாகும். இதுபற்றி குறைந்தது கருமைய எல்லைக்குள் இருப்பவர்களாவது- பெண்கள் பட்டறையினராவது- சிந்தித்திருக்கவேண்டும். பட்டறையில் கவனம் செலுத்திய காரணத்தால் பெண்கள் இதைக் கண்டு கொள்ள வாய்ப்பிருந்திருக்காதுபோலும். குறைந்த பட்டசம் இரண்டாவது நாள் நிகழ்த்துகையிலாவது இதை தவிர்த்திருக்க வாய்ப்பிருந்துள்ளது.

அறிவிப்பு:

**அறிதுயிலுக்கென** தனியான ஆசிரியர் உரை தேவையில்லை என்பது ஆசியரியர் கருத்து. அதை தெளிவாக்க விரும்புகின்றோம். எழுதப்படுபவை ஆசிரியர்களுடன்பாட்டுடன்தான் பெரும்பாலும் வருகின்றன. மறு கருத்து இருக்குமாயின் தொடரும் விவாதங்களில் ஆசிரியர்களே பங்கேற்பார்கள். எனவே ஆசரியர் கருத்து அல்லது உரை என்ற பெயரில் எதுவும் அறிதுயிலில் இருக்காது. www.arituyil.com மூலம் பழைய இதழ்களைப் பார்க்கலாம். அனைவரும் எழுதலாம். மாற்றுக் கருத்திருப்பின் தொடர்பு கொள்வோம். இல்லையேல் வெளியிடுவோம். இணையத்தில் அச்சில் வராத பிற பாடங்களும் (Text) உள்ளன.

**Arituyil**

(The Journal of literature from Tamil Community of Toronto)

**ஆசிரியர் குழு**

கற்சுறா

மஞ்சலுணா கோமதி

எஸ்.வி.ர.ஃபேல்

**web:** www.arituyil.com

**e-mail:** arituyil@hotmail.com

**ISSN:** 1710 - 6133



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

